RE/MAX REALTRON BLUE FORCE
TEAM BLUE FORCE
BUYING · SELLING · LEASE · PRE CONSTRUCTION
வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
DIRECT 416 2888882
கவாஸ் - சோம சச்சிதானந்தன்

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Reality Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
வீடு விற்பனை முகவர்
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANE COVERAGE
AUTO, HOME, BUSINESS
20+ ஆண்டுகள் அனுபவம் பெற்ற நம்பகமான
காப்புறுதி முகவர்! சரியான காப்புறுதி!
குறைந்த காப்புறுதி கட்டணம்!
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710
jeya.sivasothy@aaxelinsurance.com www.aaxelinsurance.com
AAXEL



மலர்:- 30, 18 ஆகஸ்ட் 2023 இதழ்:- 14

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600


## போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்!
## உறவுகளே! ஆகஸ்ட் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

# தேசியத் தலைவர் பிரபாகரன் பற்றிய சர்ச்சைகள் ஏன்?

யுத்தம் முடிவுற்று 14 வருடங்களாகின்றன. இந்தக் காலப்பகுதியில் விடுதலைப் புலிகளின் இயக்கத்தின் தலைவர் பிரபாகரன் மட்டுமல்ல அந்த அமைப்பின் முக்கிய தளபதிகள் எவருமே உயிருடனில்லை என்று இலங்கை அரசு அறிவித்திருந்தது. (3ம் பக்கம் பார்க்க)



## பிரபாகரன் குடும்பத்தை வைத்து அரசியல் செய்யாதீர்கள் முன்னாள் இராணுவத்தளபதி



## ஒன்றிணைந்த நாட்டிற்குள் “13” அதிகாரப் பரவலாக்கம் பௌத்த தேரர்கள் மத்தியில் பகிரங்கமாகத் தெரிவித்த சஜித்

## இவர்களுக்காக 29 ஒக்டோபர் 2023 இன்னிசை மாலையும் இராப்போசன விருந்தும்




NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
office@nishanthanlaw.onmicrosoft.com
Fax 1-800-878-1348
www.nishanthanlaw.com

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

BASKARAN SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE REALTY INC. BROKERAGE
3-1286 Kennedy Rd, Toronto, ON M1P 2L5
Tel: (416) 270-1111
Fax: (416) 270-7000
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com

GT Brokers
Protect You & Your Family
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Independent Insurance Advisor
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund
Desjardins Manulife Foresters

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8
*INDEPENDENTLY OWNED AND OPERATED

உங்கள் உறவுகள் எங்களால் இணைகிறது
15 வருடங்களுக்கு மேலாக
உங்களோடு நாங்கள்
24/7 365
AERO COURIER
Fast & Secure World Wide Service
416.292.0444
151 Nashdene Rd, Unit 01, Scarborough ON, M1V 4C4

BUY/SELL HOUSES
ARUL THANINAYAGAM
Sales Representative
Direct : 416-624-7971 Office : 416-298-3200
Flexible Commission
HOMELIFE TODAY REALTY LTD. BROKERAGE

KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

“ஒரு முகவர் இரு சேவைகள்”
“One Broker Two Services”
Roshan Wignarajah
Real Estate Sales Rep./ Mortgage Broker
416-716-5946
rwignara@gmail.com
RE/MAX ROYAL PROPERTIES
Phone: (416) 321-0110
MORTGAGE ALLIANCE
1-877-366-3487

THINKING OF

# SELLING OR BUYING A HOME?

# www.AgentSiva.com

*Your neighborhood sales representatives*



**Siva Kandiah**
Sales Representative
Dir: 416-301-9540
sivakandiahhome@gmail.com

**Team SIVA**
WILL BRING THE BEST RESULTS!

**Piravien Siva**
B.Comm. Sales Representative
Dir: 647-221-5220
piravien@gmail.com



20 Years Real Estate Experience


**HomeLife Today Realty Ltd.,**
Brokerage. INDEPENDENTLY OWNED AND OPERATED
*Listing Agent's Commission plus 2.5% Buyer's Agent commission- Conditions apply

HOMELIFE HIGHER STANDARDS

Bus: 416.298.3200
11 Progress Avenue, Suite 200, Toronto, ON. M1P 4S7
NOT INTENDED TO SOLICIT PROPERTIES ALREADY UNDER CONTRACT

• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY

### Simcoe St N & Conlin Rd



**Oshawa** **$314,900**
Bachelor/Studio: 1 Washrooms: 1
Condo Steps To The University

### Tecumesh Rd E & Hall Ave




**Windsor** **$349,000**
Bedrooms: 3+3 Washrooms: 4
Perfect For Investors

### Markham & Eglinton



**Scarborough** **$529,900**
Bedrooms: 2 Washrooms: 2
Location!! Location!! Location!

### Dundas/Hurontario St



**Mississauga** **$599,000**
Bedrooms: 3 Washrooms: 2
High Demand Layout Within Building

### Bramalea Rd & Queen St



**Brampton** **$590,000**
Bedrooms: 3+1 Washrooms: 2
Finished Basement

### Lawrence & Morningside




**Scarborough** **$629,900**
Bedrooms: 3 Washrooms: 1
Townhouse W/Large living area

### York St / Bremmer Blvd



**Toronto** **$610,000**
Bedrooms: 1+1 Washrooms: 1
Easy Access To Union Station

### Markham Rd & Denison



**Markham** **$635,999**
Bedrooms: 1+1 Washrooms: 1
Low Maintenance Fees.

### Taunton & Ritson



**Oshawa** **$699,000**
Bedrooms: 3+1 Washrooms: 3
Upgraded floors throughout the home

### Main St. E & Russell St.



**Southgate** **$999,000**
Bedrooms: 4 Washrooms: 3
3063 Sq Ft Bright & Spacious Home

### Meadowvale & 401



**Scarborough** **$995,000**
Bedrooms: 3+2 Washrooms: 2
Brand New Entertainment Enclosure

### Brimley Rd / St. Clair Ave



**Scarborough** **$1,224,900**
Bedrooms: 3+1 Washrooms: 4
All Renovated Washrooms

### Meadowvale / 401



**Scarborough** **$1,799,995**
Bedrooms: 4+3 Washrooms: 5
Extensively Renovated

### Bayview & Major Mac



**Richmond Hill** **$1,499,900**
Bedrooms: 3+1 Washrooms: 4
Lots Of Upgrades!

### 9th Line/14th Ave



**Markham** **$1,799,000**
Bedrooms: 4+1 Washrooms: 4
Newly Renovated Luxury Home

### Commercial/Retail




**Grey Highlands** **$7,200,000**
Dollarama And Tim Hortons.
Newly Built Tim Hortons Building

# PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!

**EELANADU**
**105 DINSDALE DR**
**WOODBRIDGE - ON**
**L4H 2M4 - CANADA**

**416 841 9600 / 905 653 3000**
**eelanadu1993@ gmail.com**


# தேசியத் தலைவர் பிரபாகரன் பற்றிய சர்ச்சைகள் ஏன்?

யுத்தம் முடிவுற்று 14 வருடங்களாகின்றன. இந்தக் காலப்பகுதியில் விடுதலைப் புலிகளின் இயக்கத்தின் தலைவர் பிரபாகரன் மட்டுமல்ல அந்த அமைப்பின் முக்கிய தளபதிகள் எவருமே உயிருடனில்லை என்று இலங்கை அரசு அறிவித்திருந்தது.

இது தொடர்பில் ஆரம்பத்தில் தடுமாற்றங்களை வெளியிட்டவர்கள் கூட காலப்போக்கில் அமைதியடைந்தனர். தலைவர் பிரபாகரன் இல்லையென்றாலும் கூட, அவர் இல்லையென்பதை முன் வைக்கக்கூடாது.

கடவுள் இருக்கின்றாரென்று எவ்வாறு ஒரு பக்தன் நம்புகின்றானோ, அவ்வாறானதோர் அணுகுமுறையில் தான் இந்த விடயத்தை அணுக வேண்டுமென்றே புலம்பெயர் சூழலிலுள்ள ஒரு தரப்பினர் செயல்பட்டனர்.

இவ்வாறானதொரு சூழலில் தான் தமிழ்நாட்டில் வாழும் ஈழ ஆதரவாளர் பழ. நெடுமாறன் இந்த ஆண்டு ஒரு புதிய கதையை கூறினார். தலைசர் பிரபாகரன் உயிருடன் இருக்கிறார் என்றும் அவர் தமிழீழ விடுதலைக்கான திட்டத்தை அறிவிப்பார், அவர் விரைவில் வெளிப்படுவாரெனவும் தெரிவித்திருந்தார்.

கூடவே, அவரின் குடும்பத்துடன் தனக்கு தொடர்பிருப்பதாகவும் தெரிவித்திருந்தார். இதன் போது, நெடுமாறனுடன் காசியானந்தனும் இருந்தார்.

இதனை எதிர்த்தவர்களோ, புலம்பெயர் சூழலில் பணம் சம்பாதிப்பதற்காக இவ்வாறான முயற்சிகளில் சிலர் ஈடுபடுகின்றனர் எனக் குற்றஞ் சாட்டினர்.

தற்போது, நெடுமாறனின் இரண்டாம் பாகம் அரங்குக்கு வந்திருக்கின்றது. வழமைபோல் இப்போதும் முன்னரைப் போன்றே குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன. ஆனால் இம்முறை, விடயம் சற்று மாறுபட்டதாக இருக்கின்றது.

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவரின் மனைவி மதிவதனியின் சகோதரி தான் மதிவதனி மற்றும் அவரின் மகளை சந்தித்ததாகவும் அவர்களுடன் உணவருந்தியதாகவும் அத்துடன் பிரபாகரனும் நலமாக இருக்கிறார் என்றும் கூறும் காணொலி ஒன்று வெளியாகியிருக்கின்றது. பழ. நெடுமாறன் அமைதியாக இருக்கின்றார்.

இதனை எதிர்ப்பவர்கள் முன்னர் முன் வைத்த குற்றச்சாட்டுக்களையே மீண்டும் கூறுகின்றனர். இது பணம் சம்பாதிப்பதற்கான ஒரு முயற்சியென்றும் இவர்கள் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவரை கொச்சைப் படுத்துகின்றனர் என்பதே அவர்களது வாதமாக இருக்கின்றது. ஆனால், இதனை வெறுமனே பணம் சம்பாதிப்பதற்கான முயற்சியென்று கூறி விட்டு சாதாரணமாக கடந்து செல்ல முடியுமா என்னும் கேள்வியும் உண்டு.

ஜனாதிபதி தேர்தலொன்றை நாடு எதிர் கொண்டுள்ள சூழலிலேயே விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவரின் மனைவி மற்றும் மகள் உயிருடன் இருக்கின்றனர் என அவரது சகோதரி கூறுகின்றார்.



ராஜபக்ஷ குடும்பம் யுத்த வெற்றியை முன் வைத்தே தங்கள் அதிகாரத்தைக் கட்டியெழுப்பியது. சிங்கள மக்களுக்கு உருப்படியாக சொல்வதற்கு எதுவுமில்லாத சூழலிலேயே அவர்களுக்கு யுத்த வெற்றிவாதம் தேவைப்பட்டது.

முன்னரைப் போல் யுத்த வெற்றி வாதத்தை முன் வைத்து அரசியலை முன்னெடுக்கக்கூடிய நிலைமை தென்னிலங்கையில் தற்போதில்லை. அவ்வாறானதொரு சவாலை வழங்கக் கூடிய நிலையில் ஈழத் தமிழ் அரசியல் தரப்புகளும் இல்லை.

மறு புறம், விடுதலைப் புலிகளின் தியாகத்தையும் அர்ப்பணிப்பையும் தங்களின் சுயநல அரசியலுக்கு தமிழ் தேசிய தரப்புகள் பயன்படுத்திக் கொள்கின்றன. இவ்வாறானதொரு சூழலிலேயே தலைவர் பிரபாகரன் தொடர்பான சர்ச்சைகள் அவ்வப்போது வெளிவருகின்றன.

இப்போது புதிதாக, அவரின் குடும்பம் தொடர்பான சர்ச்சையொன்று வெளிவந்திருக்கின்றது. இதன் உண்மைத் தன்மை தொடர்பில் அரசியல் தரப்புகளும் சரி, சாதாரண மக்களும் சரி, கரிசனை கொள்வதாகத் தெரியவில்லை.

ஆனால், இது வெறுமனே சாதாரண மக்களோடும் தமிழ்த் தேசிய அரசியல் தரப்புகளோடும் மட்டுப்பட்ட ஒன்றல்ல.

இதன் பரிமாணம் எல்லையற்றது. இங்கு விடயம் உண்மை பற்றியதல்லமாறாக, அதன் பயன்பாட்டின் தன்மை தொடர்பானது. 30 ஆண்டுகளுக்கு மேலாக ஆயுதம் ஏந்தி உலகமே வியக்கும் தியாகங்களைப் புரிந்த போராளிகளை உருவாக்கி மாபெரும் விடுதலை இயக்கத்தை கட்டியெழுப்பி தன்னுடைய சொந்த மண்ணில் – சொந்த மக்கள் பலத்தை நம்பி பிராந்திய – உலக வல்லரசுகளுடன் தனித்து நின்று மூன்றரை ஆண்டுகளுக்கு மேலாக போராடிய ஒரு மகத்தான தலைவர் கோழை போல் ஓடி தலைமறைவாக இருக்கின்றார் என்று சொல்வது கேடு கெட்ட வெட்கத்தனமான செயலாகும். தலைவரது குணங்கள், செயற்பாடுகள் பற்றிய எதுவுமே தெரியாதவர்கள் காலத்திற்கு காலம் கட்ட விழ்ந்து விடும் கற்பனைக் கதைகள் பற்றி ஒவ்வொரு தமிழனும் கவனத்துடனும் எச்சரிக்கையுடனும் இருக்க வேண்டும்.

## பிரபாகரன் குடும்பத்தை வைத்து அரசியல் செய்யாதீர்கள் - முன்னாள் இராணுவத்தளபதி

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவரின் குடும்பத்தை வைத்து அரசியல் செய்யாதீர்கள் என முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் தலைவரின் மனைவி மதிவதனி மற்றும் மகள் துவாரகா ஆகியோர் உயிருடன் இருப்பதாகவும் அவர்களை தான் நேரில் சந்தித்ததாகவும் வெளிநாடொன்றில் வசிக்கும் மதிவதனியின் சகோதரி ஒருவர் சமூக வலைத்தளங்களில் காணொளி ஒன்றை அண்மையில் வெளியிட்டிருந்தார்.

இந்த நிலையிலேயே முன்னாள் இராணுவத் தளபதியான சரத் பொன்சேகா மேற்கண்டவாறு கூறியுள்ளார். மேலும் அவர் தெரிவிக்கையில், இறுதிப் போரில் விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனும், அவரின் மனைவி மற்றும் மூன்று பிள்ளைகளும் உயிரிழந்து விட்டனர். இது அனைவரும் அறிந்த உண்மை. இந்நிலையில், விடுதலைப் புலிகளின் தலைவர் உயிருடன் இருக்கின்றார் என்று ஒரு குழுவினரும், அவருடைய மனைவி மற்றும் மகள் உயிருடன் இருக்கின்றனர் என்று இன்னொரு குழுவினரும் தமது சுயலாப அரசியலுக்காகப் பிரசாரம் செய்து வருகின்றனர். புலம்பெயர் தமிழர்களே இந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

அவர்களிடம் நாம் விநயமாகக் கேட்டுக் கொள்வது என்னவெனில், போர்க்களத்தில் ஒழுக்கத்தோடும் நேர்மையான கட்டுப்பாட்டோடும் நேருக்கு நேர் நின்று போராடிய ஒரு அமைப்பின் தலைவரை உங்கள் சுயலாபத்திற்காக அவரது குடும்பத்தை வைத்து அரசியல் செய்வதை உடனடியாக நிறுத்துங்கள் என கேட்டு கொண்டுள்ளார்.

### வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழ நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கியமான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்புவோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலைபேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனைத்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்டவர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகையிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப்பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடையாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**


**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**

குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்

**2401 Eglinton Ave East, Suite 300**
**Toronto, Ontario M1K 2M5**
**416 755 5544**



# இலங்கையில் லைகா நிறுவனத்தின் ஊடக வலையமைப்பு! அரச தொலைக்காட்சி சேனலை வாங்கிய செய்திக்கு மறுப்பு!

லைகா நிறுவனமானது, இலங்கையில் பல ஊடக நிறுவனங்களை நடத்தி வருகின்றது. இலங்கையின் மிகவும் பழைய தனியார் தொலைக்காட்சி சேவையான சுவர்ணவாஹினி ஊடக வலையமைப்பை லைகா நிறுவனம் வாங்கி நடத்தி வருகின்றது. அத்துடன், ஐரோப்பிய நாடுகளில் ஒளிபரப்பான ஆதவன் தொலைக்காட்சியின் சேவையை இலங்கையில் தற்போது விரிவுப்படுத்தியுள்ளது.

அதே போன்று, பாரிய நிதி ஒதுக்கீட்டில் தமிழ் மற்றும் சிங்கள மொழிகளிலான இணைய ஊடக வலையமைப்பொன்றையும் லைகா நிறுவனம் இலங்கையில் அண்மையில் ஆரம்பித்து வருகின்றது.

இவ்வாறு பல ஊடக நிறுவனங்களை தன் வசப்படுத்திய லைகா நிறுவனம், தற்போது அரச தொலைக்காட்சி சேவையான சேனல் ஐ தொலைக்காட்சியின் வானலை நேரத்தையும் குத்தகை அடிப்படையில் பெற்றுக் கொண்டுள்ளமை உறுதியாகியுள்ளது.

பிரிட்டனுக்கு அண்மையில் பயணம் மேற்கொண்டிருந்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, லைகா நிறுவனத்தின் தலைவரை அங்கு சந்தித்து கலந்துரையாடல்களை நடத்தியிருந்தார். இலங்கையை பூ ர்வீகமாக கொண்ட லைகா நிறுவனத்தின் தலைவர் சுபாஷ்கரன் அல்லிராஜா, ஐரோப்பிய நாடுகளை இலக்காக கொண்டு பல நிறுவனங்களை நடத்தி வருகிறார்.

குறிப்பாக லைகா தொலைபேசி நிறுவனத்தின் ஊடாக முன்னேற்றம் அடைந்த சுபாஷ்கரன் அல்லிராஜா, தென்னிந்திய சினிமாவில் தற்போது தவிர்க்க முடியாத ஒருவராக திகழ்கின்றார்.



தென்னிந்தியாவில் தயாரிக்கப்படும் பல திரைப்படங்களை லைகா நிறுவனம் தயாரித்து வருகின்றது. இந்தநிலையில், இலங்கை ஊடகத்துறையின் பெரும் பகுதியை லைகா நிறுவனம் தற்போது தனதாக்கிக் கொண்டுள்ளது.

அதுமாத்திரமன்றி, இலங்கை அரசாங்கத்திற்கு சொந்தமான தொலைத்தொடர்பு நிறுவனத்தை லைகா நிறுவனம் கொள்வனவு செய்ய தயாராகி வருவதாக பல்வேறு தரப்பினர் தொடர்ச்சியாக குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வந்தனர். அத்துடன் பல நிறுவனங்களை லைகா நிறுவனம் கொள்வனவு செய்ய உள்ளதாகவும் பலர் கூறி வருகின்றனர்.

இதேவேளை இலங்கையின் அரசு தொலைக்காட்சியான 'ஐ'சேனலை லைகா நிறுவனத்திற்கு விற்பனை செய்துள்ளதாக வெளியான தகவல் போலியானது என ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவிக்கின்றார்.

சேனல் ஐ தொலைக்காட்சியை விற்பனை செய்யவோ அல்லது குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கோ யோசனை முன் வைக்கப்படவில்லை. இலங்கை ரூபவாஹினி கூட்டுத்ஸ்தாபனத்தின் கீழ் இயங்கும் சேனல் ஐ தொலைக்காட்சி சேவையை வருமானம் இல்லாமையினால் நடத்தி செல்ல முடியவில்லை.

மின்சார கட்டணத்தை செலுத்துவதில் கூட சிரமமான நிலைமை காணப்படுகின்றது. மிகவும் நட்டத்தில் இயங்குகின்ற சேனல் ஐ தொலைக்காட்சியின் ஒளிபரப்பு நேரத்தை மாத்திரம் குறுகிய கால குத்தகை அடிப்படையில் ரூபவாஹினி நிறுவனத்தின் பணிப்பாளர் சபையினால் தீர்மானிக்கப்பட்டு, எனது அனுமதியுடன் அதனை குத்தகைக்கு வழங்கியுள்ளனர். பாரிய குத்தகை தொகை கிடைக்கின்றது. மாதமொன்றிற்கு 25 மில்லியன் ரூபா கிடைக்கின்றது.' என பந்துல குணவர்தன தெரிவிக்கின்றார். ரூபவாஹினி நிறுவனத்தின் பணிப்பாளர் சபைக்கு வணிக ரீதியிலான தீர்மானங்களை எடுக்கும் உரிமமானது, நிறுவனத்தின் சட்டத்திலேயே வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறுகின்றார். இந்த நிலையில், நட்டத்தில் இயங்கும் நிறுவனத்தை லாபம் ஈட்டும் வகையில், சேனல் ஐ தொலைக்காட்சியின் ஒளிபரப்பு நேரத்தை லைகா நிறுவனத்திற்கு வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கிரிக்கெட் போட்டிகள் மற்றும் ஏனைய விளையாட்டுக்களுக்காக மாத்திரமே இந்த ஒளிபரப்பு நேரம் ஒதுக்கி கொடுக்கப்பட்டுள்ளது எனவும் அவர் சுட்டிக் காட்டினார்.

முல்லைத்தீவு புனிதபூமி அன்பு இல்லத்தின்
423 குழந்தைகளின் வாழ்வுக்காகவும்
கல்வி மேம்பாட்டிற்காகவும்
உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகை
நடாத்தும் 12வது ஆண்டு
இன்னிசை மாலையும் இராப்போசன விருந்தும்
29 ஒக்டோபர் 2023 ஞாயிற்றுக்கிழமை



ரொரன்ரோ அல்பியன் பகுதியில் கோவில் கொண்டிருக்கும்
கனடா – அருள்மிகு
ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்
1771 Albion Rd., Unit #1, Toronto, ON M9W 5S7 (Albion & Hwy 27)
Tel: 416.213.0110 • www.shrimuththumaari.cin

ஆலயம் திறந்திருக்கும் நேரம்
காலை 9.00 மணி முதல் 1.00 மணி வரை
மாலை 5.00 மணி முதல் 9.00 மணி வரை

பூசை நேரம்:
பகல் 12:00 முதல் மாலை 7:30
உற்சவ காலங்களில் பூசை நேரங்கள் மாற்றம் அடையலாம்



அம்பாள் அடியார்களே!
எமது ஆலயம் புதிய முகவரிக்கு இடம் மாறியுள்ளது என்பதை அறியத் தருவதுடன் விரைவில் புதிய இடத்தில் அம்மனுக்கு மகா கும்பாபிஷேகம் நடைபெற்று வழமையான பூஜை வழிபாடுகள் நடைபெறும் என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

புதிய முகவரி

104 Rivalda Rd
Northyork - On - M9M 2M8
(Weston/Sheppard)

இரவுப் பூஜை மாலை 7.00 மணிக்கு ஆரம்பமாகும்

# அமெரிக்க முன்னாள் அதிபர் ட்ரம்ப்பை சரணடையுமாறு நீதிமன்றம் அதிரடி உத்தரவு

அமெரிக்க முன்னாள் அதிபர் ட்ரம்ப் 2020ஆம் ஆண்டு தேர்தல் தோல்வியை மறைக்க முயன்றதாக குற்றம்சாட்டப்பட்ட நிலையில் அவர் உட்பட 18 பேரை சரண டையுமாறு அமெரிக்க நீதிமன்ற மொன்று அதிரடி உத்தரவை பிறப்பித்துள்ளது.



அமெரிக்க முன்னாள் அதிபர் ட்ரம்ப் மற்றும் 18 பேர் மீது மீது ஜோர்ஜியா மாகாண தேர்தல் முடிவுகளை மாற்றியமைக்க முயற்சி செய்ததாக நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப் பட்டுள்ளது. ஃபுல்டன் கவுண்டி மாவட்ட நீதிபதி பானி வில்லீஸ் நடத்திய இரண்டு ஆண்டுகள் விசாரணையைத் தொடர்ந்து இந்த குற்றப் பத்திரிகை வழங்கப் பட்டுள்ளது.

ஜோர்ஜியாவில் உள்ள அரசு அதி காரிகளுக்கு அழுத்தம் கொடுத்து தனது தோல்வியை மாற்றியமை க்க ட்ரம்ப் முயற்சி செய்ததாக எழுந்த புகாரின் அடிப்படையில் பானி வில்லீஸ் இந்த விசார ணையை நடத்தினார். அதாவது, ஜோர்ஜியாவைச் சேர்ந்த 16 பேரை ஒருங்கிணைத்த ட்ரம்ப், அவர் களை போலி வாக்காளர்களாக பயன்படுத்தினார். தான் வெற்றி பெற்றதாகவும் அறிவித்துக் கொண்டார் என்பது தான் அந்த குற்றச்சாட்டு

ட்ரம்புடன் இணை சதிகாரர்களாக அவரது வழக்கறிஞர்கள் பெயர் இடம்பெற்றுள்ளது. ட்ரம்புக்கு எதிரான 13 குற்றச்சாட்டுகள் முன் வைக்கப்பட்டுள்ளன. 98 பக்கங்கள் கொண்ட குற்றப்பத்திரிகையில், அரசு பதவியில் இருந்து கொண்டு சத்திய பிரமாணத்தை மீறுதல், மோசடி ஆவணங்களை தாக்கல் செய்தல், மோசடியில் ஈடு படுதல் மற்றும் பொய்யான வாக் குறுதிகள் அளித்தல் ஆகியவற்றில் ட்ரம்ப் ஈடுபட்டுள்ளார்.

ஜோர்ஜியா தேர்தல் சட்டத்தில் இரண்டை அவர் அப்பட்டமாக மீறியுள்ளார். தேர்தல் தோல்வியை ட்ரம்பும் அவரது ஆதரவாளர் களும் ஏற்றுக் கொள்ள மறுத்து விட்டனர். அத்துடன் சட்ட விரோதமாக சதி செய்து ட்ரம்பு க்கு ஆதரவாக தேர்தல் முடிவை மாற்றியுள்ளனர் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் தங்கள் மீதான குற்றச்சாட்டை ட்ரம்ப் தரப்பினர் முற்றிலுமாக மறுத்துள்ளனர்.

இந்த நிலையில் ஒகஸ்ட் 25ஆம் திகதி ட்ரம்ப் மற்றும் அவருடன் குற்றம்சாட்டப்பட்டுள்ள 18 பேரும் நீதிமன்றத்தில் கண்டிப் பாக சரணடைய வேண்டுமென நீதிபதி உத்தரவு பிறப்பித்துள்ளார். குற்றம் சாட்டப்பட்டுள்ள 19 பேரையும் ஒன்றாக விசாரிக்க அவர் திட்டமிட்டுள்ளார். விசா ரணை அரசியல் உள்நோக்கம் கொண்டது என்ற குற்றச்சாட்டை யும் நீதிபதி மறுத்து விட்டார்.

இதேவேளை ட்ரம்ப் மீதான கிரி மினல் குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப் பட்டால், அதிக பட்சமாக 20 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்படலாம் என்று அமெ ரிக்க ஊடகங்கள் சுட்டிக்காட்டி யுள்ளன.

# விக்கினேஸ்வரன் குழு - ஜனாதிபதிக் குழு சந்திப்பு 13 தொடர்பில் ஜனாதிபதி வழங்கிய உறுதிமொழி?

மத்திய அரசாங்கத்தினால் மாகாண சபைகளிடம் இருந்து பறிக்கப்பட்ட 13ஆவது திருத்தச் சட்டத் தின் மூலமாக வழங்கப்பட்ட அதிகாரங்களை மீண் டும் வழங்குவதற்காகச் செயல்படுத்தப்படும் நிபுணர் குழு செப்டெம்பர் மாதம் முதலாம் திகதி தமது பணிகளை ஆரம்பிக்கும் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க உறுதியளித்துள்ளார்.



ஜனாதிபதி தலைமையிலான குழுவினருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் நீதியரசர் சி.வி.விக்னேஸ் வரன் தலைமையிலான குழுவினருக்கும் இடையில் 15 ஆகஸ்ட் 2023 மாலை இடம்பெற்ற கலந்துரை யாடலிலேயே ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டுள் ளார்.

இவ்விடயம் தொடர்பில் மேலும் ஜனாதிபதி ரணில் தெரிவித்துள்ளதாவது, 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கு முழுமனதுடன் செயற் பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், தமிழ் கட்சிகளும் தமது பூரண ஆதரவை வழங்க வேண்டும்.

நாட்டின் ஜனாதிபதிகள் பலர் 13ஐ நடைமுறைப் படுத்தப் போகிறோம் என கூறியிருந்தாலும், நானே தற்போது அதனை நடைமுறைப்படுத்துவதற்கான முதற்கட்ட நடவடிக்கைகளை எடுத்துள்ளேன் என ஜனாதிபதி கூறியுள்ளார்.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி. விக்னேஸ்வரன் தலைமையிலான குழுவினர் மாகாண சபைகளிடமிருந்து மத்தியால் பறிக்கப்பட்ட அதிகார ங்கள், மீள மாகாணத்துக்கு வழங்கப்பட்ட பின்னர் தேர்தல் ஒன்றுக்கு செல்லலாம் என வலியுறுத்தி யுள்ளனர்.

இதன் போது கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, பறிக்கப்பட்ட அதிகாரங்களை மீள மாகாணங்களுக்கு ஒப்படைப்பது தொடர்பில் நீங்கள் வழங்கிய ஐந்து நிபுணர்களுடன், நானும் சிலருடைய பெயர்களை இணைத்து செப்டெம்பர் முதலாம் திகதியில் பணியை ஆரம்பிப்பதற்காக நடவடிக்கை எடுப்பேன் என தெரிவித்துள்ளார்.

மேலும் 13 தொடர்பில் மாகாண ஆளுநர்களுக்கு ஆலோசனை வழங்குவதற்காகப் பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி நிபுண த்துவம் வாய்ந்த பிரதிநிதிகளையும் நிபுணர் குழு வுடன் இணைத்து ஆரம்ப நடவடிக்கைகளை முன்னோக்கிக் கொண்டு செல்லலாம் என ஜனாதிபதி மேலும் கூறியுள்ளார்.

குறித்த சந்திப்பில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வுடன் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி சமன் ஏக்கநாயக்க, சட்டமா அதிபர் சார்பில் பிரதிநிதியும், சி.வி.விக்னேஸ்வரன் சார்பில் வடக்கு கிழக்கு இணைந்த மாகாண சபையின் முன்னாள் செயலாளர் கலாநிதி க.விக்னேஸ்வரன், கிழக்கு மாகாண முன் னாள் காணி ஆணையாளர் குரு நாதன் ஆகியோர் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை அரசமைப்பில் இருந்து 13ஆவது திருத்தச் சட்டத்தை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டால் இந்நாடு பற்றி எரியக்கூடும் என டலஸ் அழகப்பெரும தலைமையிலான சுதந்திர மக்கள் சபையில் அங்கம் வகிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா பகிரங்க எச்சரிக்கை விடுத்துள்ளார். இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவிக்கையில்,

13ஆவது திருத்தச் சட்டம் என்பது அரசமைப்பில் உள்ள ஓர் அங்கம். அன்று முதல் இன்று வரை அதனை நான் ஆதரித்து வருகின்றேன். வடக்கு, கிழக்கு மாகாணம் இணைந்திருந்த வேளை காணி அதிகாரம் தொடர்பில் எனக்குக் கவலை இருந்தது. தற்போது அந்தக் கவலையும் இல்லை.

நான் 13 ஆவது திருத்தச் சட்டத்தை ஆதரிப்பதால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாட்டில் இருப்பதாகக் கருதிவிட வேண்டாம் என்றார்.

# சிங்களத் தேசியவாதத்தின் மீள் எழுச்சி!

13ஆவது திருத்தச் சட்டம் தொடர்பான ரணிலின் அறிவிப்புகள் சோர்வடைந்திருந்த சிங்கள தேசிய வாத சக்திகளை உற்சாகப்படுத்தியிருக்கின்றதா? கோட்டாபய ராஜபக்ஷவின் வீழ்ச்சியை தொடர்ந்து சிங்கள தேசியவாதம் வீழ்ச்சியடைந்து விட்ட தாகவே பலரும் கூறினர்.

தென்னிலங்கையை சேர்ந்த அரசியல் சிந்தனை யாளர்கள் சிலர் கோட்டாபயவின் வீழ்ச்சியை சிங்கள தேசியவாதத்தின் இறுதிக் கட்டமென்று கூட வர்ணித்திருந்தனர். ஆனால் நிலைமைகள் அதற்கு தலை கீழாகவே இருக்கின்றன.

13ஆவது திருத்தச் சட்டத்தில் உள்ளவற்றை முழுமையாக அமுல்படுத்த வேண்டாமென்னும் சுலோகத்தை முன்வைத்து, தங்களை மீளவும் ஒழுங்குபடுத்திக் கொள்வதற்கான முயற்சிகளில் சிங்கள கடும்போக்குவாதிகள் தங்களை ஒருங்கி ணைத்து வருகின்றனர். இந்தப் பின்புலத்தில் தான் ஓய்வுபெற்ற இராணுவத் தளபதி ஜெனரல் ஜெகத் டயஸ் 13ஆவது திருத்தச் சட்டத்துக்கு எதிரான கட்சிகளை ஒன்றிணைப்பதற்கான மகாநாடு ஒன்றை ஏற்பாடு செய்திருக்கின்றார்.

ஓர் இராணுவத் தளபதி 13ஆவது திருத்தச் சட்டத் துக்கு எதிராக களமிறங்குவது சாதாரணமாக எடுக்கக்கூடிய விடயமல்ல. கோட்டாபய ராஜ பக்ஷவை அதிகாரத்துக்குக் கொண்டு வருவதில் அனைத்து சிங்கள தேசியவாத தரப்புகளும் ஒன்று பட்டிருந்தன.

இந்த பின்புலத்தில் தான் கோட்டாபய தனிச்சிங்கள வாக்குகளில் வெற்றி பெற்றிருந்தார். இதன் மூலம் தங்களின் விருப்பங்கள் அனைத்தையும் கோட்டா பயவின் மூலம் தீர்த்துக் கொள்ளலாம் என்னும் திட்டமே சிங்கள– பௌத்த சக்திகளிடம் இருந் தது. கோட்டாபயவும் சிங்கள கடும்போக்கு பௌத்த தேசியவாத தரப்புகளை மட்டும் திருப்திப் படுத்தும் திட்டங்களுக்கான அறிவிப்புகளையே வெளியிட்டி ருந்தார். தன்னையொரு பௌத்த — சிங்களத் தலைவன் என்றும் பிரகடனம் செய்தார்.

புதிய அரசியல் யாப்பொன்றை கொண்டு வருவதன் ஊடாக 13ஆவது திருத்தச் சட்டத்துக்கு முற்றுப் புள்ளியிடுவதுடன் அதன்மூலம் உறுதிப்படுத்தப் பட்ட அதிகாரங்களையும் தமிழ் மக்களுக்கு வழங்கக்கூடாது என்பதில் உறுதியாக இருந்தார். மாவட்ட சபை முறைமை தொடர்பில் சிந்தித்தார். இந்த அடிப்படையிலேயே புதிய அரசியல் யாப்புக் கான ஆலோசனைக் குழுவை நியமித்தார். அந்தக் குழுவில் இருந்தவர்களில் பெரும்பான்மையினர் 13ஆவது திருத்தச் சட்டம் நாட்டுக்கு பயனற்ற தென்னும் நிலைப்பாட்டை கொண்டிருந்தவர்களா வர்.

ஆனால், எதிர்பாராத வகையில் கோட்டாபய ராஜ பக்ஷ அதிகாரத்திலிருந்து வெளியேறும் நிலைமை உருவாகியதைத் தொடர்ந்து, சிங்கள– பௌத்த தேசியவாத தரப்புகளின் எதிர்பார்ப்புகள் தோல்வி யடைந்தன. இந்த நிலையில் தான், தங்களின் திட்டங்கள் அனைத்தும் இடைநடுவில் நின்று விட்ட ஆவேசத்தில் இருந்தவர்கள் அனைவரும், தற்போது 13ஆவது திருத்தச்சட்டத்தை முன் வைத்து தங்களை ஒருங்கிணைத்துக் கொள்ள வும் வீழ்ச்சியடைந்த சிங்கள தேசியவாத சக்தி களை அதிகாரத்துக்குக் கொண்டு வரவும் முயற்சி க்கின்றனர். ரணிலின் 13ஆவது திருத்தச் சட்டம் தொடர்பான அறிவிப்பை தங்களுக்கு சாதகமாக்கிக் கொள்ள முயற்சிக்கின்றனர்.

சிங்கள பௌத்த தேசியவாத தரப்புகளின் 13இன் மீதான எதிர்ப்பு என்பது ஒரே நேரத்தில் மூன்று வகையான எதிர்ப்புகளுக்கான கருவியாக பயன் படுத்தப்படுகின்றது. முதலில் தமிழர் விரோதம், இரண்டாவது இந்திய எதிர்ப்பு, மூன்றாவது ரணில் விக்கிரமசிங்க அதிகாரத்துக்கு வருவதை எதிர்ப்பது. சிங்களபௌத்த தேசியவாத தரப்புகளை பொறுத்த வரையில் ரணில், அவர்களின் விருப்பத் துக்குரிய ஒருவரல்ல. ஒருவேளை, ரணில் வெற்றி பெற்றாலும் கூட ஒரு கட்டத்துக்கு மேல் அவர் நகர்வதை தடுப்பதற்கு சிங்கள பௌத்த தேசியவாத அரசியல் தரப்புகள் பாராளுமன்றத்தில் பலமாக இருக்க வேண்டும். அப்போது தான் தங்க ளது விருப்பங்களை பாதுகாக்க முடியும். இதற்கு பலம் சேர்க்கும் விடயமாகவே, 13ஆவது திருத்தச் சட்டத்தை கையிலெடுத்திருக்கின்றனர்.

# ஒன்றிணைந்த நாட்டிற்குள் "13" அதிகாரப் பரவலாக்கம் பௌத்த தேரர்கள் மத்தியில் பகிரங்கமாகத் தெரிவித்த சஜித்





பலரும் பேசிக் கொண்டிருக்கும் 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தம் தொடர்பில் இன்றும் நாளையும் ஒரே நிலைப்பாட்டையே நாம் கொண்டுள்ளோம் என்றும், ஒன்றித்த நாட்டுக்குள் ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியில் 13 ஆவது திருத்தச் சட்டத்தின் அதிகாரப் பரவலாக்களை நடைமுறைப்படுத்த எதிர்பார்ப்பதாகவும், ஒரு நாட்டின் ஒருமைப்பாட்டைப் பேண தேசிய ஒற்றுமை மிகவும் அவசியம் என்றும், நாட்டின் அனைத்து பிரஜைகளும் சமமாக கருதப்பட்டு ஒவ்வொரு சமூகத்திற்கும் சுயமரியாதையுடன் வாழும் உரிமை வழங்கப்பட வேண்டுமெனவும், இன்று இவை அச்சுறுத்தலுக்குள்ளாகி இருப்பதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

மகா சங்கத்தினரின் கருத்துக்களையும் ஆலோசனைகளையும் சிறந்த முறையில் பெற்றுக் கொண்டு பாதகமான காரணிகளை நீக்கி சாதகமான காரணிகளுடன் சமய சேவை, சமூக சேவை மற்றும் முற்போக்கு அரசியல் பயணத்தை முன்னெடுக்கும் சக்தியாக ஐக்கிய மக்கள் சக்தி திகழ்வதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

விழுமியமிக்க சமூகத்துக்கான பிக்குகள் ஆலோசனை பேரவையின் இரண்டாம் கட்டம் கடந்த 15 ஆகஸ்ட் 2023 செவ்வாய்க்கிழமை காலி மாவட்டத்தை இலக்காக் கொண்டு காலி நகரசபை கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது. நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே சஜித் பிரேமதாச அவர்கள் இவ்வாறு தெரிவித்தார்.

ஒன்றித்த நாட்டுக்குள் ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியில் 13 ஆவது திருத்தச் சட்டத்தின் அதிகாரப் பரவலாக்களை நடைமுறைப்படுத்த எதிர்பார்ப்பதாகவும், ஒரு நாட்டின் ஒருமைப்பாட்டைப் பேண தேசிய ஒற்றைமை மிகவும் அவசியம் என்றும்,நாட்டின் அனைத்து பிரஜைகளும் சமமாக கருதப்பட்டு ஒவ்வொரு சமூகத்திற்கும் சுயமரியாதையுடன் வாழும் உரிமை வழங்கப்பட வேண்டுமெனவும் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

அரசியலமைப்பில் பௌத்த மதத்திற்கு வழங்கப்பட்டுள்ள விசேட இடம் எப்போதும் பாதுகாக்கப்படும் எனவும், ஏனைய மதங்களும் சமயங்களும் பாதுகாப்பாக இருக்க செயற்பட வேண்டும் எனவும், நாட்டில் பிளவு ஏற்பட்டால், நாட்டின் தேசிய பாதுகாப்பு பற்றி பேசுவதில் அர்த்தமில்லை என்றும், அந்தப் பிரிவினையை இல்லாதொழிக்க வேண்டும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

நாட்டின் ஒருமைப்பாட்டிற்காக அனைத்து மக்கள் சமூகங்களும் தம்மை அர்ப்பணிக்க வேண்டும் என்றும்,அந்த இலக்கை நோக்கி ஐக்கிய மக்கள் சக்தி எப்போதும் செயற்படும் என்றும் சஜித் பிரேமதாச தெரிவித்தார். புத்தசாசன அமைச்சும் புத்தசாசன நிதியமும் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவினால் நிறுவப்பட்டது என்றும், சகோதர ஏனைய மதங்களை பாதுகாப்பதற்காக தனியான அமைச்சுகளை அவர் நிறுவியதையும் நினைவு கூர்ந்தார்.

## மேர்வின் சில்வாவின் தலையில் பழுது!

எனது பார்வையின் கீழ் முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வாவிற்கு தலையில் பழுது உள்ளது போல் தெரிகிறது என வடக்கு மாகாண சபையின் அவைத்தலைவர் சி.வி.கே. சிவஞானம் தெரிவித்துள்ளார். இவர் அரசியலில் இல்லாத கட்சிகள் இல்லை. அனைத்துக் கட்சிகளிலும் இருந்து, எல்லா கட்சியினரும் அவரை துரத்தி உள்ளார்கள். தான் இருக்கின்றார் என்பதை காண்பிப்பதற்காக இவ் வாறு மடமைத்தனமான பேச்சுக்களை பேசுகின்றார். இவரை கணக்கெடுப்பதே மிகவும் பிழை. அவரை கவனிக்காமல் அவர் பாட்டிலேயே செல்வதற்கு விட்டு விட வேண்டும். உண்மையாகவே இந்த நாட்டில் சட்டம், ஒழுங்குகள் இருக்கின்றது என்றால் பொலிஸார் இவருக்கு எதிராக நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். ஏனென்றால் இவர் ஒன்று வன்முறையை தூண்டுகின்றார் இரண்டாவது இன மோதலை உருவாக்குவதற்கு முயற்சிக்கின்றார். இவருக்கு இனமோதலை ஏற்படுத்தக் கூடிய அளவுக்கு மனோநிலை பிரச்சினை என்றால் அதற்கான வைத்தியத்தை செய்ய வேண்டியது அரசாங்கத்தின் கடமை என்றார்.


தற்பொழுது ON LINE இல் வகுப்புகள்

Math & Physics Tutoring

(For High School Students)



Special Classes for IB, AP & University Students
Math: Grade 9-12, Advanced Functions,
Calculus & Vectors and Data Management.
Physics: Grade 11 & 12

கணித வகுப்புக்கள் தரம் 9 முதல் 12 வரை
பௌதீகவியல் வகுப்புக்கள் தரம் 11 முதல் 12 வரை

Instructor: S. Elancheliyan, B. Sc (Sri Lanka), B. Eng (Canada)

சி.இளஞ்செழியன்

Tel: 416-524-0424

# மீண்டும் ஓர் போர் வேண்டாம்!

## நல்லிணக்கத்தை எட்டும் பேச்சுவார்த்தைகள் தொடர வேண்டும் - மடுவில் பாப்பரசரின் பிரதிநிதி



வடக்கு, கிழக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுடனான ஜனாதிபதியின் சந்திப்பு முயற்சிகள் ஊடாக நல்லிணக்கத்தை எட்ட அதிகாரிகள் எடுக்கும் முயற்சிகளை நாம் பாராட்டு கிறோம் என பரிசுத்த பாப்பரசரின் பிரதிநிதி பேராயர் பிறைன் உடைக்குவே ஆண்டகை தெரிவித்துள்ளார்.

மடு திருத்தலத்தின் ஆவணி திருவிழாவில் 15 ஆகஸ்ட் 2023 செவ் வாய்க்கிழமை கலந்து கொண்ட போப் பரிசுத்த பாப்பரசரின் பிரதிநிதி பேராயர் பிறைன் உடைக்குவே ஆண்டகை இவ்வாறு தெரிவித்து ள்ளார். அவர் மேலும் கூறுகையில்,

இத் திருப்பலியில் கலந்து கொள்ளும் சகோதர சகோதரிகளே திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் பெயரால் உங்கள் அனைவரையும் வாழ்த்துகிறேன். திருத்தந்தை உங்கள் நாட்டை அன்பு செய்கிறார். 2015 ஆம் ஆண்டு ஜனவரி 14 ஆம் திகதி திருத்தந்தை இந்த நாட்டிற்கும் இத்திருப்பதிக்கும் மேற்கொண்ட திருத்தூது பயணத்தை அவர் மிகவும் பாராட்டு கின்றார்.

அன்றைய நாளில் அவருக்கு அன்பளிப்பு செய்யப்பட்ட மடு மாத திருச் சொருபத்தை அவர் இன்று வரை போற்றுகின்றார். உலகம் போற்றும் இத் திருத்தலத்தில் அன்று அவர் ஆற்றிய உரையை நோக்கி இன்று எனது சிந்தனைகள் செல்கின்றன. அவர் அன்று கூறிய பல விடயங்களில் கீழ் கண்ட அவருடைய வார்த்தை களை இங்கே தருகின்றேன். மரியன்னை என்றும் உங்களோடு இருக்கிறார். அவர் ஒவ்வொரு வீட்டினு டைய அன்னை. காயப்பட்ட ஒவ்வொரு குடும்பங்களி னதும் அன்னை.

பிரகாசிக்கின்ற இந்த இலங்கைத்தீவில் உள்ள தன் பிள்ளைகளை அன்னை ஒருபோதும் மறக்கவில்லை. எவ்வாறு மரியாள் சிலுவையில் தொங்கிய தனது பிள்ளையை விட்டு விலகாது நின்றாரோ அவ்வாறே துன்புறும் தனது இலங்கை நாட்டு பிள்ளைகளை அவர் விட்டு விலகுவது இல்லை.

நம்முடைய பரிசுத்த தாயான மரியா தன்னுடைய இத்தீவின் பிள்ளைகளை மறப்பதில்லை.அவரின் பரிந்துரை ஊடாக நீதி,நல்லிணக்கம், அமைதி எங்களு க்கு கிடைப்பதாக. உடல் ரீதியான உணர்வு ரீதியான வடுக்களை விட்டுச் சென்ற 26 வருடங்கள் நீடித்துச் சென்ற உள்நாட்டு போரின் தாக்கங்களை நாம் மறந்து விட முடியாது.

பல தடவைகளில் இந்த போரைப் பற்றி நான் கேள்விப் பட்டு இருக்கின்றேன். வாசித்தும் இருக்கின்றேன். எனினும் 2 வாரங்களுக்கு முன்னர் யாழ் மறை மாவட் டத்திற்கு நான் மேற்கொண்டிருந்த மீட்புப்பணி விஜயத்தின் போது மக்கள் மீதும், கை விடப்பட்ட வீடுகள் மீதும் உடமைகள் மீதும் போரின் தாக்கம் எவ்வாறு இருந்தது என்பதை இன்னும் ஆழமாக பார்ப்பதற்கு எனக்கு வாய்ப்பு கிடைத்தது.

மீண்டும் ஒரு போர் வேண்டாம். இன,மத,மொழி,சாதி கருத்து போன்ற வேற்றுமைகளுக்கு அப்பால் அன்பும் அமைதியும் சகிப்புத்தன்மையும் நிலை பெறு வதாக. வெறுப்பும், விரோதமும் வேண்டாம். ஏனெனில் சமாதான் என்பது ஓர் இல்லாத நிலை அன்று. இது நல்லிணக்கத்திற்கான நேரம்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கான பயணங் கள். வடக்கு கிழக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுடனான ஜனாதிபதியுடன் சந்திப்பு போன்ற முயற்சிகள் ஊடாக நல்லிணக்கத்தை எட்டுவதற்கு அதிகாரிகள் எடுக்கும் முயற்சிகளை நாம் பாராட்டுகிறோம்.

அதேவேளை ஒரு வாரத்திற்கு முன்னர் ஜனாதிபதி பாராளுமன்றத்தில் ஆற்றிய உரையில் தெளிவாக குறிப் பிட்டது போல அனைவரும் நன்கு அறிந்த குழப்ப மான விடயங்களை போதுமான அளவில் தீர்த்து வைக்கும் வகையில் இந்த செயன்முறைகள் அமையும் என நாங்கள் நம்புகிறோம்.

மூன்று வருடங்களுக்கு முன் நான் இலங்கைக்கு வந்த போது இந்த நாட்டின் பல பாகங்களுக்கும் நான் விஜயம் செய்தேன். இலங்கை மக்கள் பொதுவாக நல்லவர்கள். சகிப்புத்தன்மை கொண்டவர்கள். குறை வாக உள்ள சிறு குழுவினர் உங்கள் மீது எதிர் மறை யாக செல்வாக்கு செலுத்தவோ உங்களை திசை திருப் பவோ அனுமதிக்க வேண்டாம்.

பல்வேறு சமயங்களை சார்ந்த சமயத் தலைவர்கள் அன்பையும், சகோதரத்துவத்தையும், நோக்கிய சரியான கொள்கையை நோக்கி மக்களை வழி நடத்துவதில் முன்னனி பங்கு வகிக்க வேண்டும். எந்த ஒரு சமயத் தலைவரும் தமக்கு வழங்கப்பட்ட சந்தர்ப்பங்கள், மதிப்பு சலுகைகள் போன்றவற்றை பயன்படுத்தி மற்றைய சமயங்களை இழிவுபடுத்துவதை ஏற்றுக் கொள்ள முடியாது. நாம் முன்னுதாரணமாக திகழ்ந்து வழிநடத்த வேண்டும். நாம் ஒன்றிணைப்பின் முகவர களாக திகழ வேண்டுமே தவிர பிரிவினை வாதத்தின் முகவர்களாக அல்ல என அவர் மேலும் தெரிவித்தார்.

# பெண் வேடத்தில் வந்து தாக்குதல் நடத்திய காடையர்கள்

யாழ்ப்பாணம் - கல்வியங்காட்டில் உள்ள வீட்டின் மீது இரண்டு மோட்டார் சைக்கிளில் வந்த ஆறு பேர் கொண்ட வன்முறைக் கும்பல் ஆயுதங்களுடன் நுழைந்து வன்முறையில் ஈடுபட்டு சேதம் விளைவித் தனர். கல்வியங்காட்டில் உள்ள பூதவராயர் வீதியில் உள்ள அரச உத்தியோகத்தர் ஒருவரது வீட்டின் மீது இன்று அதிகாலை பெண்களின் ஆடை அணிந்து வந்த ஒருவர் உட்பட்ட ஆயுதங்களுடன் வந்த மர்ம கும்பலே அட்டூழியத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது வீட்டின் வெளியே நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள், புத்தகப்பை என்பன தீயிட்டு கொளுத்தப்பட்டதுடன் யன்னல் கண்ணாடிகள், கண்காணிப்பு கமெராக்கள் என்பனவும் அடித்து நொருக்கப்பட்டன. சம்பவம் தொடர்பில் கண்காணிப்பு கமெராக்களில் பதிவான காட்சிகளை அடிப்படையாக கொண்டு கோப்பாய் பொலிஸார் மற்றும் தடயவியல் பொலிஸார் விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர்.

வெளிநாட்டில் உள்ள தரப்பே இங்குள்ள வன்முறை கும்பலுக்கு பணம் அனுப்பி குறித்த வன்முறையில் ஈடுபட்டதாக பொலிஸாரின் ஆரம்பக் கட்ட விசார ணைகளில் தெரியவந்துள்ளது. கல்வியங்காட்டில் இவ்வாறான வன்முறை சம்பவம் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்ற போதும் குற்றவாளிகளோ வன்முறைக் கும்பலோ கைது செய்யப்படுவதில்லை என அப்பகுதி மக்கள் பொலிஸார் மீது குற்றஞ் சாட்டு கின்றனர்.




# அரசியல் ஆய்வுகளின் தோல்வி

அரசியல்வாதிகள் விடயங்களை சரியாகக் கையாள வில்லை. அரசியல்வாதிகளால் வெளிவிவகாரத்தை கையாள முடியவில்லை அதற்கான வெளிவிவ காரக் கொள்கையொன்றை அவர்களால் வகுத்துக் கொள்ள முடியவில்லை.

அரசியல்வாதிகளின் வினைத்திறனற்ற அணுகு முறைகளால் தமிழ் மக்கள் தொடர்ந்தும் பின்ன டைவை சந்தித்து வருகின்றனர் தமிழ்ச் சூழலில் முன்வைக்கப்படும் அரசியல் கருத்துருவாக்க ங்களின் சாரம்சம் இவ்வாறு தான் அமைந்திரு க்கும்.

கடந்த பதினான்கு வருட கால அரசியல் கருத்து ருவாக்கங்கள் அனைத்தினதும் உள்ளடக்கத்தை மேற்கண்டவாறு நாம் உற்றுநோக்கலாம்.

யதார்த்தபூர்வமான அணுகுமுறையை முன்வைப் பவர்களும் இல்லாமலில்லை. அவர்களது வாத த்தை சரியென்று நிரூபிக்கக்கூடியவாறே, சம காலத்தின் அரசியல் காணப்படுகின்றது.

இந்தப் பின்புலத்தில் நோக்கினால் தமிழ்த் தேசியம் பேசும் அரசியல்வாதிகள் மட்டுமல்ல, அரசியல் கருத்துருவாக்கிகள் என்போரும் படுதோல்வி யடைந்திருக்கின்றனர். அவர்களின் எதிர்வுகூறலை காலம் பெறுமதியற்றதாக்கியிருக்கின்றது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஊடான அழுத்தங்களால் பெரும் நன்மை விளையு மென்னும் கதைகளுக்கு இப்போது எந்தப் பெறு மதியும் இல்லை. சர்வதேச அழுத்தங்களால் நன்மை விளையுமென்னும் கதையும் இப்போது ஒன்றுமில்லாமலாகி விட்டது.

மொத்தத்தில் கருத்துருவாக்கிகளின் அரசியல் எதிர்வு கூறல்களோ வெறும் கதைகளாக காணா மல் போய்விட்டது. தமிழ் மக்களின் அரசியல் எதிர்காலமோ தொடர்ந்தும் கீழ்நிலையை நோக் கியே சென்று கொண்டிருக்கின்றது.

13ஆவது திருத்தச் சட்டத்தைக்கூட அமுல்படு த்துவதற்காக வெளியாரின் தலையீட்டை கோரும் நிலைக்கு தமிழர் அரசியல் கீழிறங்கியிருக்கின் றது. இவர்கள் கூறியது போன்று சர்வதேச அழுத் தங்களால் கொழும்பு பாதிக்கப்பட்டிருந்தால் ரணில் விக்கிரமசிங்க 13ஆவது திருத்தத்திலும் குறைப்பு செய்வது தொடர்பில் பேசிக்கொண்டி ருக்க மாட்டார்.

சர்வதேச அழுத்தங்களை எதிர் கொள்வதற்கான துருப்புச்சீட்டுகளை வெற்றிகரமாக கையாளும் திறனுடன் இலங்கை அரசு இருக்கின்றது. அரசு என்பதையும் அரசாங்கம் என்பதையும் போட்டுக் குழப்பிக் கொள்ளக்கூடாது.

இலங்கையில் தலையீடு செய்யும் பிரதான வெளித் தரப்புக்கள் அனைத்துமே இலங்கையின் பெரும் பான்மையான சிங்கள மக்களை கருத்தில் கொண்டே அவர்களின் அரசியல் ஆட்டத்தை ஆடுகின்றனர். தீர்மானங்களை எடுக்கின்றனர். இதில், தமிழ் மக்கள் ஒரு விடயமாகவே கருத்தில் கொள்ளப்படவில்லை.

அவ்வாறு கருத்தில் கொள்ளப்பட்டிருந்தால் 13 ஆவது திருத்தச் சட்டத்தைக்கூட அமுல்படுத்து வதற்கு இந்தளவு சிக்கல்களை எதிர்கொள்ள வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்காது.

வெளித் தரப்புகளின் நலன்களுக்கு எதிராக கொழு ம்பு செயல்பட முற்பட்டால் கொழும்பின் குரல் வளையை பிடிப்பதற்கான உத்தியாகவே சர்வதேச அழுத்தம் பிரயோகிக்கப்படுகின்றது.

இந்தியா, அமெரிக்கா, சீனா மூன்று சக்திகளும், அவர்களுக்கான பிரத்தியேக ஆட்டத்தை ஆடிக் கொண்டிருக்கின்றனர். அதனை எப்போது எந்த வடிவில் ஆடமுடியுமோ அவ்வாறு ஆடுகின்றனர்.

இதில் அனைத்தும் இழந்து இருப்பதை மேலும் இழந்துகொண்டிருக்கும் தமிழர்களோ வெறும் பார்வையாளர் நிலைக்குள் தள்ளப்பட்டிருக்கின்ற னர்.

தமிழ் மக்களை பார்வையாளர் நிலையிலிருந்து வெளியில் எடுக்கும் தந்திரோபாயம் எவரிடமும் இல்லை. அதற்கான ஆற்றலுள்ள தலைமையும் தமிழ் மக்களிடம் இல்லை. இவற்றை கருத்தில் கொள்ளாத ஆய்வுகளால் இனிப் பயனில்லை.

# திருகோணமலையில் விகாரை நிர்மாணப் பணிகளை நிறுத்தும் ஆளுநரின் உத்தரவை எதிர்த்து பௌத்த பிக்குகள் ஆர்ப்பாட்டம்!

திருகோணமலை நிலாவெளி பெரிய குளம் பகுதியில் நிர்மாணிக்கப்பட விருக்கும் பௌத்த விகாரையின் நிர்மாணப் பணிகளால் இனமுறுகல்கள் ஏற்படும் என திருகோணமலை மாவட்டத்தை பிரதிநிதித்துவம்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் மற்றும் சமூக ஆர்வலர்கள் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டைமானுடைய கவனத்திற்கு கொண்டு வந்ததை அடுத்து நிர்மாணிக்க இருக்கும் விகாரையின் பணிகள் ஆளுநரின் உத்தரவின் பேரில் நிறுத்தப்பட்டன.



திருகோணமலை நிலாவெளி பெரிய குளம் பகுதியில் நிர்மாணிக்கவிருக்கும் பௌத்த விகாரையின் பணிகள் இடை நிறுத்தப்பட்டுள்ள நிலையில், இது குறித்து பல சர்ச்சைகள் இடம் பெற்று வருகின்றன.

நிலாவெளி பெரியகுளம் பகுதியில் வசிக்கும் குடும்பங்களில் 500 இற்கும் மேற்பட்ட தமிழ் குடும்பங்களும் 02 சிங்கள குடும்பங்களும் வசித்து வருகின்றன. அங்கு வாழும் தமிழ் மக்கள் இவ்விகாரை நிர்மாண பணிகள் ஆரம்பிக்க இருப்பதை நிறுத்துமாறு கோரி எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்து வந்தனர்.

இந்நிலையில் விகாரை நிர்மாணப்பணி தொடருமாக இருந்தால் இப்பிரதேசத்தில் பாரியதோர் இனமுருகல் ஏற்படும். ஆகையினால், கிழக்கு மாகாணத்தில் அனைத்து இன மக்களின் நலன்களை பேணும் ஆளுநர் என்ற அடிப்படையில் இனங்களுக்கிடையில் இனமுருகல் ஏற்படாமல் இருப்பதை உறுதி செய்யும் முகமாக ஆரம்பிக்க இருக்கும் குறித்த விகாரையின் நிர்மாணப்பணிகளை உடனடியாக நிறுத்துமாறு ஆளுநர் பணிப்புரை விடுத்தார். விகாரையின் நிர்மாணப் பணி நிறுத்த ப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து 12 ஆகஸ்ட் 2023 காலை 9.00 மணி தொடக்கம் 10.30 மணி வரை போராட்டம் நடத்தப் பட்டது.

மக்களின் எதிர்ப்பின் காரணமாக அப் பணிகளை நிறுத்துமாறு கிழக்கு மாகாண ஆளுநரினால் அறிவிக்கப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்தே இப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

சிங்கள, தமிழ், முஸ்லிம் சகோதரத்துவத்தை குழப்புகின்ற ஆளுநரை அனுப்புவோம்', 'வரலாற்று சான்றுகளை கிளறுகின்ற சம்பந்தன 'புத்தசாசன அமைச்சினால் அனுமதி வழங்கப்பட்ட விகாரையின் நிர்மாணப் பணியை நிறுத்த சம்பந்தன் யார்?' போன்ற வாசகங்கள் அடங்கிய பதாதைகளை ஏந்திய வாறு பௌத்த பிக்குகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இப்பிரச்சினை தொடர்பாக பௌத்த பிக்குகள் தெரிவிக்கையில்,

நாங்கள் தொல்லியல் காணிக்குள் விகாரை அமைக்கவில்லை. அதற்கு அண்மையில் உள்ள புத்தசாசன அமைச்சினால் பௌத்த விகாரைக்காக வழங்கியுள்ள காணியில் தான் பௌத்த விகாரை அமைக்கப் போகின்றோம். இதனால் எவருக்கும் பிரச்சினை இருக்காது என்கின்றனர்.

இந்நிலையில், அப்பகுதி மக்களோ, பௌத்தர்களே இல்லாத இடத்தில் யாருக்காக இந்த பௌத்த விகாரை? காலம் காலமாக இப்பகுதியிலும் இப்பகுதியைச் சுற்றிய பகுதியிலும் தமிழ் மக்களே வாழ்ந்து வருகின்றார்கள். எனவே, இதற்கு அனுமதி கொடுக்கக்கூடாது.

விகாரை அமைக்க அனுமதி வழங்கினால், அது மூவின மக்களினதும் ஒற்றுமையை சீர்குலைத்து, இன வன்முறைக்கும் வித்திடும் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. அது மட்டுமல்லாமல், இலங்கையானது உலகளவில் இன நல்லிணக்கத்துக்கான செயற்பாட்டில் ஈடுபட்டு வருகின்ற நிலையில், அச் செயற்பாட்டிலும் இது பாதிப்பை ஏற்படுத்தும் என்கின்றனர்.

அத்தோடு, இது தொடர்பாக கருத்து தெரிவித்த அப்பகுதிவாசியுடன் பிக்கு ஒருவர் கருத்து மோதலில் ஈடுபட்டு எச்சரிக்கை விடுத்திருந்தமையும் குறிப் பிடத்தக்கது.

இதேவேளை இலங்கை என்பது சிங்கள பௌத்த நாடே என்றும், இந்த நாட்டுக்கு தமிழர்கள் உரிமை கொண்டாட முடியாது என்றும் முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார். தமிழர்கள் வேண்டுமென்றால் எங்களுடன் சமாதானத்துடன் வாழ முடியும் என்றும், அதனை விடுத்து உரிமை கொண்டாடக் கூடாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

களனி பகுதியில் நடைபெற்ற மக்கள் சந்திப்பு நிகழ்வொன்றிலேயே மேர்வின் சில்வா இதனை கூறியுள்ளார்.

தான் வடக்கு, கிழக்கிற்கு செல்லவுள்ளதாகவும், இதன்போது அங்கே விகாரைகள் மற்றும் தேரர்கள் மீது கைவைக்க எவறாவது முயன்றால் அவர்களின் தலைகளுடனேயே களனிக்கு திரும்புவேன் என்றும் மேர்வின் சில்வா அதன் போது கூறியுள்ளார்.


## கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

### கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✔ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை

✔ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது

✔ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.

✔ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

**Sri Vallipuranathar**

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: **416.439.0224,** Cell: **416.450.5011**

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com



# சங்கமித்தையும் பறாளை அரச மரமும்

- கார்வண்ணன் -

அங்கு கை வைத்து இங்கு கை வைத்து இப்போது, யாழ்ப்பாணம், சுழிபுரம் பகுதியில் உள்ள பறாளை முருகன் ஆலயத்தின் தல விருட்சத்தின் மீது கை வைத்திருக்கிறது தொல்பொருள் திணைக்களம்.

அசோகரின் மகளான சங்கமித்தை கொண்டு வந்த வெள்ளரச மரக் கிளையில் ஒன்று தான், பறாளை முருகன் ஆலயத்தின் தல விருட்சமாக தற்போது



வழிபாடு செய்யப்படும் அரசமரம் என்று அதனை தொல்லியல் சின்னமாக அறிவிக்கும் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டிருக்கிறது.

இதையடுத்து சங்கமித்தை இங்கு வரவும் இல்லை, அரச மரத்தை நடவுமில்லை என்று யாழ்.பல்கலைக்கழக மாணவர்களும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரும் போராட்டங்களை முன்னெடுத்தனர்.

தொல்பொருள் திணைக்களம் இப்போது வடக்கு, கிழக்கை பௌத்தமயப்படுத்துவதில் முக்கிய கவனம் செலுத்துகிறது. அதற்கு ஆயுதப்படைகளின் ஆதரவையும், பௌத்த பிக்குகளின் செல்வாக்கையும், அவர்களின் ஊடாக வெளிநாடுகளில் இருந்தும், வெளியாரிடம் இருந்தும் பெற்றுக் கொள்ளும் நிதியையும் பயன்படுத்திக் கொள்கிறது.

சில நாட்களுக்கு முன்னர் நாடாளுமன்றத்தில் உரையாற்றிய சரத் வீரசேகர, பௌத்த பிக்குகள் எந்தவொரு இந்து ஆலயத்திலும் போய் பிரித் ஓதி வழிபாடு செய்யவில்லை என்றும், குருந்தூர் மலை விகாரையில் பொங்கல் வைப்பதை தடுத்து நிறுத்துமாறும் கோரியிருந்தார். ஆனால், குருந்தூர்மலை ஐயனார் ஆலயத்தை அழித்து விட்டுத் தான் அங்கு குருந்தி விகாரை அமைக்கப்பட்டிருக்கிறது. கன்னியாவில் பிள்ளையார் ஆலயத்தை இடித்து விட்டே பௌத்தமயமாக்கல் முன்னெடுக்கப்படுகிறது.

பழைய செம்மலை நீராவியடிப் பிள்ளையார் ஆலயத்தை ஆக்கிரமித்து விகாரை அமைத்து, அங்கு பிரித் ஓதப்படுகிறது. இந்த வரலாறெல்லாம் சரத் வீரசேகரவுக்குத் தெரியாததல்ல.

2009இல் போர் முடிவுக்கு வந்த பின்னர் வடக்கில் 83 விகாரைகள் அமைக்கப்பட்டிருப்பதாக நாடாளுமன்றத்தில் கூறியிருக்கிறார் சிறிதரன். அந்தளவுக்கு வடக்கு, கிழக்கை பௌத்தமயமாக்கும் செயற்பாடுகள் தீவிரமாக இடம் பெறுகின்றன. அவ்வாறானதொரு நடவடிக்கையாகத் தான், இப்போது பறாளை முருகன் ஆலயத்தின் தல விருட்சமான அரச மரம், சங்கமித்தை கொண்டு வந்தது என, தொல்பொருள் சின்னமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

சிங்கள வரலாற்று நூல்களில் சங்கமித்தை கொண்டு வந்த வெள்ளரச மரக் கிளை அனுராதபுர சிறிமாபோதியில் நாட்டப்பட்டதாகத் தான் கூறப்பட்டிருக்கிறதே தவிர, அதற்கு வேறெங்கும் கிளைகள் இருப்பதாக கூறப்பட்டிருக்கவில்லை.

ஆனால், 97ஆண்டுகளுக்கு முன்னர் வெளியிடப்பட்ட, பண்டைய யாழ்ப்பாணம் என்ற நூலில், முதலியார் சி.இராசநாயகம், சங்கமித்தை கொண்டு வந்த வெள்ளரச மரங்களில் ஒன்று தான் சுழிபுரம் பறாளை ஆலய வளாகத்தில் இருப்பதாக குறிப்பிட்டிருக்கிறார். இதனை அடிப்படையாக கொண்டு தான், தொல்பொருள் திணைக்களம் வர்த்தமானி அறிவிப்பை வெளியிட்டதா என்ற சந்தேகங்கள் உள்ளன.

சங்கமித்தை கொண்டு வந்த வெள்ளரச மரம் என்ற பெயரில் வடக்கில் இன்னொரு பௌத்த மயமாக்கல் அல்லது பௌத்த ஆக்கிரமிப்புக்கு கால்கோள் இடப்படுவதாகவே தமிழ் மக்கள் அச்சமடைந்திருக்கிறார்கள். தமிழ் மக்களின் அச்சமும் கோபமும் நியாயமானது. ஏனென்றால், தொல்பொருள் சின்னமாக அறிவிக்கப்பட்டு, அதனை ஆக்கிரமிப்பது தான் சிங்கள பௌத்த பேரினவாதிகளின் இப்போதைய ஆக்கிரமிப்பு மூலோபாயமாக இருக்கிறது.

இதனால் தான் கிளிநொச்சி உருத்திரபுரீஸ்வரர் ஆலயம், பறாளை முருகன் ஆலயம், நெடுந்தீவு வெடியரசன் கோட்டை போன்ற இடங்களை தொல்பொருள் சின்னமாக அறிவித்தமைக்கு எதிரான போராட்டங்கள் இடம் பெறுகின்றன. தொல்பொருள் திணைக்களம் சுழிபுரம் பறாளாய் முருகன் ஆலயத்தின் மீது வைத்துள்ள கை, எதிர்பாராத விளைவுகளை ஏற்படுத்தக் கூடும்.

ஏனென்றால், இந்த விவகாரம் குறித்து பாராளுமன்ற உறுப்பினர்கள் செல்வம் அடைக்கலநாதன், சித்தார்த்தன் ஆகியோர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து முறையிட்டிருக்கின்றனர்.

இதன் போது, பறாளை முருகன் ஆலயத்தில் இருக்கும் அரச மரம், சங்கமித்தை கொண்டு வந்தது என்று தான் நம்பவில்லை என்றும், போர்த்துக்கேய படையெடுப்பின் போது எல்லா அரச மரங்களும் அழிக்கப்பட்டன என்றும் ஜனாதிபதி கூறியதுடன் பறாளை முருகன் ஆலயத்திலுள்ள அரச மரத்தின் வயதை விஞ்ஞான ரீதியாக கணிக்குமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டிருக்கிறார்.

சரியான ஆய்வுகளை முன்னெடுக்காமல் தொல்பொருள் சின்னமாக அதனை அறிவித்தமை குறித்து விசாரணைக்கும் ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளதாக கூறப்படுகிறது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தொல்பொருள் சின்னங்கள் தொடர்பாக விடுக்கும் உத்தரவுகள் செயற்படுத்தப்படுமா என்ற சந்தேகங்கள் உள்ளன.

ஏனென்றால், குருந்தூர்மலையில் ஆக்கிரமிக்கப்பட்ட தமிழர்களின் வயல் நிலங்களை விடுவிக்குமாறு பிறப்பித்த உத்தரவை பௌத்த பிக்குகளும், தொல்பொருள் திணைக்களமும் மதிக்கவில்லை. மகா விகாரையை விட குருந்தி விகாரை பெரியதா என்று அவர் தொல்பொருள் திணைக்களத்திடம் எழுப்பிய கேள்வியை மகா சங்கத்தினர் கடுமையாக எதிர்த்தனர்.

எனவே, பறாளை முருகன் ஆலய அரச மரத்தின் வயதைக் கணிக்க விஞ்ஞான ரீதியான ஆய்வுகளை முன்னெடுக்க தொல்பொருள் திணைக்களம் நடவடிக்கை எடுக்குமா என்பது சந்தேகம். ஏனென்றால் அந்த வயது கண்டுபிடிக்கப்பட்டால், அது அனுராதபுரம் சிறிமா போதியிலும் தாக்கத்தை ஏற்படுத்தும்.

சங்கமித்தை கொண்டு வந்து நாட்டியதாக சொல்லப்படும் அனுராதபுர சிறிமா போதியிலுள்ள வெள்ளரச மரத்தின் தாய் மரம் தான் பீகாரின் புத்தகயாவில் இருப்பதாக கூறப்படுகிறது. புத்தகயாவில் உள்ள அந்த அரச மரத்தின் கீழ் தான், கி.மு 500 ஆண்டுகளில், கௌதம புத்தர் ஞானம் பெற்றார் என்று நம்பப்படுகிறது.

ஆனால், புத்தகயாவில் இருப்பது அந்த அரச மரம் இல்லை. காலத்துக்கு காலம் புயல் உள்ளிட்ட பல்வேறு காரணிகளால் அங்கிருந்த அரச மரங்கள் அழிந்து போயிருக்கின்றன. ஆனால் அந்த இடத்தில் புதிய மரம் நாட்டப்பட்டு, மூல மரத்தின் வழித்தோன்றல் என்று நம்பப்படும் மரமே அங்கு இருப்பதாகவும் வரலாற்றுத் தரவுகள் கூறுகின்றன.

எனவே புத்தகயாவில் இப்போது உள்ள மகாபோதி மரம், புத்தர் ஞானம் பெற்ற வெள்ளரச மரம் அல்ல என்று கூறப்படும் நிலையில், அனுராதபுர சிறிமாபோதியிலும், பறாளை முருகன் ஆலயத்திலும் சங்கமித்தை கொண்டு வந்த வெள்ளரச மரங்கள் நிலைத்திருக்க முடியுமா?

எல்லா மரங்களுக்கும் ஒரு ஆயுள் உள்ளது. அரச மரத்துக்கும் ஆயுள் உள்ளது. அரச மரம், 900 தொடக்கம் 1500 ஆண்டுகள் வரை உயிர் வாழக் கூடியது என்று நம்பப்படுகிறது. ஆனால் அனுராதபுரத்தின் சிறிமா போதியின் வயது 2250 எனவும் கூறப்படுகிறது. இது விஞ்ஞான ரீதியாக ஆய்வுக்குட்படுத்தப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டதல்ல. அதே வயது பறாளை முருகன் ஆலய அரச மரத்துக்கும் இருக்குமா என்று கண்டறிய வேண்டும். அந்த வயது கண்டறியப்பட்டால், அதனை தொல்பொருள் திணைக்களம் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

தொல்பொருள் திணைக்களமோ, சிங்கள பௌத்த பேரினவாதிகளோ தங்களுக்கு சாதகமற்ற பல விடயங்களை மறைக்கின்றனர். சிங்கள பௌத்தத்துக்கு முன்னர் இலங்கையில் தமிழ் பௌத்தம் இருந்தது என்ற உண்மையை அவர்கள் ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை.

சங்கமித்தையுடன் வந்த ஐந்து பேரில் இரண்டு பேர் தமிழர்கள் என்றும், அவர்கள் தான் சுழிபுரத்தில் அரச மரத்தை நாட்டினர் என்றும் இன்னொரு கதையும் உள்ளது.

சிங்கள பௌத்தர்கள் சிறிமாபோதியில் விஞ்ஞான ரீதியாக ஆயுள் காலம் கணிக்கப்படுவதை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். ஏனென்றால் அது அவர்களின் மத நம்பிக்கையை பாதித்து விடலாம்.

அதேவேளை பறாளை முருகன் ஆலய தல விருட்சத்தின் வயதை கணிக்க தமிழ் மக்கள் விரும்புகிறார்கள். அவர்களுக்கு இந்த அரச மரம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்தியது என்ற நம்பிக்கை இல்லை. அதைவிட, இது சிங்கள பௌத்த ஆக்கிரமிப்பு முயற்சி என்று நம்புவதால், அந்த ஆய்வு நடத்தப்பட வேண்டும் என்று அவர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

பறாளை முருகன் ஆலயத்தின் அரச மரத்தின் வயதை விஞ்ஞான ரீதியாக உறுதிப்படுத்திக் கொள்ளாமல் தான் அது தொல்பொருள் சின்னமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இதன் வயதை சிறிமாபோதியின் வயதுடன் ஒப்பிட்டுத் தான் ஆய்வு செய்ய வேண்டும். அதற்கு தொல்பொருள் திணைக்களம் இடமளிக்காது. மத நம்பிக்கையை காரணம் காட்டி தடுக்க முனையும். ஏனென்றால் அது உண்மை வயதை வெளிப்படுத்தி விடக் கூடும். அது பௌத்தர்களின் நம்பிக்கைக்கு பாதகமான முடிவுகளையும் தரக் கூடும்.

அதேவேளை வடக்கில் தொல்பொருள் சின்னங்கள் என்ற பெயரில் தொல்பொருள் திணைக்களத்தின் ஆக்கிரமிப்புகள் தொடருகின்ற அதேவேளை உண்மையாக கண்டறியப்பட வேண்டிய தொல்பொருள் இடங்கள் குறித்து அது அக்கறையின்றி இருக்கிறது.

குறிப்பாக அனுராதபுரத்தில் உள்ள மகா விகாரை தொடர்பான புதிர்கள் இன்னமும் அவிழ்க்கப்படவில்லை. தேவநம்பிய தீசனால் அனுராதபுரத்தில் அமைக்கப்பட்ட மிகவும் புராதனமான மிகப் பெரிய விகாரையாக கருதப் படும் மகாவிகாரையின் எல்லைகளையே இன்னமும் தொல்பொருள் திணைக்களம் கண்டுபிடிக்கவில்லை. இதனை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே கூறியிருக்கிறார்.

அனுராதபுரத்தில் மகாவிகாரை அபிவிருத்தி திட்டம் குறித்து ஆராயும் கூட்டம் ஒன்று கடந்த ஜீலை 22ஆம் திகதி இடம் பெற்றது. பௌத்த பிக்குகள், தொல்பொருள் திணைக்களத்தின் பணிப்பாளர் உள்ளிட்ட அதிகாரிகள் பங்கேற்ற அந்தக் கூட்டத்தில் உரையாற்றிய ஜனாதிபதி, தொல்பொருள் முக்கியத்துவம் (22ம் பக்கம் பார்க்க)

# 12வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! ஆகஸ்ட் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.
தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா
செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)
பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)
உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)
உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)
பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்
இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவ ருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக் குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

12 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 12 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒருநாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ?

ஒரு கணம் சிந்தியுங்கள் உறவு களே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்ன தானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

12 ஆகஸ்ட் 2023 முதல் 18 ஆகஸ்ட் 2023 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது.

கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதர வோடு கடந்த செப்டம்பர் முதல் 12வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:-**

**ஈழநாடு பரமேஸ் 416 841 9600**

## 1வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி நிர்மலாதேவி தவலிங்கம்

பருத்தித்துறை தும்பலையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த இளைப்பாறிய ஆசிரியை திருமதி நிர்மலாதேவி தவலிங்கம் (சாந்தி) அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாள் 12 ஆகஸ்ட் 2023 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி நிர்மலாதேவி தவலிங்கம் அவர்களது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 9வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு சின்னத்துரை கந்தையா

மாரீசன்கூடல் இளவாலையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு சின்னத்துரை கந்தையா அவர்களது ஒன்பதாவது ஆண்டு நினைவு நாள் 15 ஆகஸ்ட் 2023 செவ்வாய்க்கிழமையாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு சின்னத்துரை கந்தையா அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து செஞ்சோலை இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 18வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு பாலகுமார் சடாச்சரசுந்தரம்

வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் அவுஸ்திரேலியாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு பாலகுமார் சடாச்சரசுந்தரம் அவர்களது 18வது ஆண்டு நினைவு நாள் 21 ஆகஸ்ட் 2023 திங்கட்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அன்னாரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். அமரர் திரு பாலகுமார் சடாச்சரசுந்தரம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


## ஆடி அமாவாசை உபயம்



### திரு விஸ்வலிங்கம் சுப்பிரமணியம்

15 ஆகஸ்ட் 2023 செவ்வாய்க்கிழமை ஆடி அமாவாசை விரத தினமாகும். அன்றைய தினம் மாதகலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு விஸ்வலிங்கம் சுப்பிரமணியம் அவர்களது நினைவாக அன்னாரது குடும்பத்தினர் அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு விஸ்வலிங்கம் சுப்பிரமணியம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 34வது ஆண்டு நினைவஞ்சலி



### செல்வன் சிவசுப்பிரமணியம் மணிவர்மன்

பருத்தித்துறையைச் சேர்ந்த செல்வன் சிவசுப்பிரமணியம் மணிவர்மன் (மாவீரன் கப்டன் ஜேம்ஸ்) அவர்களது 34வது ஆண்டு நினைவு நாள் 07 ஆகஸ்ட் 2023 திங்கட்கிழமையாகும். அன்றைய நாளுக்காக அன்னாரின் பெற்றோர்களும் உறவுகளும் அன்னாரது நினைவாக 19 ஆகஸ்ட் 2023 சனிக்கிழமை அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்குகின்றார்கள். செல்வன் சிவசுப்பிரமணியம் மணிவர்மன் அவர்களது ஆத்மா சாந்தியடையவும் அவரது கனவு நனவாகவும் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை
பிரதி வெள்ளிக்கிழமைகளில் அனைத்து
தமிழ் வர்த்தக நிலையங்களிலும் வழமை போல்
பெற்றுக் கொள்ளலாம்.
eelanadu.ca என்ற இணையத்
தளத்திலும் பார்வையிடலாம்.
தொடர்புகளுக்கு:- T.K.பரமேஸ் 416 841 9600

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு கடந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்



12 ஆகஸ்ட் 2023 சனிக்கிழமை தம்பலை பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த சாந்தி என்று அன்பாக அழைக்கப்படும் இளைப்பாறிய ஆசிரியை திருமதி நிர்மலாதேவி தவலிங்கம் அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



12 யூலை 2023 கனடாவில் வசிக்கும் திரு திருமதி ரகுமாறன் நிலானி தம்பதிகளன் செல்வப்புதல்வி தியாறா ரகுமாறனின் முதலாவது பிறந்த நன்நாளாகும். அன்றைய நாளுக்காக 12 ஆகஸ்ட் 2023 சனிக்கிழமை செல்வி தியாறா ரகுமாறன் தனது பெற்றோர்களுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



12 யூலை 2023 கனடாவில் வசிக்கும் திரு திருமதி ரகுமாறன் நிலானி தம்பதிகளன் செல்வப்புதல்வி தியாறா ரகுமாறனின் முதலாவது பிறந்த நன்நாளாகும். அன்றைய நாளுக்காக 12 ஆகஸ்ட் 2023 சனிக்கிழமை செல்வி தியாறா ரகுமாறன் தனது பெற்றோர்களுடன் இணைந்து செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



15 ஆகஸ்ட் 2023 செவ்வாய்க்கிழமை ஆடி அமாவாசை விரத உபயமாக மாதகலைச் சேர்ந்த திரு விசுவலிங்கம் சுப்பிரமணியம் அவர்களது நினைவாக அன்னாரது குடும்பத்தினர் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



15 ஆகஸ்ட் 2023 செவ்வாய்க்கிழமை ஆடி அமாவாசை விரத உபயமாக ஊரெழுவைச் சேர்ந்த திரு சின்னப்பு நல்லையா அவர்களது நினைவாக அன்னாரது குடும்பத்தினர் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



15 ஆகஸ்ட் 2023 செவ்வாய்க்கிழமை ஆடி அமாவாசை விரத உபயமாக புதுச்செம்மணி வீதி கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருக்கும் திரு திருமதி சந்திரா சிவலோஜினி குடும்பத்தினர் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



15 ஆகஸ்ட் 2023 செவ்வாய்க்கிழமை மாரீசன்கூடல் இளவாலையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு சின்னத்துரை கந்தையா அவர்களது ஒன்பதாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



16 ஆகஸ்ட் 2023 புதன்கிழமை கனடா Exeuitive woodwork Ltd ஊழியர்கள் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.



09 ஆகஸ்ட் 2023 புதன்கிழமை நயினாதீவைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருக்கும் திரு யோகேந்திரன் பரராசசிங்கம் அவர்களின் 50வது பிறந்த நன்நாளாகும். அன்றைய தினம் திரு யோகேந்திரன் பரராசசிங்கம் அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.


## றொறன்ரோ தமிழ்ச் சங்கம்

நடத்தும்

## இணையவழிக் கலந்துரையாடல்



நாள் : 18 ஆகஸ்ட் (வெள்ளிக்கிழமை 2023)

நேரம் : இரவு 8:00 – 10:00 மணி (கனடா றொறன்ரோ)

நாள் : 19 ஆகஸ்ட் (சனிக்கிழமை 2023)

நேரம் : காலை 1:00 – 2:00 மணி (இலண்டன்)

காலை 5:30 – 7:30 மணி (இலங்கை, இந்திய)

காலை 10:00 – 12:00 மணி (அவுஸ்திரேலியா சிட்னி)

"தென்கிழக்காசியாவின் தமிழ்த் தொல்லியற் சான்றுகள்"

பேசுபவர்: 'கனடா' மூர்த்தி

Zoom ID: 84777257162 Passcode: 554268


SULLIVAN
AUTO GROUP'S
Tamil Fest
தமிழர் தெரு விழா
AUGUST
SAT
26
12PM - 11PM
SUN
27
11AM - 9PM
POWERED BY
iConnect Mortgages
POWERED BY DOMINION LENDING CENTRES
MARKHAM
ROAD
BETWEEN
MCNICOLL & PASSMORE
FREE ADMISSION
தமிழர் தெரு விழா
Tamil Fest
ஆசியாவுக்கு வெளியே அதிக மக்கள் பங்கேற்கும் மாபெரும் தமிழர் தெருவிழா
Largest Tamil Street Festival outside of Asia
TITLE SPONSOR
SULLIVAN AUTO GROUP
BRIMELL TOYOTA
Formula Honda
MORNINGSIDE NISSAN
POWERED BY SPONSOR
iConnect Mortgages
POWERED BY DOMINION LENDING CENTRES
PROUDLY HOSTED BY
Canadian Tamil Congress
கனடியத் தமிழர் பேரவை
Congrès Tamoul Canadien
"Voice of Tamil Canadians"
SILVER SPONSORS
COMPUTEK COLLEGE
HOMELIFE HIGHER STANDARDS
HomeLife Future Realty Inc.
NAVA WILSON
PRADON SILKS
TD
VIBRANT HOSPITALITY GROUP
WOW! WING HOUSE
MAESTRO YUVAN LIVE IN TORONTO
MARKETING PARTNER
PRINT FAST.ca
SUPPORTED BY
Canada
TORONTO
MEDIA SPONSORS
ATN ASIAN TELEVISION NETWORK
102.7 east FM தமிழ்
metroland
tamilfest.ca @TamilFest info@canadiantamilcongress.ca 416.240.0078

# என் இனமே! என் சனமே! என்னை உனக்கு தெரிகிறதா? தாகமாய் இருக்கின்றோம்! கொஞ்சம் கிள்ளிப் போடுங்கள்!

என் இனிய உறவுகளே! 12 வருடங்களுக்கு முன்னர் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லம், பாரதி இல்லம் செஞ்சோலை இல்லம் என மூன்று இல்லங்களில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். அவர்களது உணவுத் தேவை, கல்விக்கான தேவைகளை கனடா வாழ் தமிழ்ச் சமூகம் ஈழநாடு பத்திரிகை வாயிலாக ஆற்றி வருவது யாவரும் அறிந்ததே.

கடந்த 09 யூலை 2023 நாம் இந்த இல்லங்களுக்குச் சென்ற போது இன்னும் இன்னும் குழந்தைகளும் பிள்ளைகளும் இணைந்த வண்ணமேயுள்ளனர். இட நெருக்கடி, உணவுப் பற்றாக்குறை, நிதி நெருக்கடி போன்ற பல்வேறு நெருக்கடிகளை நாம் எதிர் கொண்ட போதும் எமது மண்ணின் வருங்காலச் சந்ததி, எதிர்காலத்தில் அந்த மண்ணில் வாழப் போகும் சந்ததி. இவர்களைக் கை விடலாமா என்ற எண்ணமே மேலோங்கி நிற்கின்றது. மனிதாபிமானமும் மனித நேயமும் நெஞ்சமெல்லாம் நிறைந்துள்ள காரணத்தால் சுமார் 15 குழந்தைகளை புதிதாக உள்வாங்கியுள்ளோம்.

உறவுகளே! இந்தக் குழந்தைகளை உற்று நோக்குங்கள். இவர்கள் செய்த பாவம் என்ன? தமிழராய் பிறந்தது குற்றமா? தேச விடுதலைக்குப் பெற்றோர்கள். உறவுகள் போராடியது குற்றமா? இவர்கள் குடும்பத்தை வறுமை துரத்தியது எதனால்? சிந்தியுங்கள்.

அன்பு உறவுகளே! எதிர்வரும் 29 ஒக்டோபர் 2023 ஞாயிற்றுக்கிழமை இவர்களது வாழ்வுக்காக நடைபெறவுள்ள நிகழ்வில் கலந்து கொள்ளுங்கள். நீங்கள் வழங்குகின்ற ஒவ்வொரு டொலரும் அவர்களைச் சென்றடையும். கடந்த காலங்கள் போல் கணக்கு விபரங்கள் ஈழநாட்டில் பிரசுரமாகும். உங்கள் ஆதரவை 416 841 9600 என்ற தொலைபேசி ஊடாகத் தெரிவிக்கவும். மேலதிக விபரங்கள் அடுத்தவாரம் வெளிவரும்.

பாரதி இல்லம் அன்பு இல்லக் குழந்தைகளையும் கனடியத் தமிழ் சமூகத்தின் ஆதரவோடு கட்டப்பட்ட இல்லத்தையும் பிள்ளைகளின் பாடசாலைப் போக்குவரத்துக்காக வாங்கிய பஸ் வண்டியையும குழந்தைகள் மனதில் மத பேதம் இருக்கக் கூடாது என்பதற்காக அருகருகே அமைந்த ஆலயத்தையுமே படங்களில் காண்கின்றீர்கள். அத்துடன் இல்லக் குழந்தைகளின் தாயாக விளங்கும் தாய்மார்களேயே காண்கின்றீர்கள். நன்றி.

















கனடா அருள்மிகு ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலயம்

SRI AYYAPPA SAMAJAM OF ONTARIO
SWAMI SARANAM

# வரலக்ஷ்மி விரதமும், திருவிளக்குப் பூஜையும்
# காலம்: 25.08.2023 வெள்ளிக்கிழமை





வரலக்ஷ்மி விரதத்தை முன்னிட்டு கனடா ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலயத்தில் காலை, மாலை மஹாலக்ஷ்மி ஹோமமும், அபிஷேக பூஜையும் நடைபெற்று திருவிளக்குப் பூஜையுடன் விரதக்காப்பும், பிரசாதமும் வழங்கப்படும்.

வரலக்ஷ்மி விரத நோன்பு இருக்கும் கன்னிப் பெண்கள், சுமங்கலிப் பெண்கள், விரத தாதிகள் முன்கூட்டியே ஆலயத்தில் பதிவு செய்து கொள்ளவும்.

## திருவிளக்குப் பூஜை நடை பெறும் நேரங்கள்

காலை – 9:30 மணி, 11:00 மணி
மாலை – 4:00 மணி, 5:30 மணி, 6:30 மணி, 7:30 மணி

## CANADA SRI AYYAPPAN HINDU TEMPLE

635 Middlefield Road, Scarborough, ON, M1V 5B8 | Tel: 416-321-6104 | Fax: 416-321-7557 | www.ayyappan.com


# 31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மண்ணில்
17 – 10 – 1959



விண்ணில்
19 – 07 – 2023

புங்குடுதீவு 12ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும்
யாழ். கொக்குவிலில் வாழ்ந்து வந்து
கனடா ரொரன்ரோவில் வசித்துவந்தவரான

## திருமதி. உதயகுமாரன் உதயகுமாரி [உமா]

உனக்கு நான், எனக்கு நீ என்று
எவ்வளவு சந்தோஷமாக வாழ்ந்து வந்தோமே
திடீரென நீ என்னைவிட்டுப் பிரிந்து
இன்றோடு மாதமொன்று ஆனதுவே
ஆறவும் முடியவில்லை, தேற்றிடவும் யாருமில்லை
நான் திரும்பும் இடமெல்லாம் உன் முகம்தான் தெரிகிறது
நினைத்துப் பார்க்கையிலே நெஞ்சம் குமுறுகிறது
நிலைகுலைந்து தனியாய் தவிக்கின்றேன் நீயின்றி
உன் உறவுகள் எல்லோரும் துடியாய் துடிக்கின்றனர்
என் வேதனையை சொல்லிட வார்த்தைகள் இல்லையே
மீண்டும் வருவாயா வாழ்ந்திட இவ்வுலகில்
உங்கள் ஆத்மா சாந்தியடைய கண்ணகிபுரம்
ஸ்ரீராஜ ராஜேஸ்வரித்தாயை பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

அன்னாரின் மறைவுச்செய்தி கேட்டு நாம் துயருற்றிருந்த நேரத்தில் நேரில் வந்தும், தொலைபேசி, முகநூல் ஊடாக ஆறுதல் தெரிவித்த அனைத்து அன்புள்ளங்களுக்கும், மலர் வளையங்கள், மலர் மாலைகள் சாத்தியவர்களுக்கும், பல வழிகளிலும் உதவி ஒத்தாசைகள் இன்றுவரை எமக்கு செய்து கொண்டிருக்கும் அன்பு நெஞ்சங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இங்ஙனம்
கணவன் நடா உதயனும்
உறவுகளும் நண்பர்களும்

# சமஷ்டிக்காகப் போராடுவது யார்?

தேசத்தை அங்கீகரிக்கும் சமஸ்ரிக் கட்டமைப்பே இனப் பிரச்சினைக்கான தீர்வாக அமைய முடியும் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தனது நிலைப்பாட்டை மீண்டும் ஒரு தடவை தெளிவுபடுத்தியிருக்கிறது. 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவதற்கு கட்சிகள் தமது தரப்பு யோசனைகளைத் தருமாறு ஜனாதிபதி அண்மையில் கேட்டிருந்தார்.



அதற்கமைய முன்னணியானது 13 ஆவது திருத்தத்தை நிராகரித்து சமஷ்டிக் கோரிக்கையை முன்வைத்திருக்கிறது.

அதேசமயம் கடந்த நான்காம் தேதி யாழ்ப்பாணத்தில் ஊடகவியலாளர்களைச் சந்தித்த விக்னேஸ்வரன் ஒரு கருத்தைத் தெரிவித்திருந்தார். தமிழ்க் கட்சிகள் எல்லாவற்றினதும் இறுதி இலக்கு கூட்டாட்சி தான் என்ற போதிலும் அதை அடைவதற்கான வழிவகை எது என்பதை தமது கட்சியும் உட்பட எந்த ஒரு கட்சியும் வெளிப்படுத்தல்லை என்று அவர் கூறியுள்ளார். சமஷ்டியை அடையும் வழி தெரியாதபடியால் அரசியலமைப்பில் இருக்கும் 13ஆவது திருத்தத்தைப் பலப்படுத்தி அதிகாரங்களைப் பெற்றுக் கொள்வோம். பின்னர் அதிலிருந்து மேலும் முன்னேறி செல்லலாம் என்றும் விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

சமஸ்டியைப் பெறுவதற்கான வழி

எதுவுமே நடக்கவில்லை என்பது தான். இப்பொழுது நடக்கும் எல்லாப் போராட்டங்களும் பதில் வினையாற்றும் – ரியாக்டிவ் –போராட்டங்களே. எதிர்த் தரப்பின் ஆக்கிரமிப்புகளுக்கு எதிர்ப்புக் காட்டுபவை.

13ஐ நிராகரிக்கும் முன்னணியானது சக கட்சிகளுக்கும் இந்தியாவுக்கும் எதிராகக் கோஷம் எழுப்பினால் மட்டும் போதாது. அதைவிட ஆழமான பொருளில் சமஸ்டிக்காகப் போராடவும் தியாகங்களைச் செய்யவும் தயாராக இருக்கவேண்டும். சமஸ்ரியை அடைவதற்கான வெளியுறவுக் கொள்கை எது என்பதை வெளிப்படையாக விவாதிக்க வேண்டும்.அதற்கு வேண்டிய கட்டமைப்புகளை உருவாக்க வேண்டும்.

தாயகத்தில் நிலப்பறிப்பு மற்றும் சிங்கள பௌத்த மயமாக்கலுக்கு எதிராக அக் கட்சி தான் அதிகமாகப் போராடுகிறது. அதன் மூலம் தமிழ் அரசியலை அவர்கள் நொதிக்கச் செய்கின்றார்கள். ஆனால் அந்தப் போராட்டங்களில் அநேகமானவை ஒரு கட்சிப் போராட்டங்கள், அல்லது சிறு திரள் போராட்டங்கள், அல்லது கவன ஈர்ப்பு போராட்டங்கள். அதாவது தொகுத்துக் கூறின் அரசாங்கத்துக்கு தாக்கமான விதங்களில் சேதத்தை ஏற்படுத்தாத போராட்டங்கள்.

கடந்த 14ஆண்டுகளில்,பொத்துவில்

என்றாலும் அது இலங்கை அரசாங்கத்துக்கு நெருக்கடியை கொடுக்கக் கூடியது. இப்படிப்பட்டதோர் பின்னணியில் அரசாங்கம் பன்னாட்டு நாணய நிதியம்,மேற்கு நாடுகள், இந்தியா,ஜப்பான். ஐநா போன்றவற்றுக்குப் பதில் கூற வேண்டிய ஒரு கால கட்டத்தில் சிங்களபௌத்த மயமாக்கலை அடக்கி வாசிக்க வேண்டும். ஆனால் நிலைமை தலை கீழாகக் காணப்படுகிறது. அண்மைக் காலங்களில் சிங்களபௌத்த மயமாக்கல் பல்வேறு தளங்களில் பல்வேறு பகுதிகளில் செறிவாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அதற்குக் காரணம் என்ன?

காரணங்கள் இரண்டு. ஒன்று, தமிழ் தரப்பின் போராட்டங்கள் அரசாங்கத்துக்கு நோகக் கூடியவைகளாக இல்லை என்பது. இரண்டாவது காரணம், அடுத்த ஆண்டு நடக்கவிருக்கும் ஜனாதிபதி தேர்தலில் எப்படித் தனிச் சிங்கள பௌத்த வாக்குகளை கவர்வது என்று ஜனாதிபதி சிந்திக்கின்றார்.

ஏனெனில் ஜனாதிபதி தேர்தலில் அவர் பெரும்பாலும் ராஜபக்சகளின் ஆதரவோடு களமிறங்கும் வாய்ப்புக்களே அதிகம் தெரிகின்றன. அவ்வாறு ராஜபக்சர்களோடு இணைந்து வாக்குக் கேட்டால் தமிழ் வாக்குகள் தனக்கு அதிகளவு கிடைக்காது என்றும் அவர் பயப்பட முடியும்.

ஏனென்றால் கடந்த 14 ஆண்டுகளாக தமிழ் மக்கள் ஒரே ஒரு அரசியல் தீர்மானத்தில் ஒற்றுமையாக முடிவெடுத்து வந்திருக்கிறார்கள். அது ராஜபக்ஷைகளுக்கு எதிராக வாக்களிப்பது என்ற தீர்மானம் தான். கடந்த 14 ஆண்டுகளாக நடந்த எல்லா ஜனாதிபதித் தேர்தல்களின் போதும் தமிழ்

வாறெனில், சிங்கள பௌத்த மயமாக்களுக்கு எதிராக தமிழ்க் கட்சிகள் போராடப் போராட அது சிங்கள மக்கள் மத்தியில் ரணிலுக்கிரு க்கக் கூடிய செல்வாக்கை உயர்த்தும். சிங்கள பௌத்தத்தைப் பாதுகாப்பதற்காக அவர் விகாரைகளைக் கட்டுகிறார் என்று அவர்கள் நம்புவார்கள். எனவே அரசாங்கத்திற்கு எதிரான தமிழ்கட்சிகளின் சிதறலான, தொடர்ச்சியற்ற சிறுதிரள் போராட்டங்கள் மறைமுகமாக ரணிலின் வாக்கு வங்கியைப்



**கட்டுரையாளர்:**
**யாழ்ப்பாணத்தில் இருந்து**
**– நிலாந்தன் –**

பலப் படுத்துகின்றவைகளாகவே காணப்படுகின்றன.

மாறாக அரசாங்கத்தின் பொருளாதாரத்தை முடக்கும் விதத்தில் அல்லது அரச நிர்வாகத்தை முடக்கும் விதத்தில் அல்லது வெளி உலகத்தின் கவனத்தை ஈர்த்து வைத்திருக்கும் விதத்தில் போராடுவதென்றால் தமிழ் மக்கள் பெருந்திரளாகப் போராட வேண்டும். பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலுமான போராட்டத்தை மேற்கத்திய நாடுகளின் தூதரகங்கள் ஆர்வத்தோடும் எதிர்பார்ப்போடும் கவனித்தன.

கடந்த 14ஆண்டு காலமாக தமிழ் மக்கள் மத்தியில் நடக்கும் ஆர்ப்பாட்டங்களில் பெரியவை அல்லது கவனிக்குப்புக்கு உரியவை என்று கருதத்தக்க போராட்டங்கள் அனைத்தும் பெருந்திரள் போராட்டங்கள் தான். அவை ஒரு கட்சிப் போராட்டங்கள் அல்ல. பல கட்சிப் போராட்டங்கள் தான். கட்சிகளும் சிவில் சமூகங்களும் பாதிக்கப்பட்ட மக்களின் அமைப்புகளும் புலம்பெயர்ந்த தமிழ்த் தரப்புகளும் சமயப் பெரியார்களும் இணைந்து முன்னெடுத்த போராட்டங்கள் தான்.

வகை குறித்த அவருடைய கருத்து யதார்த்தமானது. கடந்த 14ஆண்டுகளாக மட்டுமல்ல அதற்கு முன்னரும் அதாவது ஆயுதப் போராட்டத்திற்கு முன்னரும் தமிழ் மிதவாதிகளிடம் சமஸ்டியை அடைவதற்கு உரிய வழி வரைபடம் எதுவும் இருக்கவில்லை. கடந்த 14 ஆண்டுகளாக தமிழ் கட்சிகள் போராடுகிறோம் போராடுகிறோம் என்று கூறிக்கொள்கின்றன. ஆனால் அந்த அரசியல் இலக்கை நோக்கி எவ்வாறு அறவழியில் போராடுவது என்பது குறித்து எந்த ஒரு கட்சியிடமும் தெளிவான பார்வையோ அல்லது அதற்கு வேண்டிய அரசியல் ஒழுக்கமோ அல்லது அதற்கு தேவையான அர்ப்பணிப்போ இருப்பதாகத் தெரியவில்லை.

விக்னேஸ்வரன் அது தன்னிடமும் இல்லை என்பதை ஒப்புக் கொள்கிறார். ஆனால் அதற்காக அதாவது போராட்டத் தயாரில்லை என்பதற்காக அல்லது போராடத் தெரியவில்லை என்பதற்காக கிடைப்பதைப் பெற்றுக் கொள்வது என்ற தத்துவம் ஏற்புடையதல்ல. கிடைக்கும் அரைகுறைத் தீர்வை ஏற்றுக் கொண்டால் அதை நோக்கியே தமிழ் மக்களின் கவனமும் சக்தியும் குவிக்கப்படும். மாகாண சபைக்குள் எப்படி தங்களுடைய இருப்பைத் தக்க வைப்பது என்பதிலேயே கட்சிகளின் கவனம் முழுதும் குவிக்கப்பட்டு விடும்.

அதாவது தனது இறுதி அரசியல் இலக்கை நோக்கி முன்னேறுவதற்குப் பதிலாக தமிழ் அரசியலானது மாகாண சபைகளுக்குள் தேங்கி நின்றுவிடும். கிடைக்கும் இடைக்கால ஏற்பாடுகளை நிராகரித்து விட்டு விட்டுக் கொடுப்பின்றிப் போராடிய மக்களே இறுதி வெற்றியைப் பெற்றிருக்கிறார்கள்.

ஆனால் இங்கே பிரச்சனை என்னவென்றால், அப்படிப்பட்ட போராட்டம்

தொடக்கம் பொலிகண்டி வரையிலுமான பேரணி எழுக தமிழ் போன்றவற்றை நீக்கிப் பார்த்தால் பெரும்பாலான போராட்டங்கள் கவனஈர்ப்பு போராட்டங்கள் அல்லது சிறு திரள் போராட்டங்கள் தான். இப்போராட்டங்களால் அரசாங்கத்துக்கு பொருளாதார ரீதியாக நட்டம் எதுவும் ஏற்படவில்லை. குறைந்தபட்சம் அரசு நிர்வாகத்தை முடக்குவதற்குக் கூட இந்த போராட்டங்களால் முடியவில்லை. அதாவது இப்போராட்டங்களால் அரசாங்கத்துக்கு நோகக் கூடிய விளைவுகள் ஏற்படவில்லை. அல்லது வெளியுலகத்தைக் கவர்ந்திழுக்கும் சக்தியும் இப்போராட்டங்களுக்கு இருக்கவில்லை.

இந்த விடயத்தில் விக்னேஸ்வரன் மட்டுமல்ல தமிழ் தேசிய மக்கள் முன்னணி, தமிழரசு கட்சி, குத்துவிளக்கு கூட்டணி உட்பட எல்லாருமே பொறுப்பாளிகள் தான். ஈழத் தமிழர்கள் சமஸ்டிக்காகத் தாக்கமான விதத்தில் போராடவில்லை என்பதைத் தான் கடந்த 14 ஆண்டுகளும் நிரூபித்திருக்கின்றன.

இந்த பலவீனத்தை கண்டு பிடித்த காரணத்தால் தான் அரசாங்கம் துணிச்சலாக சிங்கள பௌத்த மயமாக்கலைத் தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகிறது. நாடு பன்னாட்டு நாணய நிதியத்திடம் கடன் வாங்கிக் கொண்டிருக்கும் ஒரு காலகட்டம் இது. ஐநாவில் மனித உரிமைகள் பேரவைக்குள் ஒரு பொறிமுறை இலங்கைக்கு எதிராகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அது போர்க் குற்றங்கள் தொடர்பாக சான்றுகளையும் சாட்சிகளையும் சேகரித்துக் கொண்டிருக்கிறது. அது ஒரு பலவீனமான பொறிமுறை தான். மனித உரிமைகள் ஆணையருடைய அலுவலகத்துக்கு உட்பட்ட ஒரு பொறிமுறை தான்.

மக்கள் பெரும் போக்காக ராஜபக்சங்களுக்கு எதிராகத் தான் வாக்களித்தார்கள். அதிலும் குறிப்பாக ராஜபக்ஷைகளின் ஆணையை ஏற்று யுத்தத்தை வழிநடத்திய தளபதியான சரத் பொன்சேகா ராஜபக்சக்களுக்கு எதிராகத் திரும்பி போது அவருக்கும் வாக்களிக்கக்கூடிய ஒரு நிலைமை காணப்



பட்டது. எனவே ராஜபக்சேக்களின் பதில் ஆளாகத் தேர்தலில் களமிறங்கினால் தமிழ் வாக்குகளைத் திரட்டுவதில் தனக்கிருக்கக்கூடிய நிச்சயமின்மைகளைக் கவனத்தில் எடுத்து, ரணில் தனிச்சிங்கள வாக்குகளைத் திரட்டுவது என்ற முடிவுக்கு வந்து விட்டார் போலத் தெரிகிறது. அதனால் தான் சிங்களபௌத்த மயமாக்கலையும் நிலப்பறிப்பையும் முடுக்கி விட்டுள்ளார். அதிலும் அரசாங்கத்துக்கு நோகாத தமிழ் கட்சிகளின் போராட்டங்கள் அவருக்கு சாதகமான விளைவுகளையே ஏற்படுத்தும். எவ்

அண்மையில் கூட முல்லைத்தீவில் ஒப்பீட்டுளவில் கவனிப்புக்குரிய ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றது. அண்மைக் காலங்களில் முன்னெடுக்கப்பட்ட ஊர்வலங்களில் அது ஒப்பீட்டளவில் பெரியது. அது கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழிக்கு நீதி கேட்டு நடத்தப்பட்ட ஒரு போராட்டம். அது ஒரு கட்சிப் போராட்டம் அல்ல. எனவே கடந்த 14 ஆண்டு கால அனுபவத்தைத் தொகுத்துப் பார்த்தால் தெளிவாகத் தெரிவது என்னவென்றால், கட்சிகளும் சிவில் அமைப்புகளும் புலம் பெயர்ந்த தமிழ்த் தரப்புக்களும் இணைந்து போராடினால் தான் அது வெளியுலகத்தின் கவனத்தை ஈர்க்கும். இல்லையென்றால் அவை ரணில் விக்கிரமசிங்கவின் சிங்கள பௌத்த வாக்கு வங்கியைத தான் வளர்க்கும்.

# தி.மு.க.வுக்கு பெரிய எதிரியாக உருவெடுக்கும் அண்ணாமலை

உங்களைப் பார்த்து வளர்ந்தேன். உங்கள் கொள்கையைப் பற்றி நடக்கிறேன். உங்கள் கனவுகளை நனவாக்குவேன். திராவிடக் கொள்கையின் ஜாம்பவானான தந்தை முத்துவேல் கருணாநிதியின் ஐந்தாம் ஆண்டு நினைவு தினமான ஓகஸ்ட் 7 அன்று அவருக்கு அஞ்சலி செலுத்திய மு க ஸ்டாலின் ட்விட்டரில் பதிவு செய்தது இது.

அந்தப் புனித தினத்தன்று ஸ்டாலின், அண்ணா சாலையில் ஓமந்தூரார் அரசு வளாகத்தில் உள்ள கலைஞர் சிலையில் தொடங்கி, மெரினா கடற்கரையில் உள்ள கலைஞர் நினைவகம் வரையில் ஒரு மாபெரும் அமைதிப் பேரணியை நடத்தினார். இதில் திமுக அமைச்சர்கள், சட்ட மன்ற உறுப்பினர்கள் மற்றும் கட்சித் தலைவர்கள் பங்கு பெற்றனர். கலைஞரின் 99 ஆவது பிறந்த தினம் ஜீன் 3 அன்று கொண்டாடப்பட்டது. அவரது சிறப்பையும் புகழையும் கொண்டாடும் வகையில், ஆண்டு முழுவதற்குமான, தமிழகம் தழுவிய வண்ணமிகு நிகழ்வுகள் திட்டமிடப்பட்டன. அன்று ஸ்டாலின் வெளியிட்ட ஒரு ருவீட்டில், பல்வேறு சமூக நலத் திட்டங்கள் மூலமாக நவீன தமிழ் நாட்டைச் செதுக்கிய சிற்பி'' எனவும் பகுத்தறிவையும் சமூக நீதியையும் நிலை நாட்ட இறுதி வரை உழைத்தார் எனவும் கலைஞருக்குப் புகழாரம் சூட்டினார்.

சமூக நலன் மற்றும் தொழில் வளர்ச்சி ஆகியவற்றில் கவனம் செலுத்திய தந்தையின் நிர்வாகத்தைப் பின்பற்றும் ஸ்டாலின், தனது கடந்த இரண்டாண்டு கால ஆட்சியில் ஏழைகள், பெண்கள், மூத்த குடிமக்கள் ஆகியோருக்கான பல்வேறு நலத் திட்டங்களைத் தொடங்கியதுடன், தமிழகத்தில் தொழிற்சாலைகளையும் அவற்றின் மூலம் வேலை வாய்ப்புகளையும் அதிகரிக்கும் வகையில், ஹஜீண்டாய் போன்ற பன்னாட்டுப் பெரு நிறுவனங்களுடன் ஒப்பந்தங்களைக் கையெழுத்திட்டு, பல பெரிய திட்டங்களை முன்னெடுத்து வருகிறார்.

2024 பாராளுமன்றத் தேர்தலில் மூன்றாவது முறையாக நரேந்திர மோடி பிரதமராவதைத் தடுக்கும் நோக்கில், எதிரணி ஒன்றை உருவாக்குவதில் முக்கிய பங்கு வகித்து, அரசியல் ரீதியாகவும் அவர் சிறப்பாகச் செயல்படுகிறார். எதிர்க் கட்சிகளின் கூட்டணியை இறுதி செய்ததில் இவரது பங்கு அதிமுக்கியமானது.

மாநிலத்தின் முக்கிய எதிர்க்கட்சியான அஇஅதிமுக, எடப்பாடி பழனிச்சாமி, ஓ.பன்னீர் செல்வம் ஆகிய இருமுன்னாள் முதலமைச்சர்களின் மோதலால் பிளவு பட்டிருக்கும் நிலையில், இவர் தமிழக அரசியலில் மிகவும் நேர்த்தியான இடத்தில் இருக்கிறார். இந்த இரு தலைவர்களும் அம்மா ஜெயலலிதாவின் அரசியல் வாரிசு தான். தான் என்று உரிமை கோரியும் அம்மா மற்றும் எம் ஜிஆர் ஆகியோரின் தொண்டர்களின் விசுவாசம் தனக்கே இருப்பதாகக் கூறியும் வருகிறார்கள்.

அதிமுக எப்போதுமே எம் ஜி ஆர், அவரது வாரிசு ஜெயலலிதா என்று ஒற்றைத் தலைமையைப் போற்றியே வளர்ந்த கட்சியானதால், இப்போது அப்படிப்பட்ட ஒரு மக்கள் செல்வாக்கு பெற்ற தலைவர் இல்லாத நிலையில், சமூக நீதி என்ற சமத்துவக் கொள்கை அடிப்படையில் அமைந்த திராவிடக் கட்சியான திமுகவுக்கு எந்த அச்சுறுத்தலும் இல்லை. தமிழகத்தைப் பல காலம் ஆண்ட கட்சியான அதிமுகவில், தற்சமயம் மிகவும் பரிதாபகரமான சூழல் நிலவுகிறது.

காரணம், தமிழக அரசின் மேல் குற்றச்சாட்டுகளைக் குவித்து வரும் பாஜக மாநிலத் தலைவர் அண்ணாமலை, திமுகவுக்கு பெரிய எதிரியாக உருவெடுத்து வருகிறார். 2024 பாராளுமன்றத் தேர்தலில் பாஜகவுக்கு ஆதரவு திரட்ட, தமிழ்நாடு தழுவிய பாத யாத்திரை ஒன்றை அண்ணாமலை முன்னெடுத்துள்ளார். எனினும், பன்னெடுங்காலமாக பாஜக எதிர்ப்பு மனநிலையுடனே இருந்து வந்துள்ள இந்த திராவிட மாநிலத்தில் அது மிகப்பெரிய சவாலாகவே இருக்கும்.

மக்களவையில் எதிர்க்கட்சிகள் கொண்டு வந்த பிரதமர் நரேந்திர மோடி அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம், வியாழனன்று, எதிர்பார்த்தபடியே தோல்வியடைந்தது. 543 உறுப்பினர் கொண்ட அவையில் 301 என்ற எண்ணிக்கையுடன் அசுர பலம் பெற்றுள்ளது பாஜக. தங்களது நம்பிக்கையில்லாத் தீர்மானம் தோற்றுவிடும் என்று நன்றாகத் தெரிந்தும், மணிப்பூர் வன்முறை குறித்த பிரதமரின் மௌனத்தைக் கலைக்கும் ஒரே நோக்கில் தான் இத்தீர்மானம் கொண்டுவரப்பட்டதாக எதிர்க்கட்சிகள் கூறின. ஊடகங்கள், அரசியல் எதிரணி தவிரவும், சர்வதேச அளவிலும் மோடியின் இந்த நீண்ட மௌனம் கடும் விமர்சனத்துக்குள்ளானது என்பதைப் பற்றி எனது முந்தைய ஈழநாடு கட்டுரைகளில் குறிப்பிட்டுள்ளேன்.

மே மாதத் தொடக்கம் முதல், மணிப்பூரில், பெரும் பான்மை மெய்த்தி இனத்தவருக்கும் பழங்குடி குக்கி இனத்தவருக்கும் இடையில் ஏற்பட்ட இன மோதலில், 150க்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர், ஆயிரக் கணக்கானோர் புலம் பெயர்ந்துள்ளனர். இரண்டு குக்கி இனப் பெண்களை நிர்வாணப்படுத்தி ஊர்வலமாக இழுத்துச் சென்ற காணொலி, பல வாரங்களுக்குப் பின் வெளியாகி, சர்வ தேச அளவில் அது கடும் கோபத்தை எழுப்பிய நிலையில் தான் பகிரங்கமாகத் தன் மணிப்பூர் மௌனத்தைக் கலைத்தார் மோடி,

அதுவும் ஒரு சிறிய கண்டனக் கருத்தின் மூலம். நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீதான மூன்று நாள் வாதங்களின்போது ஆளும் கட்சி மற்றும் எதிர்க் கட்சிகளுக்கு இடையில் பல விரும்பத்தகாத கருத்துப் பரிமாற்றங்கள் இடம் பெற்றன. காங்கிரஸ் தலைவர் ராஹஜீல் காந்தி ,பிரதமர் மோடியை மணிப்பூரில் பாரத அன்னையைப் படுகொலை செய்துவிட்டதாகக் குறிப்பிட்டு, மணிப்பூர் இந்தியாவின் அங்கம் என்று பிரதமர் கருதவில்லையா என்ற கேள்வியையும் எழுப்பினார்.

ஆனால், அடுத்த நாள், நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்குப் பிரதமர் தனது விரிவான விளக்கத்தை அளிக்கும் போது, எதிர்க் கட்சிகளைச் செக்கில் இட்டு ஆட்டி விட்டார். எதிரணியினரின் குறைபாடுகள், ஒற்றுமையின்மை, சந்தர்ப்பவாதம், தேசிய உணர்வின்மை ஆகியவை குறித்து வழக்கமான தனது பாணியில் எள்ளி நகையாடினார். காங்கிரஸ் தலைமையிலான எதிரணி, அரசியல் வாரிசுரிமையை ஊக்குவிப்பதில் தான் அக்கறை கொண்டுள்ளதாக, ராஹஜீல் காந்தியைக் கிண்டல் செய்தார் மோடி.

தங்கள் புதிய கூட்டணியான ஐ.என்.டி. ஐ.ஏ-வின் துணையுடன் மணிப்பூர் குறித்துப் பிரதமரைப் பேச வைப்பதை விடுத்து, நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மூலம், மோடிக்குத் தங்கள் ஆட்சியின் ஒன்பது ஆண்டு காலத்தில், ஏழைகளுக்கான பல நலத் திட்டங்கள் கொண்டு வரப்பட்டது பற்றியும் சர்வதேச மேடையில் பாரதம் கொடிகட்டிப் பறப்பது பற்றியும் பட்டியலிட ஒரு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தன எதிர்க்கட்சிகள்.

இந்தியாவின் வளர்ச்சி குறித்தும் பொருளாதார மேம்பாடு குறித்தும் மட்டுமல்லாமல், தன்னை ஏழைகளின் காவலனாக நிலை நிறுத்திக்கொள்ளும் வாய்ப்பையும் மோடி தவறாமல் பயன்படுத்திக் கொண்டார். மேலும் ஜம்மு காஷ்மீர் தொடர்பான அரசியல் சாசனத்தின் 370 ஆவது சட்டப்பிரிவு நீக்கம் போன்ற பல வரலாற்றுப் பிழைத் திருத்தங்களைத் தமது ஆட்சியில் மேற்கொண்டதாக அவர் பெருமைப்பட்டுக்கொண்டார். மொத்த உள் நாட்டு உற்பத்தி அடிப்படையில், இந்தியாவை உலகின் மூன்றாவது சிறந்த பொருளாதாரமாக உயர்த்த, தமது அரசு உறுதி பூண்டுள்ளது குறித்தும் 2024இல் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றும் நம்பிக்கையையும் அவர் வெளிப்படுத்தினார். நாட்டின் நலன் குறித்த அக்கறை இல்லாமல், 'பிரதமராவேன்' என்ற கனவு காணும் அனைவரும் சந்தர்ப்பவாதத்தால் ஒன்று கூடியுள்ள பொருந்



தாக் கூட்டணியில் எதிர்க்கட்சித் தலைவர்கள் இணைந்துள்ளனர் என்று தமக்கே உரிய கிண்டலுடன் சாடினார்மோடி.

காங்கிரஸ் கட்சி, திமுக, தேசியவாத காங்கிரஸின் ஷரத் பவார் அணி ஆகியவை, மோடி பேசிக்கொண்டிருக்கும் போதே வெளி நடப்பு செய்தன. அதன் பிறகு அவர் மணிப்பூர் வன்முறை குறித்துப் பேசத் தொடங்கி, விரைவில் அங்கு அமைதி திரும்பும் என்றும் ஒட்டுமொத்த வளர்ச்சி மற்றும் நல்லிணக்கம் ஏற்பட்டு, பெருமையான ஒரு ஆபரணமாக மணிப்பூர் உருவெடுக்கும் என்றும் உறுதி கூறினார். பொதுத் தேர்தலுக்குப் பத்து மாதங்களே இருக்கும் நிலையில், விரோத மனப்பான்மை கொண்ட சீனாவுக்கும் மியான்மருக்கும் இடையில் சிக்கியிருக்கும், மலை சூழ்ந்த இந்தச் சிறிய வடகிழக்கு மாநிலத்தில் தனது வாக்குறுதியை எப்படிக் காப்பாற்றப் போகிறார் என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

எதிர்க்கட்சிகளுக்கு மோடி அளித்த காட்டமான பதிலடியின் போது அவர் கச்சத்தீவு குறித்துப் பேசியதைக் குறிப்பிட்ட விட்டால், நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீதான அனல் பறக்கும் விவாதங்களைப் பற்றிய எனது உரையாடல், முழுமையடையாது. இந்திரா காந்தி பிரதமராக இருந்த போது தாரை வார்க்கப்பட்ட கச்சத்தீவை மீட்டுத் தரக்கோரித் தனக்குக் கடிதம் எழுதும் திமுக தலைவர்கள், அந்த அம்மையாரின் காங்கிரஸஜீடன் கூட்டணி வைத்திருப்பது பற்றியும் கிண்டல் செய்தார்.

ராமேஸ்வரத்துக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் உள்ள, யாரும் இல்லாத ஒரு சிறிய தீவு தான் கச்சதீவு என்பதைத் தாங்கள் அறிவீர்கள். பல ஆண்டுகளாக, திமுகவும் அதிமுகவும் போட்டி போட்டுக் கொண்டு, அந்தத் தீவை மீட்டுத் தருமாறு மத்திய அரசைக் கோரி வருகின்றன. ராமநாதபுரம் ஜமீந்தாரின் சொத்துகளில் கச்சதீவும் அடங்கியிருந்தது என்று தமிழக நில ஆவணங்கள் குறிப்பிடுகின்றன. 1974 இல்

சிறிமாவோ பண்டாரநாயகே டில்லி வந்த போது, பாரதப்பிரதமர் இந்திரா காந்தி, சர்ச்சைக்குரிய சூழலில் இந்திய- இலங்கை கடல்சார் ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக, அந்தத் தீவின் உரிமையை இலங்கைக்கு மாற்றிக் கொடுத்தார். தந்திரமாக, சிங்கள அரசியல்வாதிகள், பல ஆண்டுகளாக, இந்தியத் லைமையைத் தங்கள் வழிக்குக் கொண்டு வரும் போக்குக்கு இது ஒரு உதாரணம்.

இராவணன் தமிழனா சிங்களனா என்று உங்கள் பாராளுமன்றத்தில் நடந்த விவாதம், உங்களுக்கு ரஜினிகாந்தின் பழைய ஹிட் பாடல் நினைவிருக்கிறதா? ராமன் ஆண்டாலும் ராவணன் ஆண்டாலும் எனக்கொரு கவலையில்லை இதன் அடுத்த வரிகளைத் தற்போதைய சமூக - அரசியல் சூழலுக்கேற்ப, உங்கள் கற்பனைக் குதிரையைத் தட்டி விட்டு, நீங்களே இட்டு நிரப்பிக்கொள்ளுங்கள். ஆனால், 'எமக்கொரு கவலையில்லை' என்று மட்டும் உங்கள் கவிதையை முடிக்காதீர்கள். மீண்டும் சந்திப்போம். வணக்கம்.

முல்லைத்தீவு
புனிதபூமி அன்பு இல்லத்தின்
423 குழந்தைகளின் வாழ்வுக்காகவும்
கல்வி மேம்பாட்டிற்காகவும்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகை நடாத்தும்
12வது ஆண்டு
இன்னிசை மாலையும்
இராப்போசன விருந்தும்
29 ஒக்டோபர் 2023 ஞாயிற்றுக்கிழமை
தொடர்புகளுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600

# ஜனாதிபதி தேர்தலை தமிழ் மக்கள் எவ்வாறு பயன்படுத்த வேண்டும்? ஏன் பயன்படுத்த வேண்டும்?

அடுத்த ஆண்டு ஜனாதிபதி தேர்தல் இடம் பெறவுள்ளது. வரவு செலவுத் திட்டத்திற்கு பின்னர், இதற்கான அறிவிப்பு வெளியாகலாம். யார் பிரதான வேட்பாளர்கள் என்னும் தகவல்கள் இது வரையில் வெளியாகவில்லை. எனினும் அவற்றை ஊகிப்பது கடினமான காரியமல்ல. ரணில் விக்கிரமசிங்கவே பிரதான வேட்பாளராக இருப்பார். அவரை எதிர்த்து எவர் நிறுத்தப்படுவார் என்பதை இப்போதைக்கு ஊகிப்பது கடினம்.

ஒன்றில் ரணில் விக்கிரமசிங்கவின் நகர்வுகளை தோற்கடிக்க வேண்டுமென்னும் வியூகமொன்று, உள்ளுக்குள்ளும் வெளியிலும் வகுக்கப்படுமாக இருந்தால் மட்டும் தான், ஒரு பலமான பொது வேட்பாளரை நாம் காண முடியும். இல்லா விட்டால் ரணில் விக்கிரமசிங்கவிற்கு முன்னால் ஒரு பலவீனமான வேட்பாளரே இருப்பார்.

ஒரு வேளை, சஜித் பிரேமதாச தேர்தலில் போட்டியிடுவாராயின், தேர்தல் களம் சற்று சூடுபிடிக்கும். ஏனெனில், ஜனாதிபதி தேர்தலில் எவர் வெல்ல வேண்டுமென்றாலும் கூட அவருக்கு எண்ணிக்கையில் சிறுபான்மை மக்களின் ஆதரவு கட்டாயம் தேவை. ஏனெனில் தற்போதுள்ள சூழலில், தனிச் சிங்கள வாக்குகளில் வெற்றி பெறுவதை ஒருவரால் நினைத்துக் கூட பார்க்க முடியாது. அவ்வாறான அரசியல் சூழலும் இல்லை. அதனை உருவாக்குவதற்கான அரசியல் காரணங்களும் இல்லை. ஈஸ்டர் தாக்குதல் கோட்டபாயவிற்கு அவ்வாறான சூழலை உருவாக்குவதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தது.

எண்ணிக்கையில் சிறுபாண்மை மக்களை பொறுத்த வரையில் ரணில் விக்கிரமசிங்கவிற்கு முன்னால் ஒரு பலமான பொது வேட்பாளர் இல்லையென்றால், மலையக மற்றும் முஸ்லிம் மக்களின் தெரிவு ரணிலாக மட்டுமே இருக்கும். இந்த நிலையில் தமிழ் மக்களின் வாக்குகள் மீண்டும் பிரதான இடத்தை பிடிக்கும்.

2005 தேர்தலில், ரணிலை தோற்கடிப்பதில் தமிழ் மக்களின் வாக்குகள் ஒரு ஆயுதமாக பயன்படுத்தப்பட்டது. 2015 இல், மகிந்த ராஜபக்சவை தோற்கடிப்பதில், தமிழ் மக்களின் வாக்குகள் ஒரு ஆயுதமாக பயன் படுத்தப்பட்டது. தற்போது மீண்டும் அவ்வாறானதொரு சந்தர்ப்பம் தமிழ் மக்களை நாடி வருகின்றது.

இதனை தமிழ் தேசிய தலைமைகள் என்போர் எவ்வாறு பயன்படுத்திக் கொள்ளப் போகின்றனர்? முன்னைய இரண்டு சந்தர்ப்பங்களிலும், தமிழ் மக்களின் வாக்குகள், ஒரு இலக்கிற்காக கையாளப்பட்டது. அந்த இலக்கு வெற்றியையும் பெற்றது ஆனால் அதன் பயனை தமிழ் மக்களால் அடைய முடிந்ததா? பதில் இல்லை என்பதே! இந்த நிலையில் மீளவும் தமிழ் மக்களின் வாக்குகள், ஜனாதிபதி தேர்தலில் முக்கிய பங்கை ஆற்றப் போகின்றது. ஆனால், இதனை தமிழ் மக்களுக்கு நன்மை சேர்பிக்கும் வகையில் எவ்வாறு கையாளுவது?

2005 தேர்தல் பகிஸ்கரிப்பு, ரணில் விக்கிரமசிங்கவை மட்டும் தோற்கடிக்கவில்லை மாறாக, விடுதலைப் புலிகளையும் அரசியல் அரங்கிலிருந்து அழித்தது.

ஏனெனில், ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிரான தேர்தல் பகிஸ்கரிப்பு, இந்திய மற்றும் மேற்குலக விகங்களுக்கு எதிரான ஒன்றாகவே நோக்கப்பட்டது.

இது தொடர்பில் எனது முன்னைய பத்திகளில் சிலவற்றிலும் சுட்டிக்காட்டியிருக்கின்றேன். ரணில் விக்கிரமசிங்க இந்தியாவுடனான இணைப்புக்கான திட்டங்கள் தொடர்பில் பேசிக்கொண்டிருந்தார்.

அதே வேளை, அமெரிக்காவோ, ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான, ஜக்கிய



தேசியக் கட்சியை ஆட்சிக்கு கொண்டு வருவதில் ஆர்வம் காட்டியது. இவ்வாறானதொரு நிலையிலேயே, விடுதலைப்புலிகளின் தலைமை, ரணில் விக்கிரமசிங்கவை தேர்தல் பகிஸ்கரிப்பு மூலம், அதிகாரத்திலிருந்து அகற்றும் முடிவை எடுத்தது. விடுதலைப் புலிகளின் தலைமையை பொறுத்தவரையில், சமாதான முன்னெடுப்பு ஒரு அரசியல் பொறி.

அதிலிருந்து தப்ப வேண்டுமாயின், ரணிலை அரங்கிலிருந்து, அகற்ற வேண்டும், அதன் மூலம், மீண்டும் யுத்தத்தை ஆரம்பிப்பதற்கான சூழலை உருவாக்கலாம். ஏனெனில் சமாதானத்தை முன்னெடுக்கும் நோக்கம் இருந்திருந்தால், ரணிலுடன் தான், புலிகள் காலத்தை செலவிட்டிருக்க வேண்டும். அதனை முழுமூச்சுடன் கையாண்டிருக்க வேண்டும். ஆனால் மேற்குலகத்திற்கு எதிரான நிலைப்பாட்டைக் கொண்டிருந்த, மகிந்த ராஜபக்சவை, தென்னிலங்கையின் தலைமைத்துவத்தை கைப்பற்றுவதற்கு ஒத்துழைத்தால், நோர்வே தலைமையிலான மேற்குலகின் சமாதான முன்னெடுப்புக்களை தொடர முடியாத சூழலை ஏற்படுத்தலாமென்றே புலிகள் கணக்குப் போட்டனர். அவர்களது கணக்கு சரி.

ஏனெனில், அவர்கள் எதிர்பார்த்தது போன்றே, மகிந்த ராஜபக்ச நோர்வேயின் சமாதான முன்னெடுப்புக்களை தொடர்வதை விரும்பவில்லையென்று அறிவித்தார். நாங்களே பிரச்சினைகளை பேசித் தீர்த்துக் கொள்வோம் என்றார்.

எவ்வாறு, இந்திய-இலங்கை ஒப்பந்தத்திற்கு எதிரான நிலைப்பாட்டை எடுத்திருந்த பிரேமதாச, இந்திய படைகளை வெளியேற்றுவதற்காக விடுதலைப் புலிகளுடன் இணக்கப்பாட்டை ஏற்படுத்திக் கொண்டாரோ, அவ்வாறானதொரு சூழல் தான், மகிந்த ராஜபக்ச விடயத்திலும் ஏற்படுத்தப்பட்டது. பிரேமதாச புலிகள் உடன்பாட்டின் மூலம், இந்திய படைகளை வெளியேற்றும், அவர்களது எதிர்பார்ப்பு நிறைவேறியது. புலிகள் தப்பித்துக் கொண்டனர். அதே போன்று, ரணிலை அகற்றும் அவர்களது இலக்கும் நிறைவேறியது. அவர்கள் எதிர்பார்த்தது போன்று, நோர்வேயின் சமாதான முன்னெப்புக்களிலிருந்து வெளியேறுவதற்கான சூழல் உருவாகியது.

ஆனால் இம்முறை சத்திரசிகிச்சை வெற்றி, ஆனால் நோயாளி மரணமுற்றார் என்னும் நிலைமையே புலிகளுக்கு ஏற்பட்டது. மகிந்த ராஜபக்ச தலைமையிலான அரசாங்கம், முழு வேகத்துடன் இராணுவ ரீதியில் புலிகளுக்கு எதிராக திரும்பிய போது, ஒட்டு மொத்த உலகமும் புலிகளுக்கு எதிராக இருந்தது. முன்னர் இந்தியா மட்டுமே இருந்தது. இந்தியா கடுமையான நடவடிக்கைகளை எடுக்காமையால், புலிகளால் தப்பித்துக் கொள்ள முடிந்தது

ஆனால் இம்முறை ஒட்டுமொத்த மேற்குலகும் விடுதலைப் புலிகளுக்கு எதிராக இருந்தமையால், புலிகளால், யுத்தப் பொறியிலிருந்து தப்பித்துக் கொள்ள முடியவில்லை. சமாதான பொறியிலிருந்து தப்பித்துக் கொள்ளவதற்காக புலிகள் வகுத்த யுத்தப் பொறிக்குள், புலிகளே அகப்பட்டுக் கொண்டனர். இந்த பின்புலத்தில் நோக்கினால், ரணில் விக்கிரமசிங்கவை தோற்கடிக்கும் தேர்தல் பகிஸ்கரிப்பு தந்திரோபாயம் இறுதியில், தமிழ் மக்களுக்கு மோசமான எதிர் விளைவுகளையே ஏற்படுத்தியது.

2015இல் மகிந்த ராஜபக்சவை தோற்கடிக்கும் தந்திரோபாய நகர்விலும், தமிழ் மக்களின் வாக்குகள் பிரதான பங்கை வகித்திருந்தது. இந்த இடத்தில், சிலர், ஒரு வாதத்தை முன்வைக்கலாம். அதாவது, மலையக மற்றும் முஸ்லிம் மக்களின் வாக்குகளும் தானே அவ்வாறு பயன்படுத்தப்பட்டது. வடக்கு கிழக்கு தமிழ் மக்களின் வாக்குகளுக்கு மட்டும் அப்படியென்ன விசேட தகுதியுண்டு? கேள்வியில் தவறில்லை ஆனால் தர்க்க ரீதியில் தமிழ் மக்களின் வாக்குகள்


கட்டுரையாளர்:-
தாயகத்தில் இருந்து
- யசீந்திரா -



ஆற்றும் பங்கை, ஏனையவர்களது வாக்குகள் வழங்காது. ஏனெனில், ஏனையவர்கள் எந்தவொரு சந்தர்பத்திலும், தேர்தல் பகிஸ்கரிப்பு அல்லது, குறிப்பிட்ட நிலைப்பாட்டை அடிப்படையாகக் கொண்டு, தேர்தலை பயன்படுத்தும் தீர்மானங்களை எடுக்கவே மாட்டார்கள்.

ஏனெனில் அவர்களிடம் அவ்வாறான அரசியல் நிலைப்பாடு இல்லை. மத்தியிலுள்ள அரசாங்கத்துடன் பேரம் பேசி, அமைச்சுப் பொறுப்புக்களை பெறுவதன் மூலம், அரசியலை முன்னெடுப்பதே அவர்களிடமுள்ள அரசியல் உபாயமாகும். இந்த பின்புலத்தில் நோக்கினால், 2005இல் ரணிலை தோற்கடிப்பதில் ஈழத் தமிழ் வாக்குகளே பயன்பட்டது. அதே போன்று, 2015இல், மகிந்த ராஜபக்சவை தோற்கடிப்பதில் ஈழத் தமிழ் வாக்குகளே பிரதான பங்கை வகித்தது. அதே போன்று, 2024 தேர்தலிலும் ஈழத் தமிழ் வாக்குகளே பிரதான பங்கை வகிக்கப் போகின்றன. இந்த இடத்தை தமிழ் தலைமைகள் என்போர் எவ்வாறு பயன்படுத்திக் கொள்ளப் போகின்றனர்? இதனை அடிப்படையாகக் கொண்டு, எவ்வாறு தமிழ் மக்களை ஒரு அரசியல் சமூகமாக நிறுவப் போகின்றனர்?

தென்னிலங்கையின் பிரதான வேட்பாளர்கள் முக்கியமாக ரணில் விக்கிரமசிங்க அல்லது சஜித் பிரேமதாச அல்லது பிறிதொருவர், எவராக இருப்பினும், அவர்கள் தமிழ் மக்களை நோக்கித் திரும்பும் சூழலை ஏற்படுத்த வேண்டும். வேறு வழியில்லாமல், தமிழ் மக்கள் தங்களுக்குத் தானே வாக்களிப்பார்களென்னும் எண்ணத்திற்கு வாய்ப்பளிக்கக் கூடாது. ஒரு வேளை ரணில் விக்கிரமசிங்க அவ்வாறு (22ம் பக்கம் பார்க்க)


மதுரை ஸ்ரீ மீனாட்சி அம்மன் துணை

ஜாதகம் பார்க்கப்படும்

கடந்த 40 வருடமாக தென்னிந்தியா, ஆசியா, அவுஸ்திரேலியா, ஐரோப்பா, இலண்டன் வட அமெரிக்கா மற்றும் கனடாவில் பல தமிழ் மக்களின் வாழ்க்கையை மாற்றியமைத்த திரு. கோ. காசிலிங்கம் அவர்கள் இப்போது கனடாவில்.

பிறந்த வருடம், மாதம், திகதி, நேரத்தை சொன்னால் போதும் நந்தி வாக்கியம் மூலம் நாள் நட்சத்திரம் கண்டு நடந்தது நடக்கப் போவதை தனது திறமையால் மிகத் துல்லியமாகக் குறித்து எழுதி பலன் சொல்லப்படும்.

சொன்னால் நடக்கும் வாக்கு சித்தி!

குழந்தைகளுக்கு ஜாதகம் எழுதிக் கொடுக்கப்படும் திருமணப் பொருத்தம் பார்த்து சொல்லப்படும்.

கோ. காசிலிங்கம்

Phone: 437-925 5643 - Whatsapp: 437- 329 4164 - India: 0091 6384381120



# இந்திய அரசியலில் ஈழத்தமிழர் விவகாரம்




கட்டுரையாளர்
தமிழகத்தில் இருந்து
கேணல் ஹரிகரன்


இந்தியாவில் அடுத்த ஆண்டு பொதுத் தேர்தல் நடக்கவுள்ள நிலையில், இலங்கைத் தமிழர் விவகாரம் மீண்டும் இந்திய அரசியலில் பேசுபொருளாக மாறுகின்ற அறிகுறிகள் தென்படுகின்றன.

இந்திய அரசுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் கொண்டு வந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதம் கடந்த செவ்வாய்க்கிழமை இந்திய பாராளுமன்றத்தில் இடம் பெற்ற போது, உரையாற்றிய தி.மு.க.வின் பாராளுமன்ற குழுத் தலைவர் ரி.ஆர்.பாலு, இலங்கையில் 13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த மத்திய அரசு தவறிவிட்டது என்ற குற்றச்சாட்டை முன்வைத்திருந்தார்.

பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான பா.ஜ.க. அரசாங்கத்தின் மீது தி.மு.க. சார்பில் முன் வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகளில், 13 ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்த தவறியதும் ஒன்றாக பட்டியலிடப்பட்டது ஆச்சரியம்.

காங்கிரஸ் ஆட்சியில் இருந்த போது தான், இலங்கையில் 13ஆவது திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டது.

1987இல் ராஜீவ் காந்தி ஜே.ஆர்.ஜயவர்தனவுடன் செய்து கொண்ட அமைதி உடன்பாட்டுக்கு அமையவே, 13 ஆவது திருத்தச் சட்டம் இலங்கை பாராளுமன்றத்தில் கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டது.

அந்த திருத்தச் சட்டத்தை ஜே.ஆர் தொடக்கம், ரணில் விக்கிரமசிங்க வரை ஆட்சியில் இருந்த எந்தவொரு ஜனாதிபதியும், முழுமையாக அமுல்படுத்தவில்லை. அதனை இந்தியா வேடிக்கை பார்த்துக் கொண்டேயிருந்தது.

ரி.ஆர்.பாலு கூறுவது போல, இந்திய மத்திய அரசாங்கம் அதற்கு அழுத்தம் கொடுக்கவில்லை என்பது சரியானது. பா.ஜ.க. அரசாங்கம் மாத்திரமல்ல, காங்கிரஸ் கூட்டணி ஆட்சியில் இருந்த போதும், அவ்வாறான நிலையே காணப்பட்டது.

13 ஆவது திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டு, 36 ஆண்டுகளாகி விட்ட நிலையில், பா.ஜ.க. ஆட்சியில் இருந்தது, 16 வருடங்கள் தான். எஞ்சிய சுமார் 20 வருடங்களில், வி.பி.சிங் மற்றும் சந்திரசேகர் பிரதமராக இருந்த சுமார் ஒன்றரை ஆண்டுகள் தவிர எஞ்சிய காலம் காங்கிரஸ் கூட்டணியே ஆட்சியில் இருந்தது

அந்தக் காலகட்டங்களில் காங்கிரஸ் அரசாங்கம், 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துமாறு இலங்கைக்கு அழுத்தம் கொடுக்கவில்லை. 2009இல் போர் முடிந்த போதும், 2014 வரையில் காங்கிரஸ் கூட்டணி அரசாங்கமே பதவியில் இருந்தது.


காங்கிரஸ் அரசாங்கத்தில் பெரும்பாலான காலத்தில் தி.மு.க. அதனுடன் கூட்டணி வைத்திருந்தது. அப்போதெல்லாம் தி.மு.க.வோ, காங்கிரசோ 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த அழுத்தம் கொடுக்கவில்லை.

இவ்வாறான நிலையில், பா.ஜ.க. அரசாங்கத்தின் மீது அதனை ஒரு குற்றச்சாட்டாக தி.மு.க. முன்வைப்பது அறம் அல்ல.

தமிழகத்தில் காலூன்றுவதற்கு பா.ஜ.க. கடும் பிரயத்தனம் செய்து வருகின்ற நிலையில் அதற்காக பா.ஜ.க. தலைவர்கள் மாறுபட்ட கருத்துக்களை முன் வைக்கவும் துணிந்துள்ள நிலையில், தான் ரி.ஆர்.பாலுவின் இந்தக் கண்டனம் வெளியாகியிருக்கிறது.

பா.ஜ.க.வின் தமிழக தலைவர் அண்ணாமலையின் இலங்கைப் பயணம், அதன் பின்னர் புலம்பெயர் தமிழர்களுடனான அவரது சந்திப்பு ஆகியவற்றுக்குப் பின்னர் பா.ஜ.க. இலங்கைத் தமிழர் விவகாரத்தை கையில் எடுத்துக் கொள்ள ஆரம்பித்திருக்கிறது.

13ஆவது திருத்தச்சட்டத்தை இந்திய அரசு நிறைவேற்றச் செய்யும் என்று அண்ணாமலை அடிக்கடி கூறிவருகிறார். வெறும் பேச்சுக்களுக்கு அப்பால் 13 குறித்த இந்திய அரசின் அழுத்தமான நகர்வுகள் என்று எதையும் கூறமுடியாது.



இவ்வாறான நிலையில் தான், இராமேஸ்வரத்தில் கடந்த ஜூலை 28ஆம் திகதி இடம்பெற்ற பிரசாரக் கூட்டம் ஒன்றில் உரையாற்றிய உள்துறை அமைச்சர் அமீத் ஷா, இலங்கையில் தமிழர்கள் அழித்தொழிக்கப்படுவதற்கு காங்கிரஸ் கூட்டணி அரசாங்கமே காரணமாக இருந்தது என்ற குற்றச்சாட்டை முன் வைத்திருந்தார்.

ஹிந்தியில் அவர், நரசங்கார் என்ற வார்த்தையைப் பயன்படுத்தியிருந்தார். இது படுகொலை என்பதை விடக் கனதியானது. அதேவேளை, இனப்படுகொலை என்ற நேரடிப் பொருளை அது கொடுக்கவில்லை. ஆயினும், நரசங்கார் என்பது, மனித அழிப்பு அல்லது அழித்தொழிப்பு என்ற பதத்துடன் ஒத்துப் போக கூடியது. அந்தக் கூட்டத்தில் அமித் ஷாவின் பேச்சை தமிழில் மொழியாக்கம் செய்தவரும் தமிழர்கள் அழித்தொழிக்கப்பட்டனர் என்ற பதத்தையே பயன்படுத்தியிருந்தார்.

மத்தியில் ஆட்சியில் உள்ள பா.ஜ.க.வின் சக்தி வாய்ந்த தலைவர்களில் ஒருவரான அமித் ஷா, இலங்கையில் தமிழர்கள் அழித்தொழிக்கப்பட்டனர் என்பதை ஏற்றுக் கொண்டிருக்கிறார்.

அவரது இந்தக் கருத்து மத்திய அரசின் நிலைப்பாட்டை பிரதிபலிக்கிறது என்று கூற முடியாது. கட்சிக் கூட்டத்தில் பேசப்பட்ட விடயம் அது. எவ்வாறாயினும், மத்திய அரசில் சக்திவாய்ந்த ஒரு தலைவராக இருப்பவர் இந்தக் கருத்தைக் கூறியிருப்பதை சாதாரணமாக எடுத்துக் கொள்ள முடியாது.

கடந்த மே 18ஆம் திகதி முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை நினைவேந்தலை முன்னிட்டும், கறுப்பு ஜீலைப் படுகொலை நினைவு நாளை முன்னிட்டும் கனேடியப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ அறிக்கை வெளியிட்ட போது, அதனை கடுமையாக எதிர்த்தவர், கண்டித்தவர் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி.

ஆனால், இந்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, தமிழர்கள் அழித்தொழிக்கப்பட்டனர் என்று குறிப்பிட்டதே தெரியாதது போலப் பம்மிக் கொண்டிருக்கிறார் அவர்.

அமித் ஷாவின் கருத்து வெளியாகி, இரண்டு வாரங்களாகி விட்ட நிலையிலும், இலங்கை அரசாங்கத்தின் சார்பில் அதற்கு பதிலடி கொடுக்கப்படவில்லை.

அமித் ஷாவின் கருத்தை இலங்கை அரசாங்கம் கண்டு கொள்ளவில்லை எனக் கருத முடியாது. அமித் ஷா பா.ஜ.க.விலும், இந்திய அரசாங்கத்திலும் முக்கியமானவர். மோடிக்கு அடுத்த நிலையில் உள்ள சக்தி வாய்ந்தவர்.

அரசியல், தேர்தல் வியூகங்களை வகுப்பதிலும், கட்சியை வழி நடத்துவதிலும் தனது திறனை நிரூபித்தவர். அவ்வாறான ஒருவரின் கருத்தை இலங்கை அரசாங்கம் புறக்கணித்திருக்க வாய்ப்பில்லை.

எதிர் நிலைப்பாட்டை எடுப்பதை விட அமைதியாக இருப்பதே சிறந்தது என்ற முடிவுக்கு அரசாங்கம் வந்திருக்கலாம் என்றே தெரிகிறது. தமிழர்கள் அழிக்கப்



பட்டதற்கு காங்கிரஸ் கூட்டணி அரசே காரணம் என்ற அமித் ஷாவின் கருத்து தமிழக அரசியலில் தலையெடுப்பதற்கான பா.ஜ.க. வியூகத்தின் ஒரு அம்சமாகவே பார்க்கப்பட வேண்டியது.

தமிழக அரசியலில் பல சந்தர்ப்பங்களில், இலங்கைத் தமிழர் விவகாரம் தேர்தல் பிரசார உத்தியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இலங்கைத் தமிழர் இனப்படுகொலைகள், தமிழக மக்கள் மீது உருவாக்கிய அனுதாப அலையை பயன்படுத்தி, வாக்குகளைப் பெற்றுக் கொள்ளலாம் என்று தமிழக கட்சிகள் மாத்திரமன்றி தேசியக் கட்சிகளும் கனவு கண்டிருக்கின்றன.

ஆனால், தமிழக அரசியலில் இலங்கைத் தமிழர் விவகாரம் பேசு பொருளாக இருந்தாலும், வெற்றி தோல்விகளை அது தீர்மானிக்கும் நிலை இருக்கவில்லை என்பதே உண்மை. அவ்வாறு வலிமையானதாக இருந்திருந்தால், 2009 தேர்தலில் தமிழகத்தில் காங்கிரஸ் – தி.மு.க கூட்டணி முழுமையாக தோற்கடிக்கப்பட்டிருக்க வேண்டும். அது நடக்கவில்லை.

அதற்குப் பின்னரேனும் காங்கிரஸ் கட்சி தமிழகத்தில் தோற்கடிக்கப்படும் நிலை இருக்கவில்லை. ஆக, தமிழகத்தில் ஈழத் தமிழர் விவகாரம் உணர்வு பூர்வமான விடயமாக பேசப்பட்டாலும், அது வாக்களிப்பு பாரம்பரியத்தில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்துவதில்லை என்பதே உண்மை.

இது அண்ணாமலைக்கோ, அமித் ஷாவுக்கோ தெரியாத இரகசியம் அல்ல. ஆனாலும் அவர்கள், காங்கிரஸ் கட்சியையும் தி.மு.க.வையும் தோற்கடிப்பதற்கான ஒரு பெரிய வியுயூகத்துக்கான ஒரு ஆயுதமாக இதனையும் கையில் எடுத்திருக்கிறார்கள்.

தமிழர்கள் அழிக்கப்பட்டனர் என்பது உலகளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்ற ஒரு உண்மை. அதனை இந்திய தலைவர் ஒருவர் ஏற்றுக் கொண்டிருப்பதை ஆச்சரியமாக பார்க்கும் நிலை இருக்கிறது என்றால், அது தமிழர்களின் பின்னடைவு என்று தான் கூற வேண்டும்.

இனப்படுகொலையை நிறுவுவதற்கு தமிழர்கள் இன்னும் அதிகதூரம் பயணிக்க வேண்டும் என்பதையே இது காட்டுகிறது.


சிவமயம்



ஸ்ரீ கைலாசம்
சைவசமய கிரியைகள் சேவை

சமயதீட்சை
அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)
அந்தியேட்டி (தர்ப்பை சுடுதல்)

ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு
சைவக்குருக்களை
தொடர்பு கொள்ளவும்
"இணுவில் திருவூர்"
சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்
647.629.5468
msvkurukkal@gmail.com

# தென்னிலங்கையின் இராஜதந்திர அரசியலுக்குள் மீளவும் இந்தியா சிக்கியுள்ளதா?

இலங்கை அரசியலில் இந்திய செல்வாக்கு வளர்ச்சியடைந்து வருவதாகவே தென்னிலங்கை அரசியல்வாதிகளும் புலமையாளர்களும் குறிப்பிடுகின்றனர். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இந்திய விஜயத்திற்கு பின்பான தென்னிலங்கை அரசியலில் மீளவும் இந்திய எதிர்ப்புவாதம் எழுச்சியடையத் தொடங்கியுள்ளது.

ஈழத்தமிழர் மீதான தென்னிலங்கையின் அடக்குமுறைக்கு அடிப்படைக் காரணமாக இந்தியா மீதான அச்சமே என்பதை ஈழத்து வரலாற்று ஆசிரியரான மு.திருநாவுக்கரசு தனது ஆய்வுகளில் குறிப்பிடுகின்றனர். இலங்கையின் வரலாறு முழுவதும் தென்னிலங்கை ஆட்சியாளரின் இந்திய எதிர்ப்புவாதம் ஈழத்தமிழர் மீது வன்முறையையும் நில ஆக்கிரமிப்பினையும் படுகொலை அரசியலை ஏற்படுத்தியுள்ளதாகவே தெரிகிறது.

அத்தகைய நிகழ்வின் தொடர்ச்சியாக இரு நாட்டுக்குமான இணைப்பிளை உருவாக்கும் விதத்தில் பாலம் அமைப்பது பற்றிய உரையாடல் முக்கியத்துவம் பெறுகிறது. இந்திய எதிர்ப்பு வாதத்தை கொண்டுள்ள தென் இலங்கை ஆட்சியாளர்கள் ஏன் இரு நாட்டுக்குமான நிலத்தொடர்பினை முதன்மைப் படுத்தும் உரையாடலை ஏற்படுத்தியுள்ளனர் என்பதற்கான காரணத்தை தேடுவதாக அமையவுள்ளது.

இந்தியாவின் மாநிலமாக இலங்கையை மாற்ற முயற்சிக்கிறார்கள். பாலத்தை நிர்மாணிப்பதால் இந்தியாவின் நலன்களே நிறைவேறும். இலங்கையின் தேவை நிறைவேறாது என பேராதனைப் பல்கலைக்கழக விரிவுரையாளரும் ஐக்கிய மக்கள் சக்தியின் புத்திஜீவிகள் ஒன்றியத்தின் தலைவருமான பேராசிரியர் ஆனந்த ஜயவிக்கிரம குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கும் போது. இலங்கையின் தேவைப்பாட்டுகளன்றி இந்தியாவின் நலன்களுக்கு ஏற்பவே பாலம் அமைக்கும் விடயம் கையாளப் படுகிறது.

இதனால் இலங்கையின் நலன்களை விட இந்தியாவின் தேவையே மேலோங்கியுள்ளது. இலங்கையில் 6.7 சத வீத மானவர்கள் வேலையின்றியுள்ளனர். வறுமை 27.4 சதவீதமாக அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. பொருளாதாரம் சரியான நிலைக்குள் இன்னும் வரவில்லை அதிகாரத்தைப் பெறும் நோக்கிலான பொறுப்பற்ற விதத்தில் அரசியல் விளையாட்டிலேயே தற்போதைய ஜனாதிபதியுடன் மொட்டுக் கட்சி ஈடுபட்டுள்ளது.

பொருளாதார நெருக்கடிக்கு தீர்வாக அதானி குழுமத்திற்கு வடக்கின் தேசிய வளங்களை விற்பதே இந்த அரசாங்கத்தின் கொள்கையாகும். நாடுகளுக்கு வழங்களை ஏலம் விடுவது பொருளாதார நெருக்கடிக்கு தீர்வாகாது என்கிறார். இந்தியாவிற்கு செல்லும் பயணத்தை அதிகரிப்பதற்கு தரைப்பாலங்கள். பாலங்கள். எண்ணெய்க் குழாய்கள். மின்சாரம் தருவிக்கும் தொடர்புகள். மற்றும் தரையிறக்கும் உட்கட்டமைப்புகளை உருவாக்க வேண்டும் என இலங்கைக்கான .ந்தியத் தூதுவர் மிலிந்த மொறக்கொட தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடும் போது பொருளாதார வளர்ச்சியில் இருந்து பயனடைவதற்கும் தற்போதைய பொருளா தார நெருக்கடியிலிருந்து மீண்டு வருவதற்கும் அவசியமானது. அத்துடன் தமிழர் பிரச்சினைக்கு இலங்கைக்குள் தீர்வு காணப்பட வேண்டும் என்றும் இந்தியாவுக்கும் அதன் அண்டைத் தீவுக்கும் இடையிலான உறவுகளை இணைப்பதற்கு நில .ணைப்பு முக்கியமானதெனக் குறிப்பிட்டார்.

இதே கருத்து நிலையைக் கொண்டுள்ள தயான் ஜெயத்திலக்கா Ceded Island Ranil's Indianisation of Sri Lanka எனும் கட்டுரையின் ரணில் விக்கிரமசிங்கவின் இலக்கு இலங்கைத்தீவு இந்தியாவின் கூட்டாட்சியில் ஒரு நடைமுறை மாநிலமாக விளங்கும் என்றும் இலங்கைப் பிரஜைகள் இத்தீவை



கூட்டாக சொந்தமாக கருத மாட்டார்கள் எனக் குறிப்பிட்டுள்ளார். மேலும் அவர் குறிப்பிடும் போது. பெரும் பாலான தீவுவாசிகளை கூலி அடிமைகளாகவும் மாற்றப்படுவதையும் ஒரு சிலர் இந்திய பெரிய மூலதனத்தின் இளைய பங்காளகளாக ஒத்துழைப்பதனையும் பரந்த பொருளாதார நெறி முறையின் தர்க்கம் உறுதி செய்யும் எனவும் எச்சரித்துள்ளார்.

இவ்வாறு இந்தியாவுக்கான தரைத் தொடர்பு சார்ந்து தென்னிலங்கை புத்திஜீவிகள் அரசியல்வாதிகள் முன் வைக்கும் கருத்துக்கள் அமையும் போது தென் இலங்கை அரசியல் தலைமைகள் .ணைப்பினை வலியுறுத்துவதன் நோக்கம் எதுவாக அமையும் என்பதே பிரதான கேள்வியாகும்.

ஒன்று. இத்தகைய இணைப்பின் மூலம் இந்தியாவை திருப்திப்படுத்த தென் இலங்கை அரசியல் முனைகிறதென்பது தெளிவாக தெரிகிறது. அதாவது இந்தியாவை அரவணைத்துக் கொண்டு ஈழத்தமிழரது அரசியல் தீர்வை இலங்கை ஆட்சியாளர்களின் விருப்புக்கு உட்படுத்துவதாகவே உபாயம் உள்ளது. அதனை மிலிந்த மொறக்கொட தனது வெளிப்படுத்துகையில் தெரிவித்துமுள்ளார்.

மிலிந்த மொற கொட தமிழரின் அரசியல் பிரச்சினைக்கான தீர்வு உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரப் பரவலாக்கவே போதுமானது எனக் கருதுபவர். அதனால் ஈழத்தமிழரது அரசியல் பிரச்சினைவை இலங்கைத் தீவுக்குள் முடித்துக் கொள்வதே ஆட்சியாளர்களது விருப்பாக உள்ளது.

இந்தியாவின் தலையீட்டை இனப் பிரச்சினையிலிருந்து அகற்றுவதற்கு இந்தியாவுடன் பொருளாயதார வர்த்தக ரீதியில் பலமாக ஒத்துழைப்பதன் மூலம் சாத்தியப்படுத்த முடியுமெனக் எண்ணுகின்றனர். இந்தியா தமிழர் விடயத்தில் கவனம் செலுத்தும் என்ற அச்சம் தென் இலங்கை ஆட்சியாளர்களுக்கு மிக நீண்ட காலமாக உள்ளது. ஏற்கனவே இந்தியாவே ஆயுதப் போராட்டத்தை தொடக்கியது என்பது தென் இலங்கை ஆட்சியாளர்களுக்கு வலுவான ஆதாரமாக உள்ளது. மீளவும் அதற்கான வாய்ப்புக்கள் உண்டா என்பதில் புலனாய்வாளர்கள் விசாரணைகளை மேற் கொள்ளவதாக தகவல்கள் உண்டு என்பது நினைவுபடுத்தத் கூடிய விடயமாகும்.

அதனால் இந்தியாவிடம் சரணடைவதன் மூலம் அதனை கட்டுப் பாட்டுக்குள் கொண்டு வர முடியும் என்ற எண்ணத்துடன் தென் இலங்கை தரப்பு பயணிக்க முனைகிறது.

இரண்டு. ஆதாம் பாலம் மற்றும் சேது தொடர்பில் எழுந்துள்ள கற்பனைகளுக்கு முன்னால் அத்தகைய பாலம் அமைப்பதற்கான வாய்ப்புக் குறைவானதென்றே தென் இலங்கை கருதுகிறது.

இந்தியாவில் மதசார் கருத்தியலாக எழுச்சியடைந்துள்ள இந்துத்துவம் இராமர் அணைக்கு மரபு சார்ந்து கொடுக்கும் முக்கியத்துவம் யாவருமே அறிந்த விடயமே. அதனால் அத்தகைய மரபை நிராகரிக்க முடியாத நிலை ஏற்படும் போது பாலம் அமைப்பதற்கான சாத்தியப்பாடு காணாமல் போய் விடும். என்ற புரிதல் தென்னிலங்கைக்கு உண்டு. இந்து மதவாதிகளின் எழுச்சியானது இராமர் அணைக்கு பங்கம் விளைவிக்க அனுமதியாது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். அதனால் இது ஒரு இராஜதந்திர செய்முறையாக கையாண்டு விடலாம் என தென் இலங்கை ஆட்சியாளர்கள் எண்ணுகின்றனர். கட்டாத பாலத்திற்கான அனைத்து பூர்வாங்க வேலையையும் மேற் கொள்கின்ற அதே நேரம் மறு பக்கத்தில் இந்துத்துவவை தூண்டுதல் மூலம் பிரச்சினையை முடிபுக்கு கொண்டு வர தென் இலங்கை முனைய வாய்ப்புள்ளது.

மூன்று. இந்தியாவுடனான நிலத்தொடர்ச்சிக்கு எதிராக தென் இலங்கையின் தீவிர அரசியல் சக்திகளை பயன்படுத்துவதன் வாயிலாக இந்தியாவின் அணுகு முறையை கையாளலாம் என தென் இலங்கை கருதுகிறது.

உள்நாட்டில் எதிர்ப்புவாதத்தை தூண்டுவதன் மூலம் இந்தியா தனது விருப்பிலிருந்து பின்வாங்க வைக்க முடியுமென வும் திட்டமிட வாய்ப்புள்ளது. இதற்கு வலுவான ஆதாரமாக அமைவது இந்தியாவிடம் 2004 இருந்தே தற்போதைய ஜனாதிபதி பாலம் அமைப்பது பற்றிய உரையாடலை முதன்மைப்படுத்தி வருகின்றார். ஆனால் இன்றைய சூழல் வேறுபட்டது.

அதாவது வடக்குகிழக்கில் விடுதலைப் புலிகள் இல்லாத காலம். இதனால் சிங்கள மக்களை பாலம் அமைப்பதற்கு எதிராக தூண்டுவதன் மூலம் அதன் முயற்சியை முடிபுக்கு கொண்டு வர முடியுமென தென் இலங்கை ஆட்சியாளர்கள் கருதுகின்றனர். அதற்கு அமைவாகவே புலமையாளர்களும் அரசியல்வாதிகளும் அது தொடர்பில்


கட்டுரையாளர்:
இலங்கையில் இருந்து
பேராசிரியர்

– K.T.கணேசலிங்கம் –


உரையாடலைத் தொடங்கியும் உள்ளனர். இது பௌத்த மகாசங்கங்களால் பரிசீலிக்கப்பட்டு தீவிரத் தன்மைக்கு உட்படும். அப்போது தீவிர எதிர்ப்பு வாதம் எழுச்சியடையும். நான்கு. 13 வது திருத்தச் சட்டமூலம் எவ்வாறு இந்தியாவை மீளமுடியாதவாறு இலங்கைக்குள் சிக்க வைத்ததோ அவ்வாறே பாலம் அமைக்கும் உபாயத்தை முன்னிறுத்தி இந்தியாவை மீளமுடியாதவாறு இலங்கை சிக்க வைக்க திட்டமிடுகிறது. பங்கு கொண்டு பலன் பெறல் (Engagement) கொள்கைக்கு பதிலாக பொறிவலை (Entanglement) கொள்கையை பின்பற்றுவதன் மூலம் இந்தியாவை நிரந்தரமாக சிக்கவைக்க திட்டமிடுகிறது தென் இலங்கை.

இதன் பிரதிபலிப்பாக எழுந்துள்ள உறவே தற்போதைய இலங்கை இந்திய உறவாகும். இந்திய-இலங்கை நிலத் தொடர்ச்சிக்கான அரசியல் நீண்ட உரையாடலை ஆரம்பிக்க முனைகிறது. இதற்கான இந்திய அணுகுமுறையே பதில் அரசியல் விளைவைத் தரக்கூடியதாக அமையும். இந்தியா வெளிப்படையாக இலங்கைத்தீவை முழுமையாக செல்வாக்குச் செலுத்த முடியாது என்பதை உணர்ந்துள்ளதாகவே தெரிகிறது. அதுவே அதன் பாலம் பற்றிய உரையாடலை தொடக்கியதற்கான முனைப்பாகவுள்ளது.

எனவே இலங்கை இந்திய உறவின் புதிய வடிவமாக எழுந்துள்ள நிலத் தொடர்ச்சிக்கான பாலம் அமைப்பு தானது தென் இலங்கையின் அரசியலின் இராஜதந்திர அணுகுமுறையாகவே தெரிகிறது. அதனை எதிர் கொள்ளும் உபாயத்திற்கும் இந்தியா இல்லை என்பதை உறுதிப்படுத்தியுள்ளது.

13வது திருத்தத்திற்குள் எவ்வாறு மீளமுடியாத பொறிக்குள் அகப்பட்டதோ அவ்வாறே மீளவும் சிக்கவைப்பதற்கான உபாயத்திற்குள் இந்தியா Engagement க்குள் அகப்பட ஆரம்பித்துள்ளது. தென் இலங்கை வகுத்துள்ள Engagement கொள்கை என்பது Entanglement கொள்கையாகவே உள்ளது. இது பொருளாதார அர்த்தத்திலும் அரசியல் அர்த்தத்திலும் பரஸ்பரம் பிரயோகப் படுத்தப்படுகிறது. பொருளாதார ரீதியில் Engagement கொள்கையை பின்பற்றிக் கொண்டு அரசியல் ரீதியில் Entanglement கொள்கையை இந்தியாவுக்கு எதிராக பிரயோகிக்கின்றதைக் காணக் கூடியதாக உள்ளது.


முல்லைத்தீவு புனிதபூமி அன்பு இல்லத்தின்
423 குழந்தைகளின் வாழ்வுக்காகவும்
கல்வி மேம்பாட்டிற்காகவும்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகை நடாத்தும் 12வது ஆண்டு
இன்னிசை மாலையும் இராப்போசன விருந்தும்
29 ஒக்டோபர் 2023 ஞாயிற்றுக்கிழமை
தொடர்புகளுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600

# அமெரிக்கா: ஹவாய் காட்டுத்தீயில் காணாமல்போன 1,000 பேர், 67 பேர் பலி!

அமெரிக்காவின் ஹவாய் தீவுகளில் ஒன்றான மாவியில் பற்றி எரிந்து வரும் தீயில் சிக்கி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 67 ஆக அதிகரித்துள்ளது. பல நூற்றுக்கணக்கானோர் மாயமானதாக அறிவிக்கப்பட்டு, அவர்களை மீட்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதுகுறித்துப் பேசிய ஆளுனர் ஜோஷ் கிரீன், “ஹவாய் வரலாற்றிலேயே இது மிகவும் மோசமான இயற்கைப் பேரழிவாக இருக்கிறது,” என்றார்.

மேலும், வரலாற்றுச் சிறப்புமிக்க லஹைனா கடற்கரையில் 80 சதவீத பகுதிகள் தீக்கு இரையாகிவிட்டன என்றும் கூறினார்.

தீ வேகமாகப் பரவியதால் லஹைனா கடற்கரையில் குழுமியிருந்த சுற்றுலாப் பயணிகள் கடலுக்குள் குதித்து மிகுந்த சிரமங்களுக்கு இடையே பல மணிநேரம் நடந்து தப்பிச் சென்றனர்.

கரையை காட்டுத்தீ முற்றிலுமாக ஆக்கிரமித்த நேரத்தில் கடல்நீருக்குள் குதித்து தப்ப முயன்றவர்களில் தனது குடும்பமும் ஒன்று எனக் குறிப்பிட்டார் விக்ஸே ஃ போன்ஸேலின்கம.

அங்கு வெடிப்புகள் நிகழ்ந்ததாகவும் நெருப்பு காற்றில் மேலெழும்பியதாகவும் அந்தச் சம்பவம் குறித்து விவரித்த அவர், அதிலிருந்து தப்பிக்க முயன்றபோது அவரது குழந்தைகள் கிட்டத்தட்ட கடலோடு அடித்துப் போகும் அபாயத்தையும் எதிர்கொண்டதாக குரல் நடுங்கத் தெரிவித்தார்.

பல்லாயிரக்கணக்கான பார்வையாளர்கள் அங்கிருந்து மீட்கப்பட்ட நிலையில், தீவின் மேற்குப் பகுதியில் சுமார் 11 ஆயிரம் பேர் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டு தவிக்கும் நிலை உருவானது.

### அமெரிக்காவின் மிகப்பெரிய ஆலமரம் கரிக்கட்டையாக நிற்கும் அவலம்

பற்றி எரியும் காட்டுத் தீயை அணைக்க ஏராளமான தீயணைப்பு வீரர்கள் போராடி வருகின்றனர். கடந்த செவ்வாய்க்கிழமை முதல் தீ எரிந்து வரும் நிலையில், டோரா புயலின் காரணமாக வீசிய சூறாவளிக் காற்று தீ மேலும் பரவக் காரணமாக இருந்தது.

மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளுக்கு அதிவிரைவாக போதுமான நிதி ஆதாரங்கள் கிடைக்கும் வகையில் தீ பாதிப்பு ஏற்பட்ட பகுதிகளில் பேரிடர் அவசர நிலையை அதிபர் ஜோ பைடன் பிறப்பித்துள்ளார்.

ஹவாய் தீவின் தலைநகராக இருந்த லஹைனா ஒரு கடற்கரை நகரம். வரலாற்றுச் சிறப்பு மிக்க, சுற்றுலா முக்கியத்துவம் மிக்க இடங்களுக்குப் பெயர்போன நகராக இது திகழ்கிறது. இதுபோன்ற பெரும்பாலான இடங்கள் பற்றி எரிந்த தீயின் காரணமாக கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.

இதில் 122 ஆண்டுகளாகச் செயல்பட்டு வந்த பயனீர்ஸ் இன் என்ற விடுதியும் ஒன்று. இந்த விடுதி முழுமையாக






தீயில் எரிந்துவிட்டதாக உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

லஹைனாவின் புகழ்பெற்ற ஆலமரத்தையும் இந்த தீ விட்டு வைக்கவில்லை. இந்த ஆலமரம் அமெரிக்காவிலேயே மிகப்பெரிய மரமாகக் கருதப்படுகிறது.

தீயில் கருகிய நிலையில் அப்படியே நிற்கும் அந்த ஆலமரம் இனிமேல் சுற்றுலாப் பயணிகளை மகிழ்விக்கும் நிலைக்குத் திரும்பாது என்ற அச்சம் அனைவரிடமும் காணப்படுகிறது.

### அமெரிக்காவில் காட்டுத்தீ அதிகரித்து வருவது ஏன்?

ஹவாய் தீவில் இதுபோல் காட்டுத் தீ பற்றி எரிவதற்கு உலக அளவில் நிலவும் மோசமான காலநிலையே காரணமாக அமைந்துள்ளது.

காட்டுத் தீயைப் பொறுத்தளவில் கிரீஸ் நாட்டு வரலாற்றிலேயே இல்லாத ஜூலை மாதமாக கடந்த மாதம் ரோட்ஸ் மற்றும் கோர்ஃபு தீவுகள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டன.

கனடாவிலும் வரலாற்றிலேயே இல்லாத அளவுக்கு மிக மோசமான காட்டுத் தீ சம்பவங்கள் நேரிட்டன. இந்த ஆண்டு தொடக்கத்தில் சிலி மற்றும் ஆஸ்திரேலியாவில் பற்றிய காட்டுத் தீயைத் தொடர்ந்து அங்கு பற்றி எரிந்த தீயில் 25 ஆயிரத்துக்கும் மேற்பட்ட நிலப்பரப்பிலான காடுகள் எரிந்து சாம்பலாகின.

அமெரிக்காவின் மேற்குப் பகுதிகளில் அண்மைக்காலங்களில் மிக அதிக அளவிலான காட்டுப் பகுதிகளில் தீ பற்றியெரிந்து பெரும் சேதங்களை ஏற்படுத்தியுள்ளது.

காலநிலை மாற்றமே இதுபோல் காட்டுத் தீ வேகமாகப் பரவுவதற்குக் காரணமாக அமைந்துள்ளது என விஞ்ஞானிகள் தொடர்ந்து எச்சரித்துவருகின்றனர்.

ஹவாய் தீவில் பெருமளவு காட்டுத் தீ பற்றி எரிவது இது ஒன்றும் முதல் முறை அல்ல. ஆனால் கடந்த சில தினங்களாக எரிந்துகொண்டிருக்கும் தீ வரலாற்றிலேயே இல்லாத அளவுக்கு மிகப் பயங்கரமான தீயாக உள்ளது.

இதுபோன்ற பயங்கர தீ விபத்து எப்படி, எங்கே தொடங்கியது என்பது குறித்து தெளிவான விவரங்கள் இதுவரை வெளியாகவில்லை.

சூறாவளிக் காற்றை எதிர்த்து தீ அணைப்பு வீரர்கள் கடுமையாகப் போராடி வருகின்றனர். இதில் பெரும்பகுதி தீ அணைக்கப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.


அருகில் இருக்கும் பிக் தீவில் 3 இடங்களில் தீ பற்றியதாகவும், ஆனால் அவை அனைத்தும் முழுமையாகக் கட்டுப்படுத்தப்பட்டதாகவும் அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

### ஹவாய் தீவின் வறண்ட வானிலை காரணமா?

தீ மளமளவெனப் பரவியதற்கு ஹவாய் தீவு முழுவதும் காணப்படும் வறண்ட வானிலையும் ஒரு காரணமாக அமைந்துள்ளது.

பொதுவாக காட்டுத் தீ பரவுவதற்கு சில விஷயங்கள் காரணமாக அமைந்துவிடுகின்றன. காட்டுப்பகுதியில் காணப்படும் வறண்ட புதர்கள், மரங்கள் மற்றும் இது போன்றவற்றில் தீ பற்றும்போது அது வேகமாகப் பரவுகிறது.

ஹவாயில் 14 சதவீத நிலப்பரப்பில் மோசமான அல்லது அதிகமான வறட்சி நிலவுகிறது என்றும், இதில் 80 சதவிகித நிலப்பரப்பு வழக்கத்திற்கு மாறான வறட்சியின் பிடியில் சிக்கித் தவிப்பதாகவும் அமெரிக்க வறட்சி கண்காணிப்பு அலுவலகம் அறிவித்துள்ளது.



வறண்ட வானிலை நிலவும்போது, பசுமையான செடி-கொடிகள் மற்றும் மரங்களில் இருக்கும் தண்ணீரை உறிஞ்சிக்கொள்வதால் அவற்றில் தீ எளிதில் பற்றிப் பரவுகிறது.

ஒரு நூற்றாண்டுக்கு முன்பு ஹவாய் தீயில் பெய்த மழை அளவுடன் ஒப்பிடும்போது தற்காலங்களில் 90 சதவிகிதம் குறைவாக அளவுக்குத் தான் மழைப்பொழிவு இருக்கிறது எனப் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. அதிலும் 2008ஆம் ஆண்டுக்குப் பிந்தைய வறட்சி நிலை மிகவும் மோசமாக இருந்து வருகிறது.

மாவி தீவிலும் கடும் வறட்சி காரணமாக சிவப்பு வண்ண எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. வெப்பமான காலநிலை, குறைந்த ஈரப்பதமான காற்று, சூறாவளிக் காற்று ஆகியவை இணைந்து தீ பற்றுவதற்கான ஆபத்தை அதிகரிக்கும் நிலை என்பதே இதன் பொருள்.

டோராவிலிருந்து பயங்கர சூறாவளிக்காற்று ஹவாய் தீவின் கடலோரப் பகுதிகளை கடந்த செவ்வாய் கிழமை கடந்து சென்றபோது அப்பகுதியில் எரிந்து வந்த தீ வேகமாகப் பரவியது.

அட்லாண்டிக் புயல் பருவத்திலும் இதேபோல் பயங்கர சூறாவளிக்காற்று வீசும் என வானிலை முன்னறிவிப்பு மையம் எச்சரித்துள்ளது.





# தலைமன்னார் - மாத்தளை நடைபவனியும் மலையக தமிழர்களின் பிரச்சனைகளும்

கட்டுரையாளர்:-
கொழும்பில் இருந்து
கலாநிதி ஜெகான் பெரேரா

பெருமளவுக்கு விளம்பரம் இல்லாமல் இலங்கையின் வடமேற்கு கரையோரத்தில் தலைமன்னாரில் இருந்து தொடங்கிய ஒரு நடைபவனி மலையகத்தில் மாத்தளையைச் சென்றடைந்திருக்கிறது. இலங்கையில் புதிதாக அமைக்கப்பட்ட தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்வதற்கு தென்னிந்தியாவில் இருந்து கொண்டு வரப்பட்ட பல்லாயிரக்கணக்கான ஆண்களும் பெண்களும் 200 வருடங்களுக்கு முன்னர் கடந்துவந்த காட்டுப்பாதையின் தடத்தில் இந்த நடைபவனி இடம் பெற்றது. அந்த நீண்ட பயணத்தின் அடையாளபூர்வமான மீள் அரங்கேற்றம் கடந்த இரு வாரங்களாக நடைபெற்றது.

ஆனால், சிரமம் நிறைந்த நடைபவனியில் சொற்ப எண்ணிக்கையானவர்களே தலைமன்னாரில் இருந்து இறுதியில் மாத்தளை வரை தொடர்ந்து வந்தார்கள். அந்த பாதையில் முன்னைய நூற்றாண்டுகளில் பல்லாயிரக்கணக்கானவர்கள் மாண்டு போனார்கள். தென்னிந்தியாவில் இருந்து குழுக்கள் குழுக்களாக Infrastructure சில குழுக்களில் நாற்பது சதவீதமானவர்கள் இடை வழியில் மரணமடைந்தார்கள்.

நவீன யுகத்தில் அதே மார்க்கத்தில் கடந்த இரு வாரங்களாக நடைபவனியில் வந்தவர்கள் இன்னொரு யுகத்தின் காணாமல் போனோரின் புதைகுழிகளைக் கொண்டிருக்கும் மண்ணையே தங்கள் பாதங்கள் மிதித்துக் கொண்டு வந்தன என்பதை அறிவார்கள். நீண்ட மார்க்கத்தில் பல்வேறு இடங்களில் நடைபவனியில் இணைந்து கொண்டவர்களுக்கு செம்மையாக அமைக்கப்பட்ட வீதிகள், அந்த வீதியோரங்களில் கடைகள், உணவகங்கள் மற்றும் தங்கிச்செல்வதற்கு விடுதிகள் என்று நவீன வசதிகள் எல்லாம் இருந்தன. அவர்களுக்கு பலரின் ஆதரவும் அனுசரணையும் இருந்தது.

பெருந்தோட்டங்களில் தொடர்ந்து வேலை செய்து கொண்டிருக்கும் மக்களை தற்போதைய பொருளாதார நெருக்கடி இலங்கைச் சமூகத்தின் வேறு எந்த பிரிவினரையும் விட படுமோசமாக பாதித்திருக்கிறது. அவர்களுக்கு ஆதரவாகவே நடைபவனி இடம் பெற்றது. ஆயிரம் ரூபா அற்ப வேதனத்துக்கான அவர்களின் போராட்டம் தேசிய பொருளாதாரத்தை கொவிட் பெருந்தொற்று பலவீனப்படுத்துவதற்கு முன்னர் தொடங்கியது.

வைரஸ் பரவுவதை தடுக்க அரசாங்கம் ஊரடங்கை பிறப்பித்த போதிலும் அது விவசாயத்துறைக்கு பிரயோகிக்கப்படவில்லை. தேயிலைத் தோட்டங்களில் தொழிலாளர்கள் தொடர்ந்து வேலை செய்து கொண்டேயிருந்தனர். இறுதியில் ஐந்து வருடங்களுக்கும் கூடுதலான காலப் போராட்டத்துக்கு பிறகு 2021 ஆம் ஆண்டில் தோட்டத் தொழிலாளர்கள் ஆயிரம் ரூபா வேதனத்தைப் பெற்றபோது பணவீக்கத்தினால் அதன் உண்மையான பெறுமதி குறைந்து விட்டது.

அத்துடன் அந்த ஆயிரம் ரூபாவை முழுமையாகப் பெறுவதற்கு பல்வேறு நிபந்தனைகள் விதிக்கப்பட்டன. அதாவது குறைந்தபட்சம் எத்தனை நாட்களுக்கு தொழிலாளர்கள் வேலை செய்தால், குறைந்த பட்சம் எத்தனை கிலோ எடை தேயிலை கொழுந்தை அவர்கள் பறித்தால் அந்த ஆயிரம் ரூபா கிடைக்கும் என்று நிபந்தனைகள் நடைமுறையில் உள்ளன. இத்தகைய நிபந்தனைகளை விதிக்காவிட்டால் தங்களது தொழிற்துறையை இலாபகரமாக நடத்தமுடியாது என்பதே பெருந்தோட்டக் கம்பனிகளின் நிலைப்பாடாக இருக்கிறது.

நீண்டகாலப் போராட்டத்துக்கு பிறகு தோட்டத்தொழிலாளர்கள் பெற்ற ஆயிரம் ரூபா இன்று 500 ரூபாவுக்கு சமமானதாத வந்துவிட்டது. ஒரு குடும்பத்தில் எத்தனை பேர் வேலை செய்தாலும் அந்த ஆயிரம் ரூபாவை வைத்துக் கொண்டு



வாழ்க்கையை ஓட்டுவது சாத்தியமில்லை.

இலங்கையில் பொருளாதார நெருக்கடியினால் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்ட துறையாக பெருந் தோட்டத்துறையே விளங்குகிறது. தோட்டத்தொழிலாளர் சனத்தொகையில் ஐம்பது வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழ்கிறார்கள் என்று உலக வங்கியின் ஆய்வுகள் கூறுகின்றன.

இத்தகைய விரக்தியான நம்பிக்கையிழந்த சூழ்நிலையில் தோட்டத் தொழிலாளர்களில் சிலரே நடைபவனியில் கலந்து கொள்ளக் கூடியதாக இருந்தது என்பதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை. குறைந்த பட்சம் குறிப்பிட்ட எண்ணிக்கையான நாட்கள் வேலை செய்தால் மாத்திரமே ஆயிரம் ரூபா கிடைக்கும் என்பதால் அதை இழந்து நடைபவனியில் பங்கேற்க பல தொழிலாளர்களினால் இயலாது. இரு வாரகால நடைபவனியில் பெருந்தோட்டத் தொழிலாளர் சமூகத்தை அடையாளபூர்வமாக பிரதிநிதித்துவம் செய்தவர்களில் பலரும் சிவில் சமூக அமைப்புக்களைச் சேர்ந்தவர்களேயாவர்.

மாண்புமிகு மலையக மக்கள் கூட்டமைப்பு என்ற பெயரின் கீழ் முன்னெடுக்கப்பட்ட இந்த நடைபவனிக்கு தேசிய கிறிஸ்தவ பேரவை வேறு சிவில் சமூக அமைப்புக்களுடன் சேர்ந்து ஆதரவளித்தது.

நாடு சுதந்திரமடைந்ததற்கு பிறகு மலையக தமிழ் மக்களினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளில் இலங்கையின் ஏனைய சமூகங்களுக்கு நிகராக முழுஅளவிலான குடிமக்களாக தாங்களும் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் அடங்கும். சமத்துவம், பாரபட்சமின்மை, பாதுகாப்பு, சமூகத்தின் நலன்களையும் அடையாளத்தையும் பேணிப் பாதுகாக்கக் கூடிய அரசியல் மற்றும் நிருவாக ஏற்பாடுகளை வேண்டி நிற்பதாகவே கோரிக்கைகள் இடையறாது முன்வைக்கப் பட்டு வருகின்றன.

கௌரவம், சுயமரியாதை, சமாதானம் மற்றும் பாதுகாப்புடன் வாழ்வதற்கு தேவையான குரலையும் அதிகாரத்தையும் சமூகம் கொண்டிருக்க வேண்டும் என்பதற்காகவும் நுவரேலியா மாவட்டத்தில் மிகவும் செறிவாகவும் நாட்டின் ஏனைய பல பாகங்களில் சிதறியும் வாழும் இந்த மக்கள் தங்கள் அலுவல்களை தாங்களே கையாளுவதற்கு வழிவகுப்பதற்காகவுமே இந்த கோரிக்கைகள் முன் வைக்கப்படுகின்றன ' என்று அந்த கூட்டமைப்பினால் வெளியிடப்பட்ட அறிக்கையில் கூறப்பட்டிருந்தது.

பெருந்தோட்டப் பகுதிகளில் வசிக்கும் ஐந்து இலட்சத்துக்கும் அதிகமானவர்கள் உட்பட மலையக தமிழ் சமூகத்தின் தற்போதைய நிலைக்குக்கு காரணம் அவர்களின் விருப்புக்கு மாறாக பெரும் எண்ணிக்கையானோர் இந்தியாவுக்கு திருப்பியனுப்பப்பட்டமையும் நாடற்றவர்களாக் கப்பட்டதும் குடியுரிமை தொடர்பிலான நிச்சயமற்றாத் தன்மை மற்றும் வாக்குரிமையின்மை ஆகியவையேயாகும். இவை அந்த சமூகத்தின் சமூக பொருளாதார நல்வாழ்வை பெரிதும் பாதித்து விட்டது. பெருந்தோட்டப் பகுதிகளில் வாழ்ந்துகொண்டு வேலை செய்யும் மக்களே மிகவும் கடுமையாக பாதிக்கப்பட்ட பிரிவினராவர். அவர்களே

நாட்டில் மிகவும் பின்தங்கிய பிரிவினராக உள்ளனர். ஏனைய சமூகங்களுடன் ஒப்பிடும் போது பெரும்பாலும் மனித அபிவிருத்திக் குறிகாட்டிகள் சகலதிலும் அவர்கள் தாழ்ந்த நிலையிலேயே இருக்கிறார்கள். இது அவர்கள் தங்களது பெருந்தோட்ட முதலாளிகளில் தங்கியிருக்கும் தொழிலாளர்கள் என்ற நிலையில் இருந்து ஏனைய சமூகத்தவர்களுடன் சமத்துவமான உரிமைகள் கொண்ட முழுமையான குடிமக்கள் என்ற நிலைக்கு மாறுவதை பாரதூரமாக பாதித்திருக்கிறது.


இந்த மண்ணில் வாழும் சகலரும் ஒரு தாயின் மக்கள் என்றே தேசிய கீதம் குறிப்படுகிறது. தேசிய கீதத்தின் சொற்களை நினையாப்பிரகாரம் தவறுதலாக உச்சரித்தால் கூட கடுமையான கண்டனங்கள் கிளம்புகின்றன. அவ்வாறு உச்சரிப்பவர்களுக்கு தண்டனை வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்படுகிறது. அந்தளவுக்கு அந்த சொற்கள் மதிக்கப்படுகின்றன. ஆனால், ஒரு சுதந்திர தேசமாக இலங்கை பிறந்த நாளில் இருந்தே தேசிய கீதத்தின் அடிப்படை உணர்வு மீறப்படுகிறது.

தேசத்தின் சிறுவர்களில் ஒரு பிரிவினர் நாட்டை விட்டு வெளியேற்றப்பட்டார்கள். பெரிதாக போற்றப்படும் கன்னங்கராவின் இலவசக்கல்வி கொள்கையில் வறிய தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகள் உள்வாங்கப்படவில்லை. 1980வரை அவர்களின் கல்வி தோட்ட முகாமைத்துவத்தின் கைகளில் விடப்படடது. தொழிற் சங்கப் போராட்டத்தை தொடர்ந்தே அவர்களின் கல்விக்கான வாய்ப்புக்களை வழங்க அரசாங்கம் நிர்ப்பந்திக்கப்பட்டது.


துரதிர்ஷ்டவசமாக, நாட்டின் வேறு பாகங்களில் உள்ள பாடசாலைகளுடன் ஒப்பிடும் போது தோட்டத்தொழிலாளர்களின் பிள்ளைகளின் கல்விவாய்ப்புகள் தரங் குறைந்தவையாகவே இன்னமும் உள்ளன. ஆனால் பெருந்தோட்டங்களில் வேலைசெய்யும் தமிழ் மக்கள் எந்தப் பாவத்தையும் செய்யவில்லை. பதிலாக அவர்கள் தோட்டங்களில் மிகவும் இடர் மிகு சூழ்நிலைகளில் கடுமையாக உழைக்கும் அவர்கள், சுதந்திரம் பெற்ற வேளையில் ஆசியாவின் மிகவும் சுபிட்சமிகு நாடுகளில் ஒன்றாக இலங்கையை கட்டியெழுப்பியதில் வெற்றி கண்டார்கள். அதுவே இலவச கல்விக் கொள்கையை நடைமுறைப்படுத்தவும் உதவியது. வெளியேறிய பிரிட்டிஷார் கிழக்கின் சுவிட்சர்லாந்தாக இலங்கை மாறும் என்று கூறினார்கள். தாங்கள் போற்றிப் பேணுகின்ற (22ம் பக்கம் பார்க்க)




# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?





மேடராசி அன்பர்களே! அனுகூலமாக அனைத்து காரியங்களும் நடக்கும். வெளியூர் அல்லது வெளிநாட்டு பயணம் செல்ல நேரலாம். உடல் ஆரோக்கியம் உண்டாகும். குடும்பத்தினரை அனுசரித்து செல்வதன் மூலம் எல்லா பிரச்சனைகளும் சரியாகும். கணவன் மனைவிக்கிடையே இருந்த மனஸ்தாபம் நீங்கும். பிள்ளைகளின் எதிர்கால நலனுக்காக முக்கிய பணிகளை மேற் கொள்வீர்கள். தொழில் வியாபாரம் சீராக நடக்கும்.





ரிஷபராசி அன்பர்களே! பூர்வீக சொத்துக்களில் இருந்த பிரசசனைகளில் சாதகமான நிலை காணப்படும். தான தர்மம் செய்யவும், ஆன்மிக பணிகளில் ஈடுபடவும் தோன்றும். நீண்ட தூர பயணத்தின் போது கவனம் தேவை. குடும்பத்தில் எதிர்பாராத செலவு உண்டாகும். கணவன் மனைவிக்கிடையே திடீர் மனவருத்தம் ஏற்படலாம். பிள்ளைகளின் செயல்பாடுகள் மனதுக்கு திருப்தி அளிக்கும். வழக்குகளில் மெத்தனம் காணப்படும்.





மிதுனராசி அன்பர்களே! தேவையற்ற மனக்கவலை அகலும். வழக்கு விவகாரங்களில் இருந்த தாமதமான போக்கு நீங்கும். நிர்பந்தமாக வெளியூர் பயணம் செல்ல நேரலாம். குடும்பத்தில் இருப்பவர்களால் வீண் பழி ஏற்பட வாய்ப்பு உண்டு. எதிர்பாராத செலவு உண்டாகும். கணவன், மனைவிக்கிடையே மனஸ்தாபங்கள் வரலாம். பிள்ளைகளின் செயல்பாடுகளில் கவனம் தேவை. ஆயுதங்களை பயன்படுத்தும் போது கவனம் தேவை.





கடகராசி அன்பர்களே! வீண் வாக்குவாதங்களை தவிர்ப்பது நன்மை தரும். வேலை பளு காரணமாக நேரம் தவறி உணவு உண்ண வேண்டி இருக்கும். கணவன், மனைவிக்கிடையே கருத்து வேறுபாடு வரலாம். விட்டுக் கொடுத்து செல்வது நல்லது. சிலர் குடும்பத்தை விட்டு பிரிந்து வெளியில் தங்க நேரலாம். தொழில் வியாபாரத்தில் பார்ட்னர்களை அனுசரித்து செல்வது நல்லது. புதிய வாடிக்கையாளர்கள் கிடைப்பர்.





சிம்மராசி அன்பர்களே! சிக்கல்கள் தீரும். நோய் நீங்கி உடல் ஆரோக்கியம் உண்டாகும். பொருளாதார நிலை உயரும். குடும்பத்தில் உங்களுக்கு எதிராக பிரச்சனையை உண்டாக்கியவர்கள் தானாகவே அடங்கி விடுவர். வீட்டில் சுப காரியம் நடக்கும். திருமண காரியங்களில் சாதகமான போக்கு காணப்படும். பிள்ளைகளால் பெருமை உண்டாகும். மதிப்பு கூடும். வியாபாரத்தில் இருந்த சிக்கல்கள் தீரும்.




கன்னிராசி அன்பர்களே! மன சஞ்சலம் நீங்கும். சிறிய விஷயத்துக்கு கூட கோபம் வரலாம். கட்டுப்படுத்துவது நன்மை தரும். குடும்பத்தினரின் செயல்பாடுகள் மகிழ்ச்சியை கொடுக்கும். கணவன், மனைவிக்கிடையே மனம் விட்டு பேசி எடுக்கும் முடிவுகள் நல்ல பலன் தரும். பிள்ளைகளை அனுசரித்து செல்வதும், அவர்கள் போக்கில் விட்டு பிடிப்பதும் நல்லது. தொழில் வியாபாரம் தொடர்பான வீண் அலைச்சல் ஏற்படும்.





துலாம்ராசி அன்பர்களே! எடுத்த காரியங்களில் வெற்றி கிடைக்கும். பூமி, வீடு தொடர்பான பிரச்சனைகள் நல்ல முடிவுக்கு வரும். சகோதரர்களுடன் இருந்த மனவருத்தம். நீங்கும். எதிர்பாராத செலவு உண்டாகலாம். குடும்பத்தினரின் பேச்சுக்கு எதிர்த்து பேசுவதை தவிர்ப்பது நன்மை தரும். கணவன், மனைவிக்கிடையே வீண் வாக்குவாதங்கள் ஏற்படலாம். பிள்ளைகளிடம் அன்பாக பழகுவது நல்லது. தொழில் வியாபாரத்தில் திடீர் சிக்கல் ஏற்பட்டு சரியாகும்





விருச்சிகராசி அன்பர்களே! எடுத்த காரியத்தை செய்து முடிப்பதில் தாமதம் உண்டாகும். சகோதரர் வழியில் நன்மை உண்டாகும். குடும்பத்தில் இருந்த பிரச்னைகள் நீங்கும். கணவன் மனைவிக்கிடையில் இருந்த சங்கடங்கள் தீரும். பிள்ளைகள் கல்வி பற்றிய கவலை நீங்கும். வீட்டிற்கு தேவையான பொருட்கள் வாங்குவீர்கள். தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த நிதி உதவி கிடைக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் பரபரப்பு நீங்கி பணிகளை கவனிப்பர்.







தனுசுராசி அன்பர்களே! திட்டமிட்டு எதையும் செய்ய வேண்டியது அவசியம். வீண்பழிவர வாய்ப்பு உள்ளதால் எதிலும் கவனம் தேவை. உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. கணவன், மனைவிக்கிடையே வாக்குவாதம், பிள்ளைகளின் செயல்களால் மனவருத்தம் போன்றவை ஏற்படலாம். வீட்டில் உள்ள பொருட்களை கவனமாக பாதுகாப்பது நல்லது. தொழில் வியாபாரத்தில் வீண் அலைச்சல்கள் ஏற்படும்.




மகரராசி அன்பர்களே1 சாமர்த்தியம் அதிகரிக்கும். மனவருத்தம்நீங்கும். வாகனங்களில் செல்லும் போது கவனம் தேவை. தனாதிபதி சூரியன் சஞ்சாரத்தால் பணதேவை ஏற்பட்டாலும் அதை திறமையாக சமாளித்து விடுவீர்கள். குடும்பத்தில் சுமுகமான சூழ்நிலை காணப்பட்டாலும், குடும்ப உறுப்பினர்களுக்காக மருத்துவ செலவு செய்ய வேண்டி இருக்கலாம். கணவன், மனைவி ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து செல்வது நல்லது.




கும்பராசி அன்பர்களே! வீண் செலவு ஏற்பட்டாலும் அதை சமாளிக்கும் விதத்தில் வரவும் இருக்கும். கனவுகளால் தொல்லை ஏற்படலாம். உஷ்ண சம்பந்தமான நோய் உண்டாகலாம். குடும்பத்தில் தேவையற்ற பிரச்னைகள் உருவாகலாம். கணவன், மனைவிக்கிடையே கருத்து வேற்றுமை ஏற்பட்டாலும் சரியாகிவிடும். வீடு, வாகனம் தொடர்பான செலவுகள் உண்டாகலாம்.




மீனராசி அன்பர்களே! சாதகமான பலன்கள் கிடைக்கும். பொருளாதார முன்னேற்றம், பணவரவில் திருப்தி இருக்கும். எடுத்த காரியத்தை சிறப்பாக செய்து முடிப்பீர்கள். உடல் ஆரோக்கியம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும். கணவன் மனைவிக்கிடையே ஒற்றுமை உண்டாகும். பிள்ளைகள் மூலம் பெருமை ஏற்படும். உறவினர்கள் வருகையும் அவர்களால் நன்மையும் உண்டாகும். திருமணம் தொடர்பான பேச்சு நடக்கும்.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

## ஜனாதிபதி தேர்தலை தமிழ் மக்கள்

(17ம் பக்கத் தொடர்ச்சி) எண்ணுவதற்கான வாய்ப்புண்டு. ஏனெனில் இன்றைய நிலையில், ரணில் விக்கிரமசிங்கவிற்கு மாற்றான ஒருவரை முன்னிலைப்படுத்தக் கூடிய நிலையில் தென்னிலங்கையில் எந்தவொரு கட்சியும் இல்லை. இல்லாவிட்டால் அனைவருமாக பொது வேட்பாளர் ஒருரையே நிறுத்த வேண்டும். இந்தச் சூழலை தமிழ் மக்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமாயின், தமிழ் மக்களின் வாக்குகளை ஒரு பலமான ராஜதந்திர ஆயுதமாக பயன்படுத்துவதற்கான தந்திரோபாயம் தொடர்பில் சிந்திக்க வேண்டும். ஒரு தமிழ் பொதுவேட்பாளரை நிறுத்தி, வடக்கு கிழக்கிலுள்ள அனைத்து தமிழ் மக்களும் அவருக்கு வாக்களிக்கும் தீர்மானத்தை எடுக்கலாம். இதன் மூலம் வேறு வழியின்றி, தமிழர் தரப்போடு பேரம் பேச வேண்டிய நிர்பந்தம் தென்னிலங்கைக்கு உருவாகும்.

ஆனால் கடந்த காலத்தில், தமிழ் பொது வேட்பாளர் விடயத்தை கோமாளித்தனமாக்கியது போன்று, இம்முறை நடந்து கொள்ளக் கூடாது. இன்றைய நிலையில் தமிழ் பொது வேட்பாளருக்கு மிகவும் பொருத்தமானவர் இரா.சம்பந்தன் மட்டுமே. தேர்தல் பகிஸ்கரிப்பு உசிதமான அணுகுமுறையல்ல. அது ஜனநாயக விரோதமானதாகவே நோக்கப்படும். தேர்தலில் போட்டியிடும் தீர்மானத்தை அறிவித்தாலே, தென்னிலங்கை பதட்டமடையும். முக்கியமாக ரணில் பதட்டமடைவார்.

இதனை தேர்தலுக்கு முன்பாகவே, ஒரு பேரம் பேசுவதற்கான உக்தியாக கையாளலாம். சில விடயங்களை செய்து காண்பிக்குமாறு கூறலாம் அதே வேளை, 13வது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்தும் விடயத்தை, தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்ளடக்குமாறு நிபந்தனை விதிக்கலாம். காற்றுள்ள போது தூற்றிக் கொள்ளும் உபாயங்கள் தொடர்பில் தமிழ் தேசிய தரப்புக்கள் சிந்திக்க முன்வர வேண்டும்.

## சங்கமித்தையும் பறாளை அரச மரமும்

(9ம் பக்கத் தொடர்ச்சி) வாய்ந்த இடங்களை பாதுகாக்க வேண்டும் என தொல்பொருள் திணைக்களம் தனக்கு கடிதம் அனுப்புவதாகவும், ஆனால் அனுராதபுர மகா விகாரையின் அகழ்வாராய்ச்சி இன்னமும் முடிக்கப்படவில்லை என்றும், மகாவிகாரையின் எல்லை இன்னமும் கண்டுபிடிக்கப்படவில்லை என்றும் கூறியிருந்தார்.

1957இல் பண்டாரநாயக்கவின் ஆட்சிக் காலத்தில் தொடங்கப்பட்ட பணி இன்னமும் முடிக்கப்படாமல் இருப்பதையும் அவர் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

மகா விகாரையின் அகழ்வுப் பணியை முடிக்காமல், அதன் தீர்க்கமான எல்லைகளை வரையறுக்காமல் இருக்கும் தொல்பொருள் திணைக்களம் வடக்கில் கண்ட இடங்களையெல்லாம் தொல்பொருள் சின்னமாக அறிவித்து ஆக்கிரமிப்புகளை முன்னெடுக்கிறது.திட்டமிட்டு நிறுவனமயப்படுத்தப்பட்ட இன அழிப்பின் ஒரு கட்டமாகவே இவ்வாறான கலாசார ஆக்கிரமிப்பு முன்னெடுக்கப்படுகிறது.

பறாளை முருகன் ஆலய அரச மரத்தின் மூல வேர்களை கண்டறியும் போது, தொல்பொருள் திணைக்களத்தின் உண்மை முகம் வெளிப்படும். அத்துடன் கூடவே சிறிமாபோதி உள்ளிட்ட பௌத்தர்களின் நம்பிக்கைகள் பலவற்றுக்கும் அது சவாலாக மாறக் கூடும்.

## தலைமன்னார் - மாத்தளை நடைபவனியும்

(21ம் பக்கத் தொடர்ச்சி) விழுமியங்களுக்கு ஏற்றமுறையில் நடந்துகொள்ளத் தவறியமைக்காக பிரிட்டிஷாரும் பொறுப்புக்கூற வைக்கப்படவேண்டும். அண்மைய இந்திய வம்சாவளி தமிழர்கள் குடிமக்களாக நாட்டில் வாழ்வதற்கு இருந்த உரிமையை நிராகரித்ததே சுதந்திர இலங்கையின் அரசாங்கம் 1948 ஆம் ஆண்டில் முதலில் எடுத்த தீர்மானங்களில் ஒன்று. அந்த நேரத்தில் அவர்களே நாட்டின் மிகப்பெரிய இனத்துவ சிறுபான்மைச் சனத்தொகையாக இருந்தார்கள். இலங்கைத் தமிழர்களையும் விட அவர்கள் அதிக எண்ணிக்கையில் இருந்தார்கள்.

உண்மையில் கூறுவதானால், பத்து இலட்சத்துக்கும் அதிகமானவர்களின் குடியுரிமையையும் வாக்குரிமையையும் ஏனைய அடிப்படை மனித உரிமைகளையும் நிராகரிப்பதற்கு எடுக்கப்பட்ட தீர்மானத்தில் இலங்கைத் தேசத்தின் சகல பிரிவினரும் உடந்தையாக இருந்தனர். அரசியலமைப்பு அவர்களுக்கு பாதுகாப்பையோ அல்லது சட்டத்தின் ஆட்சியையயோ வழங்கவில்லை. பெரிதாகக் கூறப்படும் பிரிட்டிஷ் நீதிமுறை கூட அவர்களுக்கு நீதி வழங்கத் தவறியது. அன்று நடைமுறையில் இருந்த சோல்பரி அரசியலமைப்பின் கீழ் இறுதியாக நாடக்கூடியதாக இருந்த மேன்முறையீட்டு நீதி மன்றமான பிரிவி கவுன்சில் சட்டத்தை நேர்மையாக பிரயோகிக்கத் தவறியது. அந்த நேரத்தில் இலங்கை உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கு இசைவாக செயற்பட்டு பிரிவி கவுன்சில் பிரச்சினையை மழுப்பி அரசியலமைப்பின் 29 வது சரத்தின் பிரயோகத்தை நிராகரித்தது.

ஒரு சமூகத்தின் மீது வேறு எந்தவொரு சமூகத்துக்கும் பிரயோகிக்க முடியாத வசதியீனத்தை பிரயோகிப்பதை அந்த 29 வது சரத்து தடுத்தது. சர்வதேச சட்டத்தின் பிரகாரம் மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்களுக்கான பொறுப்பு சர்வவியாபகமானதும் தேசிய எல்லைகளை கடந்ததுமாகும். மாண்புமிகு மலையக மக்களுக்கான கூட்டமைப்பு பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்திருக்கிறது.

அவர்களின் வரலாறு, போராட்டம் மற்றும் பங்களிப்பு ஆகியவை ஏற்றுக்கொள்ளப்படவேண்டும், சுதந்திரத்துக்கு பின்னரான இலங்கை சமூகத்தின் ஒரு பிரிவினர் என்ற வகையில் ஏனைய பிரதான சமூகங்களுடன் சமத்துவமானவர்களாக தனித்துவமான அடையாளத்துடன் கூடிய சமூகமாக அந்த மக்கள் அங்கீகரிக்கப்படவேண்டும் என்ற கோரிக்கைகளும் அவற்றில் அடங்கும்.

தற்போதைய யதார்த்த நிலைவரங்களின் பின்னணியில் நோக்கும் போது இதன் அர்த்தம் ஏனைய சமூகங்களுடன் சமத்துவமானவர்களாக அவர்கள் வாழ்வதை உறுதிப்படுத்துவதற்கு கல்வி, சுகாதாரம் மற்றும் சமூகப்பாதுகாப்பு தொடர்பில் நேர்மறையான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும்' ஆட்சிமுறையின் சகல அடுக்குகளிலும் பயனுறுதியுடைய பாத்திரத்தை அவர்கள் வகிக்கக்கூடியதாக அதிகாரம் பகிரப்படவேண்டும்' ஏதோ ஒரு வடிவத்தில் அவர்களுக்கு இழப்பீடு வழங்கப்படவேண்டும் என்பதேயாகும்

மாத்தளைக்கு செல்லும் வழியில் வீதியோரங்களில் பல கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன. நாவுலவில் இடம்பெற்ற கலந்துரையாடலில் மலையக தமிழர்கள் நீதிக்கும் இழப்பீட்டுக்கும் தீர்மானம் மேற்கொள்ளும் அதிகாரத்தில் பங்கிற்கும் உரித்துடைய ஒரு சமூகத்தினர் என்ற சிந்தனை வெளிப்பட்டதைக் காணக்கூடியதாக இருந்தது. தங்களுக்கு தேவையானது அனுதாபமோ உதவியோ அல்ல, சமத்துவமான குடிமக்களாக அதாவது ஒரு சமூகத்துக்கு வழங்கப்படுகின்ற நன்மைகள் இன்னொரு சமூகத்துக்கு மறுக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்யக் கூடியதாக உரிமைகளே தேவை என்று மலையக தமிழர்கள் சார்பில் உரையாற்றியவர்கள் வலியுறுத்தினர்.

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Sasitharan Law Professional Corporation
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

### Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

### Family Law
- Divorce
- Custody & Support

### Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

### Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

### Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases



Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

# Serving the Tamil Community
OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

## *At Need Funeral Arrangements*
We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial* • *Cremation*



**Vilosanan Sivatharman**
Funeral Director
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com








# யாழ்.நாகவிகாரையில் குருந்தூர்மலை விவகாரம் தொடர்பாக இந்து - பௌத்த மத குருமார்களுக்கிடையில் கலந்துரையாடல்

குருந்தூர்மலையில் சிவாலயமொன்றை நிறுவ தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பௌத்த இந்து அமைப்புகள் சில கூட்டாக அறிவித்தன. குருந்தூர்மலை விவகாரம் தொடர்பில் 17 ஆகஸ்ட் 2023 வியாழக்



கிழமை யாழ்ப்பாணம் ஆரியகுளம் நாக விகாரையில் தென்னிலங்கை பௌத்த பிக்குகளும், சிவசேனை உள்ளிட்ட சில சைவ அமைப்புக்களின் பிரதிநிதிகள், குருமார்களும் இரகசிய கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

இதன் பின்னர் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே பௌத்த இந்து அமைப்புகள் இதனை அறிவித்தன.

18 ஆகஸ்ட் 2023 இன்றைய தினம் குருந்தூர் மலையில் சைவர்கள் பொங்கலில் ஈடுபடவுள்ள நிலையில் அது தொடர்பாக கலந்துரையாடல் இடம் பெறவில்லை ஊடகவியாலளர்களின் கேள்விக்கு பதிலளித்தனர்.

இதன்போது ஆரியகுளம் நாக விகாராதிபதி, குருந்தூர் மலை விகாராதிபதி, தையிட்டி விகாராதிபதி, நாவற்குழி விகாராதிபதி உள்ளிட்ட சைவ இந்து



அமைப்புகள் பலரும் கலந்து கொண்டனர்.

இதேவேளை குருந்தூர்மலை ஐயனார் கோவிலில் இன்றைய தினம் தமிழர்களின் பொங்கல் நிகழ்வு நடைபெறவுள்ளது. தமிழர்களின் இந்த பொங்கல் வழிபாட்டை தடுக்க சிங்கள பௌத்தர்கள் குருந்தூர் மலை நோக்கி வாருங்கள் என அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.



முல்லைத்தீவு வெலிஓயா பிரதேசத்தில் உள்ள சிங்கள கிராமங்களில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டு சிங்கள பௌத்தர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இது இவ்வாறிருக்க குருந்தூர் மலையில் வெள்ளிக்கிழமை இன்று இந்து மத வழிபாட்டில் ஈடுபட போவதாக தமிழ் அரசியல்வாதிகள் குறிப்பிட்டுள்ளார்கள் எனவே புத்தசாசனத்தை பாதுகாக்க பௌத்தர்கள் குருந்தூர் மலை பகுதியில் ஒன்றிணைய வேண்டும். இந்து பௌத்த மோதலை தடுக்கவும், தமிழ் அடிப்படை வாதிகளை கட்டுப்படுத்தவும் அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என பிவிதுரு ஹெல உருமய கட்சியின் தலை வரும் பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

எதுல்கோட்டை பகுதியில் உள்ள பிவிதுரு ஹெல உருமய கட்சி காரியாலயத்தில் 16 ஆகஸ்ட் 2023 புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவதாக தமிழ் தேசிய கூட்டமைப்பினருக்கு வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அர்ப்பணிப்புடன் செயற்படுகிறார்.

நாட்டில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வாழ்பவர்களுக்கு மாத்திரம் தான் பிரச்சினை உள்ளது என்ற நிலைப்பாட்டில் இருந்துக் கொண்டு ஜனாதிபதி செயற்படுகிறார்.

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்துக்கு அமைய மாகாணங்களுக்கு காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் சிறுபான்மை சமூகமாக வாழும் சிங்களவர்களின் இருப்பு கேள்விக்குள்ளாக்கப்படும்.பௌத்த மரபுரிமைகள் முழுமையாக தமிழ் பிரிவினை வாதிகளால் அழிக்கப்படும்.

2200 ஆண்டுக்கு முன்னர் நிர்மாணிக்கப்பட்ட குருந்தூர் தூபியை இந்து கோயில் என தமிழ் அரசியல்வாதிகள் குறிப்பிடுகிறார்கள். வெள்ளிக்கிழமை குருந்தூர் மலையில் இந்து மத வழிபாட்டில் ஈடுபட போவதாக தமிழ் அரசியல்வாதிகள் குறிப்பிட்டுள்ளார்கள. ஆகவே புத்தசாசனத்தை பாதுகாக்க பௌத்தர்கள் குருந்தூர் மலை பகுதியில் ஒன்றிணைய வேண்டும். குருந்தூர் மலையில் பௌத்த இந்து மோதலை தடுக்கவும்.தமிழ் அடிப்படைவாதிகளை கட்டுப்படுத்தவும் அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.